
July 2025

# தமிழ்

நற்றமிழரின் நாடித்துடிப்பு




VARSHA™
IDLI/DOSA BATTER
Let's eat the Best!
VARSHA
Ready to Cook
Idli / Dosa Wet Mix
CRISPY DOSA • SOFT & FLUFFY IDLI
1Kg
Traditional taste that Lingers

# ஐ தமிழ்

நற்றமிழரின் நாடித்துடிப்பு

**July 2025**

*சுவடி — 15*
*ஓலை — 5*

**வணக்கம் பல**

உலகமே போர்க்கோலம் பூண்டது போன்ற நிலைமையை ஏற்படுத்தி விட்டது மத்திய கிழக்கில் இரு நாடுகளின் இடையேயான போர். அந்நாடுகளின் தாக்குதல்களே தலைப்புச் செய்தியாக மாறியது வரவேற்கத் தக்கதல்ல. அணுசக்தி மையங்களைத் தாக்கியதில் அமெரிக்காவும் கைகோர்த்துக் கொண்டது.

இரான் இப்போரில் தோல்வியடைந்தால், இஸ்ரேலின் செல்வாக்கு மேலும் அதிகரிக்கும். காஸாவை அழித்துவிட்ட நிலையில், அங்கும் தனது செல்வாக்கும் சரிந்துள்ள நிலையில், அதை ஈடுகட்ட ரஷ்யா முயலும் என்பதால், உலகப் போர் ஏற்படக்கூடிய அபாயம் இருப்பதை உணர்ந்தே பல நாடுகள் அச்சம் தெரிவித்தன. போர் மட்டுமே எதற்கும் தீர்வாகாது என்றாலும் கூட, போர் தவிர்க்கவியலாத ஒன்றாக மாறி வருவது மனித குலத்துக்கு எதிராக எழுந்துள்ள பெரும் சவால் என்பதை உணர்ந்து அனைவரும் ஆக்கப்பூர்வமாகச் சிந்திக்க வேண்டும்.

வாழ்க்கை பயணங்களில் அவசரப்பட்டுத் தொலைந்து போய்க் கொண்டிருக்கிறோமோ என்ற நிலை அவசர யுகத்தில் ஏற்பட்டிருக்கிறது. ஒரு சாண் வயிற்றுக்காக ஓடும் வாழ்க்கையானது, வெறும் ஓட்டம் மட்டுமாகவே இருந்து விடக் கூடாது என்பது உணரப்பட வேண்டும்.

15 வயதுக்குட்பட்ட குழந்தைகளுக்கு, சமூகவலைதளப் பயன்பாட்டைத் தடைசெய்யும் முடிவை பிரான்ஸ் அரசு எடுத்துள்ளது மிகவும் வரவேற்கத்தக்கதாகும். இந்த முடிவை அனைத்து நாடுகளும் எடுக்க வேண்டியது காலத்தின் கட்டாயம். பதின்ம வயதினரின் சமூகவலைதளப் பயன்பாட்டுக்கு சரியான தீர்வுகாண முயற்சித்தால், அது எதிர்கால நலனுக்குச் செய்யும் முன்னேர். உழைத்த களைப்பைப் போக்கிக் கொள்ள காலம்காலமாக நம் வாழ்வோடு பின்னிப் பிணைந்தாக இருக்கிறது கேளிக்கைகள். இது அவசியமானது தான். ஆனால், அதுவே இணைய வழி வரும்போது, தீங்காகிப் போகிறது.

இயற்கை இன்பம், மனித மனதுக்கு உகந்தது. நல்ல மனங்களின் செயல்களே, ஒவ்வொருவரும் பூரித்து மகிழும் தன்மை கொண்டது. மனிதன் தன்னை உணர்ந்து, உடலும், மனமும் உண்மையான இன்பத்தை அடைவதற்கு திருமூலர் காட்டிய யோக நெறி நவீன உலகத்தின் தலையாயத் தேவையாக மாறிவருவது கண்கூடு. இதுபோன்ற நல்ல பல ஆக்கங்களுடன், கதை, கவிதை, கலை என மலர்கிற இம்மாத ‘அய் தமிழ்’ இதழை, வழமை போலவே வரவேற்று வாசியுங்கள்... நேசியுங்கள்...

நேசப்பகிர்தலுடன்

**ஆசிரியர் குழு**

*(பொறுப்பு துறப்பு: இதழில் வெளியாகும் படைப்புகள் அனைத்தும் படைப்பாளரின் பெருமைக்கும் பொறுப்புக்கும் உரியது. படைப்புக்கள் யாவும் படைப்பாளிகளின் கருத்துக்களே. அதற்கு எவ்வகையிலும் அய் தமிழ் பொறுப்பேற்காது.)*

## உள்ளே...




ஆணவப் போர்
மதம் தாண்டி !
தமிழே தமிழே
சுரண்டல் விளையாட்டு
சேரமான் கனவு
தல வலம்
அறிவோம் தமிழர் பெருமை
சிவகாமியின் சபதம்
மருத்துவ தமிழ்
பயணம் தரும் பாடம்



**IThamil Monthly Magazine**

**Chief Editor & Publisher**
Sivanesan

**Editor**
Khottravan

**Editorial Team**
Ganesan
Navani
Shanthakumar

**Art Editor**
Sriram

**Art & Marketing Director**
Jaya

**Printers**
Kanagam Pathippagam

**Contact us:**
*editor@ithamil.com*

# ஆணவப்


## இஸ்ரேல் – இரான் மோதல் எவ்வாறு தொடங்கியது? அடுத்த கட்டம் என்ன?

இஸ்ரேல் மற்றும் இரான் இடையேயான மிகச் சமீபத்திய மோதலில், இரு நாடுகளும் மாறி மாறி தாக்குதல்களை நடத்தி வருகின்றன. இரு தரப்பிலிருந்தும் கோபமான வார்த்தைப் பிரயோகங்கள் எழுந்துள்ளன. அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்ப் இப்போது இரானின் அணுசக்தி தளங்கள் மீதான இஸ்ரேலின் தாக்குதல்களில் அமெரிக்காவும் இணையலாமா என்று பரிசீலித்து வருகிறார்.

இரானில் உள்ள அணுசக்தி மற்றும் ராணுவ தளங்களை இஸ்ரேல் தாக்கியபோது இது தொடங்கியது, பின்னர் இரான் இஸ்ரேலை குறிவைத்து வான்வழித் தாக்குதல்களால் பதிலடி கொடுத்தது. இரானின் சுகாதார அமைச்சகத்தின்படி, இதுவரை இஸ்ரேலிய தாக்குதல்களில் 220க்கும் மேற்பட்டோர் கொல்லப்பட்டுள்ளனர். அதே நேரத்தில் இரானிய தாக்குதல்களில் 24 பேர் கொல்லப்பட்டுள்ளதாக இஸ்ரேல் கூறுகிறது.

இஸ்ரேலின் ஆபரேஷன் ரைசிங் லயன்

ஜூன் 12, இஸ்ரேல் பாதுகாப்புப் படைகள், டெஹ்ரானின் மாவட்டம் 18இல் உள்ள மக்களை வெளியேறுமாறு கூறியது. இதில் ராணுவ கட்டடங்கள் மற்றும் குடியிருப்பு பகுதிகள் அடங்கும். சில மணி நேரத்திற்குப் பிறகு, வெள்ளிக்கிழமை உள்ளூர் நேரப்படி அதிகாலை 03:30 மணிக்கு டெஹ்ரானில் முதல் தாக்குதல்கள் நடந்ததாக இரானிய அரசு தொலைக்காட்சி தெரிவித்துள்ளது.அந்நாட்டு அரசாங்கத்தின் கட்டுப்பாடுகள் காரணமாக பிபிசி பத்திரிகையாளர்களால் இரானில் இருந்து செய்திகளை சேகரிக்க முடியாது என்பதால், இஸ்ரேலின் தாக்குதலால் ஏற்பட்ட சேதத்தை மதிப்பிடுவது கடினமாக உள்ளது.




டெஹ்ரானுக்கு தெற்கே சுமார் 225 கி.மீ (140 மைல்) தொலைவில் உள்ள நடான்ஸ் அணுசக்தி நிலையத்தை இஸ்ரேல் குறிவைத்து தாக்குதல் நடத்தியது, இதனால் குறிப்பிடத்தக்க சேதம் ஏற்பட்டதாக இஸ்ரேல் பாதுகாப்புப் படைகள் தெரிவித்தன. ஆபரேஷன் ரைசிங் லயன் என்று அழைக்கப்படும் இந்தத் தாக்குதல் இரானின் அணுசக்தித் திட்டத்தின் 'இதயத்தை' குறிவைத்து நடத்தப்பட்டதாக இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு கூறினார்.

"இரானின் செயல்பாடுகள் தடுத்து நிறுத்தப்படாவிட்டால், இரானால் மிகக் குறுகிய

# போர்

காலத்தில் அணு ஆயுதத்தை உற்பத்தி செய்ய முடியும்" என்று நெதன்யாகு கூறினார். இரான் தனது அணுசக்தித் திட்டம் ஆக்கப்பூர்வமானது என்று வலியுறுத்துகிறது. இரானின் அதி உயர் தலைவர் ஆயதுல்லா அலி காமனேயி, "இஸ்ரேல், இதற்கு ஒரு கடுமையான தண்டனையை எதிர்பார்க்க வேண்டும்" என்று கூறினார். இரானின் வெளியுறவு அமைச்சர் இஸ்ரேலின் தாக்குதல்களை 'போர் பிரகடனம்' என்று அழைத்தார்.




சில மணி நேரங்களுக்குப் பிறகு, இஸ்ரேலில் உள்ள பல்வேறு இலக்குகள், ராணுவ மையங்கள் மற்றும் விமான தளங்கள் மீது பாலிஸ்டிக் ஏவுகணைத் தாக்குதல்களை நடத்தி, இரான் தனது பதிலடியைத் தொடங்கியது. இந்தத் தாக்குதல் 'ட்ரூ ப்ராமிஸ் 3' என்று அழைக்கப்பட்டது. இஸ்ரேலை நோக்கி சுமார் 100 ஏவுகணைகள் ஏவப்பட்டதாகவும், அவற்றில் பெரும்பாலானவை இஸ்ரேலின் இரும்பு டோம் அமைப்பால் இடைமறிக்கப்பட்டதாகவும் ஐடிஎஃப் தெரிவித்துள்ளது. இத்தகைய பதிலுக்கு பதில் தாக்குதல்கள் பல நாட்களாகத் தொடர்கின்றன. இருப்பினும், இரானிய தாக்குதல்களின் அளவு சமீபத்தில் குறைந்துள்ளது. இது இஸ்ரேலிய தாக்குதல்கள் இரானின் ராணுவத்தில் ஏற்படுத்திய தாக்கத்தைக் குறிக்கலாம் என்று பிபிசியின் ஹ்யூகோ பச்சேகா தெரிவிக்கிறார். இஸ்ரேலின் தாக்குதல்களில் இரானின் இஸ்லாமிய புரட்சிகர காவல்படையின் தளபதி ஹொசைன் சலாமி உள்பட பல உயர்மட்ட இரானிய அதிகாரிகளும், இரானின் அணுசக்தி அமைப்பின் முன்னாள் தலைவர் ஃபெரேடூன் அப்பாஸி உள்பட பல அணு விஞ்ஞானிகளும் கொல்லப்பட்டனர். ராணுவத்தினர் குழந்தைகள் உள்பட பொதுமக்களும் கொல்லப்பட்டதாக இரான் தெரிவித்துள்ளது.

இரானின் டிரோன் மற்றும் ஏவுகணை தளங்கள் மீது பல கட்டங்களாக தாக்குதல்களை நடத்தியதாகவும், டெல் அவிவ் மற்றும் வடக்கு இஸ்ரேலை இலக்காகக் கொண்ட ஏவுகணைகளின் தாக்குதலை இடைமறித்ததாகவும் ஐடிஎஃப் தெரிவித்துள்ளது. இஸ்ரேலிய பாதுகாப்பு நிறுவல்களை குறிவைத்து தாக்குதல்களை மேற்கொண்டதாக இரானியப் படைகள் தெரிவித்தன, மேலும் முக்கிய இஸ்ரேலிய



காட்டி, பிபிசியின் அமெரிக்க கூட்டுச் செய்தி நிறுவனமான சிபிஎஸ் நியூஸ் செய்தி வெளியிட்டுள்ளது. அமெரிக்க தேசிய பாதுகாப்பு கவுன்சிலின் கூட்டத்திற்குப் பிறகு டிரம்பும் நெதன்யாகுவும் தொலைபேசியில் பேசினர். இரானின் ‘நிபந்தனையற்ற சரணடைதல்’ குறித்து அமெரிக்க அதிபர் முன்னதாக சமூக ஊடகங்களில் அழைப்பு விடுத்திருந்தார், மேலும் இரானின் ஆயதுல்லா அலி காமனேயி எங்கே இருக்கிறார் என்பது அமெரிக்காவிற்கு தெரியும், ஆனால் ‘இப்போதைக்கு’ அமெரிக்கா அவரைக் கொல்லாது என்றும் கூறினார்.இரான் தலைவரைக் கொல்ல இஸ்ரேல் வைத்திருந்த திட்டத்தை டிரம்ப் நிராகரித்ததாக ஜூன் 15 அன்று வெளியான செய்திகளைத் தொடர்ந்து இந்த அறிவிப்புகள் வெளியாகின. இதற்கு பதிலாக, அமெரிக்க ராணுவம் இந்த மோதலில் தலையிட்டால் ‘சரிசெய்ய முடியாத அளவுக்கு பேரழிவு’ ஏற்படும் என்று காமனேயி டிரம்பை எச்சரித்தார்.

நகரங்களில் வசிக்கும் மக்களை வெளியேறுமாறு வலியுறுத்தியுள்ளன.

டெஹ்ரானில், இரான் அரசு செய்தி முகமையின் கட்டடம் தாக்கப்பட்டபோது, தொகுப்பாளர் ஒருவர் ஒளிபரப்பின் நடுவிலேயே ஸ்டுடியோவை விட்டு தப்பி ஓடவேண்டிய சூழல் ஏற்பட்டதாகவும், இந்தத் தாக்குதலில் மூன்று ஊழியர்கள் கொல்லப்பட்டதாகவும் இரானிய ஊடகங்கள் தெரிவித்தன.ஜூன் 17, இஸ்ரேலிய ராணுவம் டெஹ்ரானின் முழு வான்பரப்பு தங்கள் கட்டுப்பாட்டில் வந்துவிட்டதாகவும், இரானின் ஏவுகணை லாஞ்சர்களில் மூன்றில் ஒரு பகுதியை அழித்ததாகவும் அறிவித்தது. வடக்கு மற்றும் மத்திய இஸ்ரேலின் நான்கு வெவ்வேறு இடங்களில் இரானிய ஏவுகணைகள் தாக்கியதில் குறைந்தது எட்டு பொதுமக்கள் கொல்லப்பட்டதாக ராணுவம் தெரிவித்ததைத் தொடர்ந்து இந்த அறிவிப்பு வெளியானது. ஜூன் 13, முதல் குறைந்தது 224 பேர் இஸ்ரேல் தாக்குதல்களில் கொல்லப்பட்டதாக இரானின் சுகாதார அமைச்சகம் தெரிவித்துள்ளது. அதே சமயம், இஸ்ரேல் 24 இறப்புகளைப் பதிவு செய்துள்ளது. உயிரிழந்தவர்கள் டெல் அவிவ், ஹைஃபா, தம்ரா, ரிஷோன் லெசியோன் மற்றும் பேட் யாம் ஆகிய இடங்களில் இருந்தனர், குறிப்பாக பேட் யாம் பகுதியில் 10 மாடி குடியிருப்பு ஒன்று தாக்கப்பட்டது.

இரானிய அணுசக்தி தளங்களை குறிவைக்கும் இஸ்ரேலின் நடவடிக்கைகளில் இணைவது குறித்து அமெரிக்க அதிபர் டிரம்ப் பரிசீலித்து வருவதாக, அதிகாரிகள் கூறியதை மேற்கோள்

ஜி—7 உச்சிமாநாட்டிலிருந்து முன்னதாகவே வெளியேறிய டிரம்ப்,ஏர் ஃபோர்ஸ் ஒன் விமானத்தில் புறப்படுவதற்கு முன் செய்தியாளர்களிடம் பேசினார். அப்போது, ‘ஒரு போர் நிறுத்தத்தை ஏற்படுத்த வாஷிங்டனுக்கு தான் திரும்பச் செல்லவில்லை என்றும், போர் நிறுத்தத்தை விட சிறந்த ஒன்றை தான் விரும்புவதாகவும்‘ கூறினார். ‘ஒரு உண்மையான முடிவு வேண்டும்‘ என்று விவரித்த டிரம்ப், அதில் ‘முழுமையான சரணடைதலும்‘ அடங்கும் என்றார். அணுசக்தி திட்டம் தொடர்பான ஒரு புதிய ஒப்பந்தம் குறித்த பேச்சுவார்த்தைகளில் இரான் அமெரிக்காவுடன் முழுமையாக ஒத்துழைக்கவில்லை என்று டிரம்ப் முன்னர் குற்றம் சாட்டியிருந்தார். இந்த புதிய ஒப்பந்தம் இரானின் அணுசக்தி திட்டத்தில் கடுமையான கட்டுப்பாடுகளை விதிப்பதை நோக்கமாக கொண்டது. அமெரிக்காவிற்கும் இரானுக்கும் இடையிலான புதிய சந்திப்பு திட்டமிடப்பட்டிருந்தது. ஆனால் இஸ்ரேலிய தாக்குதல்களுக்குப் பிறகு அது ரத்து செய்யப்பட்டது.




## மோதல் இந்தக் கட்டத்தை எட்டியது எப்படி?

நடத்தப்பட்ட தாக்குதல்கள் ‘இஸ்ரேலின் இருப்புக்கு எதிரான இரானிய அச்சுறுத்தலை முறியடிப்பதற்கான, திட்டமிடப்பட்ட ஒரு ராணுவ நடவடிக்கை” என்று நெதன்யாகு கூறினார். இந்த அச்சுறுத்தலை முழுமையாக ஒழிக்கும்வரை இஸ்ரேலின் நடவடிக்கை பல நாட்களுக்கு தொடரும் என்றும் அவர் கூறினார். இஸ்ரேலிய ராணுவ அதிகாரி ஒருவர், “இரானிடம் சில நாட்களுக்குள் அணு குண்டுகளை உருவாக்கும் அளவிற்கு போதுமான அணுசக்தி பொருட்கள் இருப்பதாக” தெரிவித்தார். ஆனால், தாங்கள் ஒருபோதும் அணு ஆயுதத்தை உருவாக்க முயற்சிக்கவில்லை என்றும், தங்களது அணுசக்தி நடவடிக்கைகள் அமைதிக்கானவை என்றும் இரான் கூறியுள்ளது.ஏப்ரலில் தொடங்கிய இரானின் அணுசக்தி திட்டம் குறித்த அமெரிக்க பேச்சுவார்த்தைகள் முடங்கியதாகத் தோன்றிய சமயத்தில், இந்தத் தாக்குதல்கள் ஆரம்பித்தன. அணு ஆயுதத்தை உருவாக்குவதிலிருந்து இரானை தடுக்கும் வகையில் ஒரு ஒப்பந்தத்தை எட்ட முடியும் என்று டிரம்ப் நம்பினார், ஆனால் சமீபத்திய தாக்குதல்களின் காரணமாக, திட்டமிடப்பட்டிருந்த பேச்சுவார்த்தைகள் ரத்து செய்யப்பட்டன.

கடந்த ஆண்டு,இரானும் இஸ்ரேலும் ஏப்ரல் மற்றும் அக்டோபர் மாதங்களில் ஒன்றுக்கொன்று எதிராக பல வான்வழித் தாக்குதல்களைத் தொடங்கின. இருப்பினும், கடந்த ஆண்டின் இஸ்ரேலிய தாக்குதல்கள், தற்போதைய தாக்குதல்கள் அளவுக்கு விரிவானதாக கருதப்படவில்லை.

## இரானின் அணுசக்தி திட்டம்

இரான் நீண்ட காலமாக தனது அணுசக்தி திட்டம் அமைதிக்கானது மற்றும் பொதுமக்கள் நலன்களுக்காக மட்டுமே என்ற பதிலையே தொடர்ந்து கூறி வருகிறது. இரானை சுற்றி பல அணுசக்தி வசதிகள் உள்ளன, அவற்றில் சில இஸ்ரேலிய தாக்குதல்களில் குறிவைக்கப்பட்டுள்ளன. ஆனால் பல நாடுகளும், உலகளாவிய அணுசக்தி கண்காணிப்பு அமைப்பான மிகிணிகி—வும் (ஐஏஇஏ) இந்த அணுசக்தி திட்டம் பொதுமக்களுக்கானது மட்டுமே என்பதை நம்பவில்லை.இரண்டு ஆண்டுகளில் முதல் முறையாக, கண்காணிப்புக் குழுவின் ஆளுநர் குழு ஜூன் மாத தொடக்கத்தில் இரான் அதன் அணு ஆயுதப் பரவல் தடை உறுதிமொழிகளை மீறியதாக முறையாக அறிவித்தது. அறிவிக்கப்படாத அணுசக்தி பொருட்கள் மற்றும் அதன் செறிவூட்டப்பட்ட யுரேனியத்தின் இருப்பு பற்றிய முழுமையான பதில்களை வழங்குவதில் இரானின் ‘பல தோல்விகளை’ அது மேற்கோள் காட்டியது.

முந்தைய ஐஏஇஏ அறிக்கை, இரான் யுரேனியத்தை 60% தூய்மைக்கு, ஆயுத தரத்திற்கு நெருக்கமாக செறிவூட்டியதாகவும், ஒன்பது அணுகுண்டுகளை தயாரிக்கும் திறனைக் கொண்டிருப்பதாகவும் கூறியது.ஈரானின் மூன்று அணு ஆயுத கட்டமைப்புகளை அமெரிக்காவின் பங்கர் பஸ்டர் குண்டுகள் முழுமையாகத் தாக்கி அழிக்கவில்லை என உளவுத்துறையின் பரபரப்பு தகவல்கள் வெளியாகியுள்ளன. மத்திய கிழக்கில் கடந்த 13 ஆம் தேதி தொடங்கிய இஸ்ரேல் — ஈரான் இடையிலான போர் 12 நாள்களுக்குப் பின்னர் முடிவுக்கு வந்ததாக அமெரிக்க அதிபர் டிரம்ப் ஜூன் 25 அறிவித்தார்.

இந்த நிலையில், இஸ்ரேலுக்கு ஆதரவாக ஈரானில் உள்ள 3 அணுசக்தி தளவாடங்களை பங்கர் பஸ்டர் குண்டுகளை போட்டு அழித்ததாக அமெரிக்கா தெரிவித்திருந்தது. இதனைத்தொடர்ந்து பாதுகாப்பு புலனாய்வு அமைப்பு வெளியிட்டுள்ள அறிக்கையில், ஈரானில் உள்ள அணுசக்தி தளவாடங்கள் முழுமையாக அழிக்கப்படவில்லை என்ற பரபரப்பு தகவல்கள் வெளியாகியிருக்கின்றன.




மேலும், இந்தத் தாக்குதலால் ஈரானுக்கு சில பின்னடைவை மட்டுமே கொடுக்க முடியும் என்றும் அறிக்கையில் கூறப்பட்டிருக்கிறது.அமெரிக்க வான்வழித் தாக்குதல்கள் ஈரானின் அணுசக்தி திட்டத்தை முற்றிலும் அழித்துவிட்டன என்பதைச் சந்தேகிக்கும் கூற்றுக்கு அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்பும் வெள்ளை மாளிகையும் கடுமையாக எதிர்த்துள்ளன. ஜூன் 22 ஆம் தேதி ஈரானின் ஃபோர்டோ, நடான்ஸ் மற்றும் இஸ்ஃபஹான் ஆகிய அணுசக்தி கட்டமைப்புகளில் ஓரளவு சேதத்தை ஏற்படுத்தியிருந்தாலும், இந்தத் தாக்குதலுக்குப் பிறகும் ஈரானின் கட்டமைப்புகள் பெரும்பாலும் அப்படியே இருப்பதாகவும், நிலத்தடிக்கு மேலே உள்ள கட்டமைப்புகள் மட்டுமே சேதமடைந்ததுள்ளன.

சில உள்கட்டமைப்புகள் அழிக்கப்பட்டிருந்தாலும், நிலத்தடியில் ஆழமாக உள்ள பெரும்பாலான கட்டமைப்புகள் அப்படியே உள்ளன என பென்டகனின் தகவலறிந்த வட்டாரங்கள் கூறுகின்றன. இது அமெரிக்க அதிபர் டிரம்ப் மற்றும் இஸ்ரேலிய பிரதமர் நெதன்யாகுவின் பேச்சுக்கு முரணாகவுள்ளது. இந்தக் கருத்துக்கு மறுப்பு தெரிவித்து ட்ரூத் சோஷியல் பக்கத்தில் அதிபர் டிரம்ப் வெளியிட்டுள்ள ஒரு பதிவில், “அந்த அறிக்கை போலியானது. வரலாற்றில் மிகவும் வெற்றிகரமான ராணுவத் தாக்குதல்களில் ஒன்றை இழிவுபடுத்தும் முயற்சி இது. ஈரானில் உள்ள அணுசக்தி தளங்கள் முற்றிலுமாக அழிக்கப்பட்டுள்ளன!” எனப் பதிவிட்டுள்ளார்.

வெள்ளை மாளிகையின் பத்திரிகைச் செயலர் கரோலின் லீவிட் கூறுகையில், “அறிக்கை முற்றிலும் தவறான ஒன்று. ஈரானின் அணுசக்தி திட்டத்தை அழிக்க மேற்கொண்ட துணிச்சலான போர் விமானிகளை இழிவுபடுத்தும் முயற்சியாகும். நீங்கள் 14 குண்டுகளை (13,000 கிலோ எடையுடன் உள்ள குண்டுகள்) இலக்குகளை நோக்கித் தாக்கும்போது என்ன நடக்கும் என்பது அனைவருக்கும் தெரியும்” என்றார்.

உளவுத்துறையுடன் நெருக்கமாக இருக்கும் தகவலறிந்த இருவர் இந்தத் தாக்குதல் குறித்து கூறும்போது, “அமெரிக்காவின் தாக்குதலை ஈரானும் எதிர்பார்த்திருக்கலாம். ஈரானின் 60 சதவிகித செறிவூட்டப்பட்ட யுரேனியத்தை வேறு இடத்திற்கு மாற்றியிருக்கலாம்” என்றும் கூறினர்.

அமெரிக்கா நடத்திய தாக்குதல்களுக்கு சில நாள்களுக்கு முன்பாக யுரேனியத்தை பாதுகாப்பான இடங்களுக்குக் கொண்டுசெல்ல லாரிகள் பயன்படுத்தப்பட்டது செயற்கைக்கோள் படங்களின் அடிப்படையில் உறுதி செய்யப்பட்டுள்ளது.இருப்பினும், அதிபர் டொனால்ட் டிரம்ப் தரப்பில் இதற்கு மறுப்பு தெரிவிக்கப்பட்ட நிலையில், டிரம்ப்பின் சிறப்புத் தூதர் ஸ்டீவ் விட்காஃப், பாதுகாப்பு புலனாய்வு அமைப்பு வெளியிட்டுள்ள அறிக்கை ‘தேசத்துரோகம்’ என்று கூறியுள்ளார்.

இரானின் அணுசக்தி திட்டம் “அழிக்கப்பட்டுவிட்டது” என்ற டிரம்ப் நிர்வாகத்தின் கூற்றுகளில் அமெரிக்காவின் தாக்குதல் குறித்த பென்டகன் உளவுத்துறையின் ஆரம்பகால மதிப்பீடு சந்தேகம் எழுப்பியுள்ளதாக செய்திகள் வெளியாகியுள்ளன.இரானில் உள்ள ஃபோர்டோ, நடான்ஸ் மற்றும் இஸ்ஃபஹான் ஆகிய 3 அணுசக்தி நிலையங்களை “பதுங்கு குழி” குண்டுகள் மூலம் அமெரிக்கா தாக்கியது. இந்த தாக்குதலுக்குப் பிறகும் இரானின் சென்ட்ரிஃபியூஜ் கட்டமைப்புகள் பெரும்பாலும் “அப்படியே” இருப்பதாகவும், நிலத்தடிக்கு மேலே உள்ள கட்டமைப்புகள் மட்டுமே சேதமடைந்ததாகவும் பென்டகன் மதிப்பீடு பற்றி நன்கு அறிந்த வட்டாரங்கள் கூறுகின்றன.“இரண்டு அணுசக்தி நிலையங்களுக்கான நுழைவு வாயில்கள் சீல்




வைக்கப்பட்டுவிட்டன, சில உள்கட்டமைப்புகள் அழிக்கப்பட்டன அல்லது சேதமடைந்தன, ஆனால் நிலத்தடியில் ஆழமாக உள்ள பெரும்பாலான கட்டமைப்புகள் அப்படியே உள்ளன." என்று அந்த வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இந்த தாக்குதல் இரான் அணுசக்தி திட்டத்தை "சில மாதங்கள்" பின்னுக்குத் தள்ளியதாக மதிப்பிடப்பட்டுள்ளதாகவும், இரான் தனது அணுசக்தி திட்டத்தை மீண்டும் தொடங்குவது, சேதங்களை சரி செய்ய எவ்வளவு நேரம் எடுக்கும் என்பதைப் பொருத்தது என்றும் அமெரிக்க ஊடகங்களுக்கு பெயர் குறிப்பிட விரும்பாத அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். இரான் கையிருப்பில் இருந்த செறிவூட்டப்பட்ட யுரேனியத்தின் ஒரு பகுதி தாக்குதல்களுக்கு முன்னரே வேறு இடங்களுக்கு நகர்த்தப்பட்டுவிட்டதாக பிபிசியின் அமெரிக்க கூட்டாளியான சிபிஎஸ்ஸிடம் உளவுத்துறை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

தனது ட்ரூத் சோஷியல் பக்கத்தில் பதிவிட்ட டிரம்ப், அமெரிக்க ஊடகங்களையும் மற்றும் அவர்கள் வெளியிட்ட தகவல்களையும் கடுமையாக சாடியுள்ளார்.இஸ்ரேலும் இரானும் முழுமையான சண்டை நிறுத்தத்துக்கு ஒப்புக் கொண்டிருப்பதாக அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்ப் தெரிவித்துள்ளார். இஸ்ரேலும் இரானும் கிட்டத்தட்ட ஒரே நேரத்தில் தன்னிடம் வந்து, 'சமாதானம்' வேண்டி நின்றதாக அவர் கூறியுள்ளார். அதேநேரத்தில், இரான் அரசுத் தொலைக்காட்சியோ, சண்டை நிறுத்தத்துக்காக டிரம்ப் தங்களிடம் கெஞ்சியதாக கூறியுள்ளது.

எந்தவொரு சண்டை நிறுத்தம் அல்லது இராணுவ நடவடிக்கைகளை நிறுத்துவது குறித்து எந்த "ஒப்பந்தமும்" இல்லை என்று கூறியுள்ள இரான் வெளியுறவு அமைச்சர் சையத் அப்பாஸ், இஸ்ரேல் தாக்குதல்களை நிறுத்தினால், 'எங்களுக்கு பதிலடி கொடுக்கும் திட்டம் இல்லை' என்று தெரிவித்துள்ளார். சண்டை நிறுத்தம் எட்டப்பட்டுள்ளதா என்று இஸ்ரேலும் இரானும் இன்னும் அதிகாரப்பூர்வமாக உறுதிப்படுத்தவில்லை. மத்திய கிழக்கில் என்ன நடக்கிறது? சண்டை நிறுத்தத்துக்கு முதலில் அழைத்தது யார்?

இஸ்ரேலும் இரானும் கிட்டத்தட்ட ஒரே நேரத்தில் தன்னிடம் வந்து, 'சமாதானம்' ஏற்பட வேண்டும் என்று கூறியதாக அமெரிக்க அதிபர் டிரம்ப் தெரிவித்துள்ளார். அந்த கட்டத்தில், "அதற்கான நேரம் இது என்று எனக்குத் தெரியும்" என்று அவர் தனது ட்ரூத் சமூக ஊடக பக்கத்தில் குறிப்பிட்டுள்ளார். முன்பே அறிவித்த சண்டை நிறுத்தத்தைப் பற்றிக் குறிப்பிட்டுள்ள அவர், "உலகமும் மத்திய கிழக்கு நாடுகளும் உண்மையான வெற்றியாளர்கள். இரு நாடுகளும் தங்கள் எதிர்காலத்தில் மிகப்பெரிய அன்பு, அமைதி மற்றும் செழிப்பைக் காணும்" என்று தெரிவித்துள்ளார்.இரானும் இஸ்ரேலும் சண்டை நிறுத்தத்தை பகிரங்கமாக இன்னும் ஏற்றுக்கொள்ளவில்லை, இருப்பினும் இஸ்ரேல் தாக்குதலை நிறுத்தினால் தாங்களும் சண்டையை நிறுத்துவோம் என்று இரான் சமிக்ஞை செய்தது."இரு நாடுகளும் பெறுவதற்கு நிறைய இருக்கிறது, ஆனால், நீதி மற்றும் உண்மையின் பாதையில் இருந்து விலகிச் சென்றால் இழக்க நிறைய இருக்கிறது" என்றும், இஸ்ரேல் மற்றும் இரானின் எதிர்காலம் "வரம்பற்றது மற்றும் பெரிய வாக்குறுதிகளால் நிரம்பியுள்ளது. கடவுள் உங்கள் இருவரையும் ஆசீர்வதிப்பாராக!" என்றும் டிரம்ப் தனது பதிவில் குறிப்பிட்டுள்ளார்.




கத்தாரில் உள்ள அமெரிக்க ராணுவ தளத்தின் மீதான “வெற்றிகரமான” தாக்குதலைத் தொடர்ந்து இஸ்ரேல் மீது சண்டை நிறுத்தம் திணிக்கப்பட்டிருப்பதாகவும், இரானின் தாக்குதலைத் தொடர்ந்து டிரம்ப் சண்டை நிறுத்தத்துக்காக “கெஞ்சினார்” என்றும் அரசு தொலைக்காட்சி ஒரு செய்தி அறிக்கையில் தெரிவித்துள்ளது. இந்த குறிப்பிட்ட அறிக்கையை தொகுப்பாளர் சத்தமாக வாசித்தார்.

இரானின் இஸ்லாமிய புரட்சிகர காவல்படை மற்றும் இராணுவத்தை இந்த அறிக்கை பாராட்டியதுடன் இரானியர்களின் “எதிர்ப்பையும்“ பாராட்டியது. முன்னதாக, இஸ்ரேலும் இரானும் முழுமையான சண்டை நிறுத்தத்துக்கு ஒப்புக் கொண்டிருப்பதாக அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்ப் தெரிவித்திருந்தார். “இப்போதிலிருந்து சுமார் ஆறு மணி நேரத்தில்” சண்டை நிறுத்தம் தொடங்கும் என்று அவர் தனது சமூக ஊடக பக்கத்தில் குறிப்பிட்டுள்ளார். டிரம்ப் அறிவிப்பில் பரஸ்பர பகைமை குறித்த தகவல்கள் இருந்தாலும், “24 வது மணி நேரத்தில்” மோதல் அதிகாரப்பூர்வமாக முடிவடையும் என்று கூறப்பட்டுள்ளது.“எல்லாம் சரியாக நடக்கும் என்ற அனுமானத்தின் அடிப்படையில், இரு நாடுகளையும் நான் வாழ்த்த விரும்புகிறேன்.” என்று கூறியுள்ள டிரம்ப், இந்த இஸ்ரேல்—இரான் மோதலை “12 நாள் போர்” என்று குறிப்பிட்டுள்ளார். “இது பல ஆண்டுகள் நீடித்து, முழு மத்திய கிழக்கு பிராந்தியத்திலும் பேரழிவை ஏற்படுத்தியிருக்கக் கூடிய ஒரு போர், ஆனால் அது நடக்கவில்லை, ஒருபோதும் நடக்காது!” என்று டிரம்ப் தனது பதிவில் தெரிவித்துள்ளார்.

சண்டை நிறுத்தம் எட்டப்பட்டுள்ளதா என்று இஸ்ரேலும் இரானும் இன்னும் அதிகாரப்பூர்வமாக உறுதிப்படுத்தவில்லை. ‘சண்டை நிறுத்தத்துக்கு கத்தார் உதவியது’கத்தார் பிரதமர் ஷேக் முகமது பின் அப்துல்ரஹ்மான் அல் தானி, இரான் — இஸ்ரேல் இடையே சண்டை நிறுத்த ஒப்பந்தம் ஏற்பட உதவினார் என்று பேச்சுவார்த்தைகளில் ஈடுபட்ட அதிகாரிகள் அமெரிக்க ஊடகங்களிடம் தெரிவித்தனர். பெயர் குறிப்பிடப்படாத அதிகாரிகளின் கூற்றுப்படி, கத்தார் உட்பட பிராந்தியத்தில் உள்ள அமெரிக்க இராணுவ தளங்களை இரான் தாக்கிய பின்னர், இரானிய அதிகாரிகளுடன் தொலைபேசியில் பேசிய போது சண்டை நிறுத்தம் பற்றி அமெரிக்கா தரப்பில் முன்மொழியப்பட்டது. இதில் கத்தாரும் முக்கிய பங்கு வகித்தது.

இஸ்ரேலும் இரானும் போர் நிறுத்தத்துக்கு ஒப்புக்கொண்டதாக பிபிசியின் அமெரிக்க செய்தி கூட்டாளியான சிபிஎஸ்ஸிடம் வெள்ளை மாளிகையின் மூத்த அதிகாரி ஒருவர் கூறியுள்ளார். ஆனால் இரு தரப்பினரும் முறையான அல்லது பொது பதிலை வெளியிடவில்லை. அவரது கூற்றுப்படி, இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகுவை டிரம்ப் நேரடியாக தொடர்பு கொண்டார். இரான் இனிமேல் தாக்குதல் நடத்தாத பட்சத்தில் சண்டை நிறுத்தத்துக்கு தயார் என்று நெதன்யாகு ஒப்புக் கொண்டார் என்று சிபிஎஸ் செய்தி கூறுகிறது. அந்த செய்தியின் படி, இரான் சண்டை நிறுத்தத்துக்கு ஒப்புக்கொண்டதாக மூத்த இரானிய அதிகாரிகளும் உறுதிப்படுத்தியுள்ளனர்.

அமெரிக்க துணை அதிபர் ஜே.டி. வான்ஸ், வெளியுறவுச் செயலாளர் மார்கோ ரூபியோ மற்றும் சிறப்பு தூதர் ஸ்டீவ் விட்காஃப் ஆகியோர் இரானியர்களுடன் நேரடி மற்றும் மறைமுக வழிகள் மூலம் தொடர்பு கொண்ட பிறகு சண்டை நிறுத்தம் ஏற்பட்டதாக அந்த மூத்த அதிகாரி கூறியுள்ளார்.இஸ்ரேல் தாக்குதல்களை நிறுத்தினால், ‘எங்களுக்கு பதிலடி கொடுக்கும் திட்டம் இல்லை’ என்று இரான் வெளியுறவு




அமைச்சர் சையத் அப்பாஸ் கூறியுள்ளார்.

“இரான் பலமுறை தெளிவுபடுத்தியது போல, இஸ்ரேல்தான் இரான் மீது போரை தொடங்கியது, மாறாக நாங்கள் அல்ல. தற்போது, எந்தவொரு சண்டை நிறுத்தம் அல்லது இராணுவ நடவடிக்கைகளை நிறுத்துவது குறித்து எந்த “ஒப்பந்தமும்“ இல்லை. இருப்பினும், இஸ்ரேலிய ஆட்சி இரானிய மக்களுக்கு எதிரான அதன் சட்டவிரோத ராணுவ நடவடிக்கைகளை டெஹ்ரான் நேரப்படி அதிகாலை 4 மணிக்குள் நிறுத்தினால், அதன் பிறகு எங்கள் பதிலடியைத் தொடர எங்களுக்கு எந்த நோக்கமும் இல்லை. எங்கள் இராணுவ நடவடிக்கைகளை நிறுத்துவது குறித்த இறுதி முடிவு பின்னர் எடுக்கப்படும். இஸ்ரேலுக்கு பதிலடி கொடுக்க நமது சக்தி வாய்ந்த ஆயுதப் படைகளின் இராணுவ நடவடிக்கைகள் கடைசி நிமிடம் வரை, அதாவது அதிகாலை 4 மணி வரை தொடர்ந்தன,” என்று சையத் அப்பாஸ் தனது எக்ஸ் பக்கத்தில் பதிவிட்டுள்ளார்.

ஈரான் — இஸ்ரேல் எக்காரணத்தை கொண்டும் இனி தாக்குதல் நடத்தக் கூடாது: ட்ரம்ப் எச்சரிக்கையும் பின்னணியும்!

உலகையே அச்சுறுத்திக் கொண்டிருந்த நிலையில் ஈரான்—இஸ்ரேல் இடையேயான போர் நிறுத்தம் அமலுக்கு வந்திருப்பதாக அமெரிக்க அதிபர் டொனால்டு ட்ரம்ப் அறிவித்துள்ளார். அணுகுண்டு தயாரிக்க ஈரான் முயற்சிப்பதாக அமெரிக்கா, இஸ்ரேல், ஐரோப்பிய நாடுகள் குற்றம் சாட்டி வருகின்றன. இந்நிலையில், கடந்த 13—ம் தேதி ஈரானின் அணுசக்தி தளங்களை குறிவைத்து இஸ்ரேல் போர் விமானங்கள் திடீர் தாக்குதல் நடத்தின. இதில் 4 அணுசக்தி தளங்கள் அழிக்கப்பட்டன. கடந்த 22—ம் தேதி அமெரிக்க போர் விமானங்கள் ஈரானின் போர்டோ, நடான்ஸ், இஸ்பகான் ஆகிய முக்கிய அணுசக்தி தளங்களை குறிவைத்து தாக்கின. இதில் 3 அணுசக்தி தளங்களும் முழுமையாக தகர்க்கப்பட்டன.

இதற்கு பதிலடியாக நள்ளிரவு கத்தார் நாட்டின் தலைநகர் தோஹாவில் உள்ள அமெரிக்க விமானபடைத் தளத்தை குறிவைத்து ஈரான் ராணுவம் 19 ஏவுகணைகளை வீசியது. அவை நடுவானில் அழிக்கப்பட்டன. இந்த விமான படைத்தளத்தில் 11,000 அமெரிக்க வீரர்களும் 100—க்கும் மேற்பட்ட போர் விமானங்களும் நிலை நிறுத்தப்பட்டு உள்ளன. ஈரான் தாக்குதலில் உயிரிழப்போ, சேதமோ ஏற்படவில்லை. தொடர்ந்து ஈரானும், இஸ்ரேலும் கடுமையான தாக்குதல்களை நடத்தின. ஈரான் தலைநகர் டெஹ்ரான் உள்ளிட்ட இடங்களை குறிவைத்து இஸ்ரேலிய போர் விமானங்கள் 100—க்கும் மேற்பட குண்டுகளை வீசின.

இதற்கு பதிலடியாக இஸ்ரேலின் டெல்அவிவ் உள்ளிட்ட நகரங்களை குறிவைத்து ஈரான் 100—க்கும் மேற்பட்ட ஏவுகணைகளை வீசியது. இந்த சூழலில் கத்தார் நாடு சமரச முயற்சியில் இறங்கியது. அமெரிக்கா, ஈரான், இஸ்ரேல் நாடுகளின் தலைவர்களுடன், கத்தார் தலைவர்கள் பேச்சுவார்த்தை நடத்தினர். இதில் சுமுக உடன்பாடு எட்டப்பட்டது.இதைத் தொடர்ந்து, அமெரிக்க அதிபர் டொனால்டு ட்ரம்ப் சமூகவலைதளத்தில் வெளியிட்ட பதிவுகளில் கூறியிருப்பதாவது: இஸ்ரேல்—ஈரான் இடையே முழுமையான போர் நிறுத்தம் ஏற்பட்டிருக்கிறது.




12 நாட்கள் நீடித்த போருக்கு நிரந்தர முற்றுப்புள்ளி வைக்கப்பட்டுள்ளது. போர் நிறுத்தத்தை இரு நாடுகளும் முழுமையாக அமல்படுத்த வேண்டும். அமைதி திரும்பியிருப்பதால், மத்திய கிழக்கு பெரிய வெற்றியை பெற்றிருக்கிறது.

கத்தாரில் உள்ள விமான படை தளம் மீது ஈரான் ராணுவம் வீசிய ஏவுகணைகளை நடுவானில் அழித்துவிட்டோம். இந்த தாக்குதல் குறித்து ஈரான் தரப்பில் முன்கூட்டியே தகவல் தெரிவிக்கப்பட்டது. இதற்காக ஈரானுக்கு நன்றி. இவ்வாறு அதிபர் ட்ரம்ப் தெரிவித்துஉள்ளார்."போர் நிறுத்தத்தை மீறி ஈரான் ராணுவம் ஏவுகணை தாக்குதலை நடத்தியுள்ளது. இதற்கு தகுந்த பதிலடி கொடுக்கப்படும். டெஹ்ரானில் உள்ள ராணுவ நிலைகள் அழிக்கப்படும்" என்று எச்சரிக்கை விடுத்தார்.


ஈரான் ராணுவத்தின் ஐஆர்ஜிசி தளபதி முகமது கூறும்போது, "எங்களது 3 அணுசக்தி தளங்கள் மீது அமெரிக்கா தாக்குதல் நடத்தியது. இதற்கு பதிலடியாக கத்தாரில் உள்ள அமெரிக்க விமானப் படை தளம் மீது நாங்கள் ஏவுகணை தாக்குதலை நடத்தினோம். சண்டை நிறுத்தம் அமலுக்கு வந்த பிறகு இஸ்ரேல் மீது நாங்கள் தாக்குதல் நடத்தவில்லை. அமெரிக்காவோ, இஸ்ரேலோ மீண்டும் தாக்கினால், தக்க பதிலடி கொடுப்போம்" என்று தெரிவித்தார். இதற்கிடையில் அமெரிக்க அதிபர் ட்ரம்ப் சமூக வலைதளத்தில் மீண்டும் வெளியிட்ட பதிவில், "சண்டை நிறுத்தம் அமலுக்கு வந்துவிட்டது. அதை இருதரப்பும் மீறக்கூடாது" என்று கண்டித்துள்ளார். மேலும், அதிபர் டொனால்டு ட்ரம்ப், இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகுவை தொலைபேசியில் தொடர்பு கொண்டு பேசினார். அப்போது போர் நிறுத்தத்தை முழுமையாக அமல்படுத்த வேண்டும் என்று அவர் கண்டிப்புடன் கூறினார். பின்னர், அமெரிக்க அதிபர் ட்ரம்ப் வாஷிங்டனில் செய்தியாளர்களிடம் கூறியதாவது: அமைதியை நிலைநாட்ட ஈரான் விரும்புகிறது. அந்நாடு மட்டுமல்ல, இஸ்ரேலும் போர் நிறுத்தத்தை அப்பட்டமாக மீறியிருக்கிறது. இஸ்ரேல் ராணுவத்தின் நடவடிக்கை கடும் அதிருப்தி அளிக்கிறது. இஸ்ரேல் போர் விமானங்கள் அனைத்தும் உடனடியாக தங்களது விமான தளங்களுக்கு திரும்ப வேண்டும். ஈரான் மீது எந்த தாக்குதலும் நடத்தக்கூடாது. ஈரான் மக்களில் யாரும் பாதிக்கப்படக் கூடாது.

ஈரானின் அணுசக்தி தளங்கள் முழுமையாக அழிக்கப்பட்டுள்ளன. குறிப்பாக, ஈரானின் போர்டோ அணுசக்தி தளம் முழுமையாக தகர்க்கப்பட்டுவிட்டது. இனி ஈரானால் அணு ஆயுதங்களை தயாரிக்க முடியாது. 12 நாட்களுக்கு பிறகு போர் நிறுத்தம் ஏற்பட்டிருக்கிறது. இஸ்ரேலும் ஈரானும் போர் நிறுத்தத்தை கண்டிப்புடன் பின்பற்ற வேண்டும். இவ்வாறு அவர் தெரிவித்தார். அமெரிக்க அதிபர் ட்ரம்பின் எச்சரிக்கையை தொடர்ந்து, இஸ்ரேல் போர் விமானங்கள் நேற்று தாக்குதலை கைவிட்டு விமான படைத் தளங்களுக்கு திரும்பின.


இதைத் தொடர்ந்து இஸ்ரேல் பிரதமர் அலுவலகம் வெளியிட்ட அறிக்கையில், "ஈரானுக்கு எதிரான போரில் எங்களது லட்சியத்தை அடைந்துவிட்டோம். எங்களுக்கு முழு ஆதரவு அளித்த அமெரிக்க அதிபர் ட்ரம்புக்கு நன்றி தெரிவித்து கொள்கிறோம். போர் நிறுத்தத்தை முழுமையாக ஏற்றுக் கொள்கிறோம். எனினும் போர் நிறுத்தம் மீறப்பட்டால், தக்க பதிலடி கொடுக்க தயங்க மாட்டோம்" என்று தெரிவிக்கப்பட்டு உள்ளது.இஸ்ரேல், ஈரான் இடையே போர் நிறுத்தம் அமல் செய்யப்பட்டிருப்பதை இந்தியா, ரஷ்யா, பிரான்ஸ், பிரிட்டன், சீனா உள்ளிட்ட நாடுகள் வரவேற்றுள்ளன.

# கருத்துப் ப(ா)டம்

நன்றி: தினமலர்




# சொல்றாங்க... சொல்றாங்க...



"எந்த பிரச்சினைக்கும் போர் தீர்வாகாது"

**போப் லியோ**


(ஆமாப்பு, நாம இப்படித்தான் திரும்பத் திரும்ப சொல்ல வேண்டியிருக்கு! ஆனா ஒருத்தரும் நம்ம பக்கம் திரும்பறதா இல்லையே ஏன்ப்பு!?)



"எங்களைத் தவிர எந்த நாடும் அமெரிக்க ராணுவ தளங்களை குறிவைக்க துணிந்தது இல்லை"

**ஈரான் தூதர் இராஜ் எலாஹி**

(அடி வாங்கியும் கூட, அடி கொடுத்ததைப் பாராட்டலாம்னு சொல்றீங்க! சரி! பாராட்டுக்கள்!)



"ஈரான் மீதான அமெரிக்க தாக்குதலில் நியாயம் ஏதும் இல்லை!"

**புதின்**

(வரவர யாரு எதைப் பேசறதுன்னு விவஸ்தையே இல்லாம போச்சு!)



"குடியேறிகளுக்கு அனுதினமும் அச்சம்தான்! அமெரிக்கா மட்டுமின்றி உலகின் பல சக்தி வாய்ந்த நாடுகள் குடியேறிகளின் கடின உழைப்பால்தான் கட்டி எழுப்பப்பட்டுள்ளன."

**ஷகிரா**


(சத்தமா பாடுவீங்க தெரியும்! சத்தியமாவும் பேசுவீங்கன்னு காட்டிட்டீங்க! இந்தக் குரல் உலகெங்கும் ஒலிக்கட்டும்!)

# மதம்

## இரானை தாக்கும் இஸ்ரேலுக்கு எதிராக இஸ்லாமிய நாடுகள் ஒருங்கிணையாதது ஏன்?

இஸ்லாமிய நாடுகளின் அமைப்பான இஸ்லாமிய ஒத்துழைப்பு அமைப்பின் (**Islamic Cooperation (OIC)** இரண்டாவது உச்சி மாநாடு 1974—ஆம் ஆண்டு பிப்ரவரி மாதத்தில் பாகிஸ்தானின் லாகூரில் நடைபெற்றது. சௌதி அரேபியாவின் அப்போதைய மன்னர் அப்துல் அஜிஸ் அல் சவுத்—தும் அந்த மாநாட்டில் இருந்தார்.

அந்த மாநாட்டில் உரையாற்றிய அப்போதைய பாகிஸ்தான் பிரதமர் சுல்ஃபிகர் அலி பூட்டோ, “நாங்கள் ஓர் ஏழ்மையான நாடு. எங்களுக்கு



குறைவான அளவிலேயே வளங்கள் உள்ளன, பொருளாதார நிறுவனங்களை உருவாக்குவதற்கு ஒதுக்க போதுமான பணம் எங்களிடம் இல்லை. எங்களால் அந்த முறையில் பங்களிக்க முடியாது. ஆனால் அல்லாஹ்வை என் சாட்சியாக வைத்துக்கொண்டு சொல்கிறேன், இஸ்லாத்துக்கு ஒவ்வொரு சொட்டு ரத்தத்தையும் தர தயங்க மாட்டோம். இது வெறும் வார்த்தையல்ல. பாகிஸ்தானின் மக்கள் அல்லாஹ்வின் வீரர்கள், பாகிஸ்தானின் ராணுவ வீரர்கள் அல்லாஹ்வின் வீரர்களும்தான். எதிர்காலத்தில் அதுபோன்ற ஏதேனும் மோதல் ஏற்பட்டால், பாகிஸ்தான் உதவுவதற்கு நிற்கும்,” என்று கூறியிருந்தார்.

இஸ்லாத்துக்கு ரத்தம் சிந்த தயாராக இருப்பதாக சுல்ஃபிகர் அலி பூட்டோ சூளுரைத்துக் கொண்டிருந்த நேரத்தில், இரானில் இஸ்லாமிய புரட்சி நடைபெற்றிருக்கவில்லை. சதாம் ஹுசைன் இரான் மீது தாக்குதல் நடத்தியிருக்கவில்லை. எகிப்து, ஜோர்டான், ஐக்கிய அரபு அமீரகம், பஹ்ரைன், மொராக்கோ மற்றும் சூடான் ஆகிய நாடுகள் இஸ்ரேலை அங்கீகரித்திருக்கவில்லை. சௌதி அரேபியா யேமனை தாக்கவில்லை. சௌதி, பஹ்ரைன், எகிப்து, ஐக்கிய அரபு அமீரகம் ஆகியவை கத்தாருக்கு எதிராக தடைகளை விதிக்கவில்லை. வங்கதேசம் பாகிஸ்தானில் இருந்து பிரிந்திருந்தது. இருந்தும், இஸ்லாமிய நாடுகள் ஒற்றுமையாக இருக்க வேண்டும் என சுல்ஃபிகர் பூட்டோ விரும்பியதாகத் தோன்றியது.

இஸ்லாமிய நாடுகள் இஸ்ரேலுக்கு எதிராக ஒன்றிணைய வேண்டும் என பாகிஸ்தான் மீண்டும் விரும்புகிறது. பாகிஸ்தான்

# தாண்டி !

அணுகுண்டை தயாரித்திருந்தாலும், மேற்குலகம் பல இஸ்லாமிய நாடுகளில் ஒன்றன்பின் ஒன்றாக தங்கள் விருப்பம்போல் அரசுகளை மாற்றத் தொடங்கியது. எடுத்துக்காட்டாக, இராக், லிபியா, சிரியா ஆகிய நாடுகளில் மேற்குலக நாடுகளுக்கு எதிரான அரசுகள் இருக்கவில்லை. தற்போது இரானிலும் இது நடப்பதாக தோன்றுகிறது. ஆப்கானிஸ்தானில் அமெரிக்க ராணுவம் மேற்கொண்ட நடவடிக்கைகளுக்கு பாகிஸ்தானே உதவி செய்தது.

இஸ்லாமிய நாடுகளுக்கிடையே முரண்பாடுகள்

இரான் மீது ஜூன் 12ஆம் தேதி இஸ்ரேல் தாக்குதலை தொடங்கியது, இந்தத் தாக்குதல்கள் இப்போதும் தொடர்ந்து கொண்டிருக்கின்றன. பதிலடியாக இரானும் இஸ்ரேலை தாக்கத் தொடங்கியது. இந்த இரண்டு நாடுகளுக்கிடையிலான மோதலின் தாக்கம் மேற்காசியா முழுவதும் உணரப்படுகிறது.




ரஜ்னீஷ் குமார்

இந்த மோதலை இஸ்லாத்துக்கு எதிரான போராகவும் பலர் சித்தரிக்கிறார்கள்.

பாகிஸ்தான் பாதுகாப்பு அமைச்சர் கவாஜா ஆசிஃப் இஸ்லாமிய நாடுகள் அனைத்தும் இஸ்ரேலுக்கு எதிராக ஒன்றிணைய வேண்டும் என நாடாளுமன்றத்தில் வேண்டுகோள் விடுத்தார். இதைப் போன்ற ஒரு சூழலில், இஸ்லாமிய நாடுகளால் ஒன்றிணைய முடியுமா என்ற கேள்வி எழுகிறது. இரண்டாவது கேள்வி பாகிஸ்தான் ஏன் திரும்பத் திரும்ப இஸ்லாமிய நாடுகளின் ஒற்றுமை குறித்து பேசுகிறது? உலகம் முழுவதும் இருக்கும் இஸ்லாமிய நாடுகள் இஸ்ரேலுக்கு எதிராக ஒன்றாக செயல்பட வேண்டும் என பாகிஸ்தான் நினைக்கிறது. ஆனால் தற்போதைய சூழ்நிலையில் இஸ்லாமிய நாடுகள் பரஸ்பர மோதல்களிலும் முரண்பாடுகளிலும் மூழ்கியுள்ளன. சௌதி அரேபியா மற்றும் இரான் இடையேயான விரோதம் இன்னமும் முடியவில்லை. இந்தப் பகைமை, சுன்னி மற்றும் ஷியா மோதலையும் தாண்டி, சௌதி அரேபியாவின் அரச மரபு ஆட்சிக்கு எதிராக இரானின் இஸ்லாமியப் புரட்சியாக இருந்து வருகிறது. அஜர்பைஜான் ஷியா மக்கள் பெரும்பான்மையாக உள்ள முஸ்லிம் நாடு, ஆனால் அது இஸ்ரேலுடன் நெருக்கமாக உள்ளது. அதேநேரம் ஷியா பெரும்பான்மை உள்ள இரானுடன் பதற்றமான உறவைக் கொண்டுள்ளது.



முழுவதற்கும் அச்சுறுத்தல் என்று கூறியிருந்தார். இதைப் போன்ற ஒரு சூழ்நிலையில், இஸ்லாமிய நாடுகள் இஸ்ரேலுக்கு எதிராக தங்கள் முரண்பாடுகளையும் வேறுபாடுகளையும் மறந்து ஒன்றிணையுமா என்ற கேள்வி எழுகிறது. சௌதி அரேபியாவுக்கான இந்தியாவின் தூதராக இருந்த தல்மீஸ் அகமதிடம் இதே கேள்வி கேட்கப்பட்டது.

தல்மீஸ் அகமது கூறுகையில், "பாகிஸ்தான் மீது தற்போது பெரும் அழுத்தம் உள்ளது. இந்தியாவுடன் ராணுவ மோதல் ஏற்பட்டு, கணிசமான பாதிப்பையும் அவர்கள் சந்தித்துள்ளனர். தனது முக்கியத்துவத்தை நிலைநாட்டுவதற்காக பாகிஸ்தான் இதுபோன்ற கருத்துகளை வெளியிடுகிறது. துருக்கியுடன் அவர்கள் தங்கள் நெருக்கத்தை அதிகரித்துள்ளனர், இரானுடனான தங்களது உறவை அதிகரிக்க விரும்புகிறார்கள். பாகிஸ்தான் முன்பு ஆப்கானிஸ்தானுக்கு முக்கியத்துவம் கொடுத்து, அதன் மூலம் மூலோபாய நன்மைகளைப் பெறுவதாகக் கூறியது. துருக்கி, இரான் மற்றும் பாகிஸ்தான் ஆகிய நாடுகள் பனிப்போர் காலத்திலிருந்தே நெருக்கமாக இருந்திருக்கின்றன. இப்போது பாகிஸ்தான் அதற்கு மீண்டும் முக்கியத்துவம் அளிக்கிறது." என்றார்.

இராக் மீது அமெரிக்கா தாக்குதல் நடத்தி, சதாம் ஹுசைனின் தூக்கு தண்டனையை உறுதி செய்த போது, இரான் அமெரிக்காவுக்கு எதிராக இருக்கவில்லை. இரானில் இஸ்லாமியப் புரட்சி நடந்த அதே ஆண்டில், எகிப்து இஸ்ரேலை ஒரு நாடாக அங்கீகரித்து, தூதரக உறவுகளை ஏற்படுத்த முடிவு செய்தது. ஜோர்டான் 1994—ல் இஸ்ரேலை அங்கீகரித்தது. 2020—ல், ஐக்கிய அரபு அமீரகம், பஹ்ரைன், மொராக்கோ மற்றும் சூடான் ஆகிய நாடுகளும் இஸ்ரேலுடன் தூதரக உறவுகளை ஏற்படுத்தின.

துருக்கியின் இரட்டை நிலைப்பாடு

ஐக்கிய அரபு அமீரகம் மற்றும் பஹ்ரைன் ஆகிய நாடுகள் இஸ்ரேலுடன் தூதரக உறவுகளை ஏற்படுத்தியதற்காக துருக்கி அவற்றை விமர்சித்து வந்தது. ஆனால், துருக்கி தானே இஸ்ரேலுடன் தூதரக உறவுகளைக் கொண்டுள்ளது. துருக்கியும் இஸ்ரேலும் 1949 முதல் தூதரக உறவுகளைப் பேணி வருகின்றன. இஸ்ரேலை அங்கீகரித்த முதல் முஸ்லிம் பெரும்பான்மை நாடு துருக்கியாகும்.

2005ஆம் ஆண்டு, துருக்கியின் அதிபர் எர்துவான், ஒரு பெரிய வணிகர் குழுவுடன் இரண்டு நாள் பயணமாக இஸ்ரேலுக்குச் சென்றார். அந்தப் பயணத்தில், அப்போதைய இஸ்ரேலிய பிரதமர் ஏரியல் ஷரோனை சந்தித்து, இரானின் அணு ஆயுதத் திட்டம் இஸ்ரேலுக்கு மட்டுமல்லாது, உலகம்

"ஐக்கிய நாடுகள் சபையின் தீர்மானம் பயனற்றதாகி விட்ட நிலையில், இஸ்லாமிய நாடுகளின் அமைப்பான ஓஐசி ஏற்கெனவே முக்கியமற்றதாகிவிட்டது. முதலாவதாக, இரானுக்கும் இஸ்ரேலுக்கும் இடையிலான பிரச்னை இஸ்லாம் தொடர்பானது அல்ல. இது இரு நாடுகளுக்கு இடையிலான பிரச்னை. இது ஒரு மூலோபாயப் போட்டியாகும். இது ஒரு நீண்டகாலப் பகைமையாகும், இது பிராந்தியத் தலைமைத்துவத்துக்கும் முக்கியத்துவம் அளிக்கிறது. இதற்கு இஸ்லாமிய அடையாளம் கொடுப்பதில் எந்தப் பொருளும் இல்லை. துருக்கியின் பாகிஸ்தானுடனான உறவு இஸ்லாத்தின் காரணமாக இல்லை. பாகிஸ்தானின் இரானுடனான உறவு இஸ்லாத்தின் காரணமாக இல்லை. எப்போது பார்த்தாலும் இஸ்லாமை இதில் இழுப்பது யாருக்கும் அழகல்ல," என கூறு

"அனைத்து அரபு நாடுகளிலும் அமெரிக்கப் படைகள் உள்ளன. வளைகுடா முழுவதும் 70,000 அமெரிக்க வீரர்கள் உள்ளனர். இவர்களுக்கு

தாங்கள் நிலை கொண்டுள்ள தளங்களுக்கு வெளியேயும் உரிமைகள் உள்ளன. அதாவது, அந்த நாடுகளின் சட்டங்கள் இவர்களுக்கு பொருந்தாது. அந்த தளங்களை நிர்வகிக்க அமெரிக்காவுக்கு முழு தன்னதிகாரமும் உள்ளது. இந்த விசயத்தில் எந்த அரபு நாட்டாலும் அமெரிக்காவைத் தடுக்க முடியாது. இஸ்ரேலின் டிரோன்கள் ஜோர்டான் வழியாகத்தான் வருகின்றன. இந்த டிரோன்களைத் தடுத்திருக்க வேண்டியது ஜோர்டானின் பொறுப்பு. பல ட்ரோன்கள் ஜோர்டானிலேயே விழுந்து விடுகின்றன. டெல் அவிவுக்கும் டெஹ்ரானுக்கும் இடையே 2,000 கிலோமீட்டர் தூரம் உள்ளது, ஆனாலும் டிரோன்கள் மூலம் போர் நடைபெறுகிறது." என தல்மீஸ் அகமது கூறுகிறார்.

இராக் முற்றிலும் அமெரிக்காவின் போராக இருந்ததால், இரானை இராக்குடன் ஒப்பிட முடியாது, என்கிறார் தல்மீஸ் அகமது."1967—க்கு முன்பு பாலத்தீனம் மற்றும் இஸ்ரேல் பிரச்னை அரபு நாடுகளின் பிரச்னையாக இருந்தது. ஆனால், 1967—ல் அரபு—இஸ்ரேல் போரில் இஸ்ரேல் வெற்றி பெற்ற பிறகு, இது இஸ்ரேல் மற்றும் பாலத்தீனத்தின் பிரச்னையாக மட்டுமே மாறியது. இதற்கு யாராவது தீர்வு காண முடியுமானால், அது இஸ்ரேலும் பாலத்தீனர்களும் தான்," என அவர் கூறினார்.

இஸ்ரேல் மற்றும் இரான் இடையேயான போர் பாகிஸ்தானின் முக்கியத்துவத்தை




அதிகரித்துள்ளதாகக் கூறப்படுகிறது.மேற்கத்திய நாடுகள், பாகிஸ்தான் இந்த விவகாரத்தில் இரானுக்கு எந்தவித உதவியும் செய்யக் கூடாது என்று விரும்புகின்றன. ஆனால், இரான், பாகிஸ்தான் தங்களுடன் இருக்க வேண்டும் என்று எதிர்பார்க்கிறது. பனிப்போர் காலத்தில் பாகிஸ்தான் அமெரிக்காவின் கூட்டணியில் இருந்தது, எனவே, இரானுடன் செல்வது அவர்களுக்கு அவ்வளவு எளிதல்ல.

பாகிஸ்தானின் ஃபீல்ட் மார்ஷல், ஜூன் 18 அன்று வெள்ளை மாளிகையில் அமெரிக்க அதிபர் டிரம்பை மதிய உணவின் போது சந்தித்தார். இது இரான்—இஸ்ரேல் போருடன் தொடர்புடையதாகவே பார்க்கப்படுகிறது. இந்தியாவின் முன்னாள் தூதரக அதிகாரி கே.சி. சிங், எக்ஸ் தளத்தில் பகிர்ந்த பதிவில், "இதற்கு இரண்டு பொருள் இருக்கலாம். ஒன்று, அமெரிக்கா இரானுக்கு எதிரான போரில் ஈடுபட்டால், பாகிஸ்தான் ராணுவத்தின் எதிர்வினை என்னவாக இருக்கும் என்பதை டிரம்ப் புரிந்து கொள்ள முயல்கிறார் அல்லது ஏற்கெனவே இரானின் அணு ஆயுதத் திட்டத்தை அழிக்க முடிவு செய்துவிட்டு, டிரம்ப் பாகிஸ்தானின் உதவியை எதிர்பார்க்கிறார்." என தெரிவித்துள்ளார்.

தெற்காசியாவின் புவிசார் அரசியலைக் கூர்ந்து கவனிக்கும் மைக்கேல் குகல்மேன் தன் பதிவில், "இரானின் தற்போதைய அரசு எதிர்காலத்திலும் தொடர்ந்தால், வரும் ஆண்டுகளில் இரானுடன் பாகிஸ்தானின் நெருக்கம் வலுப்படும். சௌதி அரேபியாவுக்கும் இரானுக்கும் இடையே உறவை மேம்படுத்துவதற்கு சாதகமான சூழல் உருவாகும்." என தெரிவித்துள்ளார்.

இஸ்லாமிய நாடுகளிடம் ஆதரவில்லாத நிலை

பேச்சளவில் ஒன்றாக இருப்பதற்கும், உண்மையில் ஒன்றாக இருப்பதற்கும் ஒரு வேறுபாடு இருப்பதாக, டெல்லியில் உள்ள ஜவஹர்லால் நேரு பல்கலைக்கழகத்தின் மேற்காசிய ஆய்வு மையத்தில் இணைப் பேராசிரியராக இருக்கும் முகமது முதஸ்ஸிர் காமர் கூறுகிறார். முகமது




முதஸ்ஸிர் காமர் கூறுகையில், “இரான் எப்போதும் சதாம் ஹுசைனை ஒரு அச்சுறுத்தலாகவே பார்த்தது. ஆனால், அமெரிக்கா சதாம் ஹுசைனுக்கு தூக்குத் தண்டனை வழங்கியது, அவர் இரானுக்கு அச்சுறுத்தலாக இருந்தார் என்பதால் அல்ல. அமெரிக்காவுக்கு அதன் சொந்த காரணங்கள் இருந்தன. இராக்கில் உள்ள ஷியா மக்களுக்கு ஆதரவாக இரான் எப்போதும் இருந்து வந்துள்ளது. தற்போது இரான் முற்றிலும் தனிமைப்படுத்தப்பட்டுள்ளது. இப்போது இரான் அமெரிக்காவுடன் நேரடியாக மோத வேண்டிய சூழல் ஏற்படலாம். அப்படி நடந்தால், இந்த மோதல் ஒரு தீர்வை தருவதாக இருக்கக்கூடும்.”முகமது முதஸ்ஸிர் காமர் கூறுகையில், “இஸ்லாமிய நாடுகளுக்கிடையேயான முரண்பாடுகள் மிகவும் ஆழமானவை, அவற்றிலிருந்து அவை இதுவரை விடுபட முடியவில்லை. இஸ்லாமிய ஒத்துழைப்பு அமைப்பு (ளிமிசி) மற்றும் அரபு லீக் போன்ற அமைப்புகள் உள்ளன, ஆனால் அவை பெயரளவில் மட்டுமே உள்ளன,” என கூறுகிறார்.

2003—ல் எர்துவான் துருக்கியின் பிரதமரானபோது, அமெரிக்கா இராக்கின் மீது தாக்குதல் நடத்தத் தயாராகிக் கொண்டிருந்தது. எர்துவான் சதாம் ஹுசைனுடன் நெருக்கமாக இல்லை. இராக்குக்கு எதிரான போரில் துருக்கியின் நிலப்பகுதியைப் பயன்படுத்த அமெரிக்காவை அனுமதிக்கவும் அவர் முடிவு செய்திருந்தார்.ஆனால், அவரது இந்த முன்னெடுப்பு துருக்கி நாடாளுமன்றத்தில் வெறும் மூன்று வாக்குகள் வித்தியாசத்தில் தோல்வியடைந்ததால் எர்துவானின் எண்ணம் நிறைவேறவில்லை, அவரது கட்சிக்கு நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மை இருந்தும் இது நடந்தது. இந்த முடிவால் அப்போதைய புஷ் நிர்வாகம் மிகவும் கோபமடைந்தது. இருப்பினும், துருக்கியின் வான்வெளியைப் பயன்படுத்த அமெரிக்காவுக்கு எர்துவான் அனுமதி வழங்கியிருந்தார். ஒருபுறம், எர்துவான் முஸ்லிம் சுயமரியாதை மற்றும் அதன் நலன்களைப் பற்றி பேசுவது, மறுபுறம் இராக்கின் மீதான அமெரிக்கத் தாக்குதலை ஆதரித்தார். இவை இரண்டுமே ஒன்றுக்கொன்று முற்றிலும் முரண்பட்டவையாக இருந்தன.

இரான் தோல்வியடைந்தால் என்ன நேரும்?

இப்போது இஸ்ரேல் இரான் மீது தாக்குதல் நடத்தியிருக்கும் நிலையில், எர்துவான் மீண்டும் தீவிரமாக கருத்து தெரிவிக்கத் தொடங்கியுள்ளார். ஆனால், சில மாதங்களுக்கு முன்புதான் சிரியாவில் இருந்த இரான் ஆதரவு அரசு துருக்கியின் உதவியுடன் தூக்கி எறியப்பட்டது. ஒரு வகையில், சிரியாவில் துருக்கியின் கைகளால் இரான் தோல்வியை சந்தித்தது. எர்துவான் எக்ஸ் (முன்னாள் ட்விட்டர்) தளத்தில் ஒரு நீண்ட பதிவில் இஸ்ரேல் குறித்து இவ்வாறு எழுதியுள்ளார்:

“இஸ்ரேல், மேற்கத்திய நாடுகளின் பரந்த ஆதரவுடன் இரான் மீது தாக்குதல் நடத்தியுள்ளது. இஸ்ரேல் காஸாவை அழித்து இந்தப் பிராந்தியத்தின் ஒவ்வொரு நாட்டையும் அச்சுறுத்தியிருக்கிறது. தாம் என்ன செய்கிறோம் என்பதையே உண்மையில் இஸ்ரேல் உணரவில்லை.”“எதிர்காலத்தில் இஸ்ரேல் தனது தவறை உணரலாம், ஆனால் அதற்குள் காலம் கடந்துவிடுமோ என அஞ்சுகிறோம். பண்டைய காலத்தில் எந்த நாட்டுக்கும் தனித்த எல்லைகளோ, நிர்வாகமோ இல்லை என்பதை இஸ்ரேல் மறந்துவிடக் கூடாது. பாலத்தீன மக்கள் மற்றும் அவர்களின் நிலங்கள் மீதான இஸ்ரேலின் தாக்குதல் சில லட்சம் பேர் மீதானது மட்டுமல்ல. இப்போது இஸ்ரேல் இரானையும் அங்குள்ள மக்களையும் தாக்கியுள்ளது, இந்தத் தாக்குதல் இரானுக்கு மட்டும் கவலையளிக்கும் விஷயமல்ல.



இந்த விவகாரம் துருக்கியை எட்டும்போது, அதன் வீச்சு மேலும் விரிவடையும்.” என தெரிவித்துள்ளார். மேலும் அவர், “உண்மைகளைப் புரிந்துகொள்ளாமல் இந்தப் பிராந்தியத்தில் எடுக்கப்படும் ஒவ்வொரு முடிவும் எதிர்காலத்துக்கு அழிவை விளைவிக்கக் கூடியதாக இருக்கக் கூடும். இஸ்ரேல் எவ்வளவு கொடூரமாக நடந்து கொள்கிறதோ, எவ்வளவு ரத்தம் சிந்துகிறதோ, மனிதத்துக்கு எதிராக எவ்வளவு குற்றங்களைச் செய்கிறதோ, அவ்வளவு தூரம் அது தன் இருப்பை அபாயத்துக்குட்படுத்துகிறது. முடிவில் இந்த அநீதிகளுக்காக அது வருந்தும் நிலை ஏற்படும்.” என குறிப்பிட்டுள்ளார்.

மேற்காசியாவில் துருக்கியின் நலன்களும் இரானின் நலன்களும் நீண்ட காலமாக முரண்படுகின்றன. அதேபோல், வளைகுடாவின் மற்ற இஸ்லாமிய நாடுகளுக்கிடையேயான முரண்பாடுகளும் ஆழமானவை. இந்நிலையில், இஸ்ரேலுக்கு எதிராக மதத்தின் அடிப்படையில் மட்டும் ஒன்றிணைவது, அதிலும் குறிப்பாக அமெரிக்கா இஸ்ரேலுடன் நிற்கும் போது, சாத்தியமற்றதாகவே

ஆங்கில நாளிதழான ‘தி இந்து’வின் சர்வதேச விவகாரங்கள் பிரிவு ஆசிரியர் ஸ்டான்லி ஜானி, “இரான் இந்தப் போரில் தோல்வியடைந்தால், மேற்காசியாவில் இஸ்ரேலின் செல்வாக்கு மேலும் அதிகரிக்கும். சிரியாவில் பஷார் அல் அசாத் ஏற்கெனவே பதவியில் இருந்து அகற்றப்பட்டுவிட்டார். இரான் ஆதரவு பெற்ற ஆயுதக் குழுக்கள் ஏற்கெனவே பலவீனமடைந்துவிட்டன. காஸாவை இஸ்ரேல் ஏற்கெனவே அழித்துவிட்டது. மேற்குக் கரையில் இஸ்ரேல் தனது விருப்பப்படி என்ன வேண்டுமானாலும் செய்யும். இரான் பலவீனமடைந்தால், மேற்காசியாவில் ரஷ்யாவின் எஞ்சிய செல்வாக்கும் சுருங்கிவிடும். வளைகுடாவில் உள்ள அமெரிக்கக் கூட்டாளிகளின் எண்ணெயை நம்ப வேண்டிய நிலைக்கு சீனா செல்லும்.” என எழுதியுள்ளார். “இரானுக்கும் சௌதி அரேபியாவுக்கும் இடையிலான பகைமைக்கு முக்கிய காரணம் ஷியா மற்றும் சுன்னி மோதல் மட்டுமல்ல. புவிசார் அரசியல் காரணங்கள் அதைவிட முக்கியமானவை. கத்தாரில் அமெரிக்காவின் விமானப்படைத் தளம் உள்ளது, இஸ்ரேல் இந்தத் தளத்தைப் பயன்படுத்தினால், அதை யாராலும் தடுக்க முடியாது. அவ்வாறு தடுக்கும் நிலையில் கத்தாரும் இல்லை. சீனாவின் முயற்சியால் இரானுக்கும் சௌதி அரேபியாவுக்கும் இடையிலான இடைவெளி குறைந்துள்ளது, ஆனால் இந்தப் பிராந்தியத்தில் இரான் மீதான அச்சம் இன்னும் குறையவில்லை.”

முகமது முதஸ்ஸிர் காமர் மேலும் கூறுகையில், “அரபு இஸ்லாமிய நாடுகள் இஸ்ரேல், இரான் இரண்டை பார்த்துமே அஞ்சுகின்றன. இரானோ, இஸ்ரேலோ மிகவும் வலிமையடைவதை வளைகுடாவின் இஸ்லாமிய நாடுகள் விரும்பவில்லை. இரண்டு சூழ்நிலைகளிலும், இவர்களுக்கு சிக்கல்கள் உள்ளன. வளைகுடாவின் இஸ்லாமிய நாடுகள் அமெரிக்காவின் மூலோபாயக் கூட்டாளிகள். எனவே, அமெரிக்காவின் மீது இவர்களுக்கு இன்னமும் நம்பிக்கை உள்ளது. ஆனால், இரான் மீது இந்த நம்பிக்கை இல்லை. 1979—க்குப் பிறகு, 2025—ல் இரானின் நிலை மிகவும் பலவீனமடைந்துள்ளது என்பது தெளிவு. இருப்பினும், இந்தப் பிராந்தியத்தில் இரான் இன்னமும் வலிமையான நாடாகவே உள்ளது. சௌதி அரேபியாவால் இன்னமும் இரானுடன் நேரடியாகப் போரிட முடியாது.” என்றார்.

அமெரிக்கா 2003 மார்ச் மாதத்தில் இராக் மீது தாக்குதல் நடத்தியபோது, இரான் அந்தத் தாக்குதலுக்கு எதிர்ப்பு தெரிவிக்கவில்லை. சதாம் ஹுசைனுடன் இரானுக்கு ஒத்துவரவில்லை. அமெரிக்கா ஹுசைனுக்கு தூக்குத் தண்டனை வழங்கியபோதும் கூட இரான் எதிர்ப்பு தெரிவிக்கவில்லை.

# தமிழே

## தொல்காப்பியர் காட்டும் பண்டைத் தமிழர் வாழ்க்கை நெறி

தலைவன் தலைவியர் களவொழுக்கம் வெளிப்படுதலும், தமரின் மூலம் திருமணம் செய்து கொள்ளுதலும் என்று கூறப்பட்ட இவைமுதலாகிய இயற்கை நெறியில் மகிழ்தலும், புலத்தலும், ஊடலும், ஊடல் தீர்த்தலும், பிரிதலும் என்று சொல்லப்பட்டவற்றுடன் கூடிவருவது கற்பு என்று கூறப்படும்.

'மறைவெளிப் படுதலும் தமரிற் பெறுதலும்
இவைமுத லாகிய வியனெறி திரியாது
மலிவும் புலவியும் ஊடலும் உணர்வும்
பிரிவொடு புணர்ந்தது கற்பெனப் படுமே.' — (பொருள். 488)அம்பலும் அலரும்

தலைவன் தலைவியர் களவொழுக்கத்தில் ஈடுபட்டிருக்கும் பொழுது களவு வெளிப்படுதலுமுண்டு. இது ஷஅம்பல்|, ஷஅலர்| என இருவகையால் வெளிப்படும். அம்பல் என்பது சொல் நிகழா முகிழ்நிலைப் பரவாக் களவாகும். அலர் என்பது சொல் நிகழ்தலான பரவிய களவாகும். இவ்விரண்டிற்கும் தலைவனே பொறுப்பாவான் என்று கூறும் தொல்காப்பியம். தலைவி இவற்றிற்குப் பொறுப்பாகாள் என்றவாறு.

'அம்பலும் அலரும் களவுவெளிப் படுத்தலின்அங்கதன் முதல்வன் கிழவ னாவான்'— (பொருள். 137)

களவொழுக்கம், கற்பொழுக்கம் ஆகிய இரண்டிலும் தலைவன் தலைவி ஈடுபட்டிருக்கும் பொழுது அலர் (பழி) தூற்றுதல் நிகழ்வதுண்டாம். தலைவன் தலைவியை விட்டுப் பிரிந்து, பரத்தையை நாடிச் சென்று, அவளுடன் சேர்ந்து ஆடல், பாடல் நிகழ்த்தி, ஆற்றிலும், குளத்திலும் நீராடி மகிழ்தலும், அலர் பரவலுக்குக் காரணமாம்.

'களவுங் கற்பும் அலர்வரை வின்றே.' — (பொருள். 160)

'கிழவோன் விளையாட் டாங்கும் அற்றே.' — (பொருள். 162)

கற்பும் கரணமும்

கரணம் என்பது சடங்கொடு கூடிய மணநிகழ்வு. சடங்கோடு கூடிக் கொள்ளுதற்குரிய மரபினையுடைய தலைவன், கொள்ளுதற்குரிய மரபினையுடைய தலைவியைக் கொடுத்தற்குரிய தலைவியின் தமர் மணஞ்செய்து கொடுக்கும்



# தமிழே

முறையைக் கற்பென்று சிறப்பித்துக் கூறுவர். இது கொண்டு கொடுக்கும் முறையாம்.

கற்பு, கரணம், கிழவன், கிழத்தி, கொளற்குரி மரபினர், கொடைக்குரி மரபினர், கொண்டு, கொடுத்து என்பன நிரல் படுத்திக் கற்பொடு பொருந்திய மணவிழாவினைக் காண்க.

'கற்பெனப் படுவது கரணமொடு புணரக்
கொளற்குரி மரபிற் கிழவன் கிழத்தியைக்
கொடைக்குரி மரபினோர் கொடுப்பக்
கொள்வதுவே.;— *(பொருள். 140)*


தலைவியும் தலைவனும் அன்பினாற்கூடி ஒன்றுபட்டுச் சேர்ந்து சென்ற பொழுதும், கொடுத்தற்குரிய தலைவியின் தமர் இல்லாதவிடத்தும், சடங்கோடுகூடிய மணநிகழ்வு நடைபெறுதலும் உண்டாம். இவ்வண்ணம் கரணத்தின் சிறப்பு கூறப்பட்டமை காண்க.


நுணாவிலூர் கா. விசயரத்தினம்

கொடுப்போர் இன்றியும் கரணம் உண்டே
புணர்ந்துடன் போகிய காலை யான' — *(பொருள் 141)*

நால்வகை வகுப்பினரான அந்தணர், அரசர், வணிகர், வேளாளர் ஆகியவர்களிடையே கொண்டு, கொடுத்து, மணவினை நிகழ்ந்த காலமொன்று அன்று இருந்தது. அதன்பின் மேலோர் என்று சொல்லக்கூடிய அந்தணர், அரசர், வணிகர் ஆகிய மூவகை வகுப்பரிடையே கொண்டு, கொடுத்து, மணவினை நிகழ்ந்தது.


'மேலோர் மூவர்க்கும் புணர்த்த கரணம்
கீழோர்க்கு ஆகிய காலமும் உண்டே' — *(பொருள். 142)*






தொல்காப்பியர் காலத்துக்கு முன்னர் அந்தணர், அரசர், வணிகர், வேளாளர் ஆகிய நால்வகுப்பாரிடையில் கொண்டு, கொடுத்து, மணவினை நிகழ்ந்ததென்பதும், தொல்காப்பியர் காலத்தில் அந்தணர், அரசர், வணிகர் ஆகிய மூவகுப்பாரிடையில் கொண்டு, கொடுத்து, மணவினை நிகழ்ந்ததென்பதும், வேளாளர் தமக்குள் மாத்திரம் மணவினை நிகழ்த்தினரென்பதும் புலனாகின்றது. இன்று இம்முறைகள் யாவும் அருகி மறைந்துவிட, நால்வகுப்பினரும் தத்தமக்குள் கொண்டு, கொடுத்து, மணவினை காண்கின்றனர்.

நால்வகுப்பின மக்கள் இன்னும், நம் பண்டைத் தமிழ் ஆன்றோர் தம்இன மக்கள் அனைவரையும் அந்தணர், அரசர், வணிகர், வேளாளர் ஆகிய நான்கு வகுப்பினரில் அடக்கி, அரசர்களிலும் பார்க்க அந்தணர்க்கு முதலிடம் அளித்து, இரண்டாமிடத்தில் அரசரை அமர்த்தி, மூன்றாம் நான்காம் இடங்களில் முறையே வணிகர், வேளாளர் ஆகியவர்களை நிறுத்தி, அரசன் கையில் செங்கோல் கொடுத்து, மக்களை மாண்புடன் வாழவைக்கும் முறையினை அமைத்தமை காண்க.



மேலும், இன்று நம் மத்தியில் தாண்டவமாடும் சாதிப் பிரிவினையும், சீதனக் கொடுமையும் தொல்காப்பியர் காலத்தில் இருக்கவில்லை என்பதும் தெளிவாகின்றது. நாம் தொல்காப்பியர் வழியில் நிற்கின்றோமா? என்பது விடையற்ற ஒரு கேள்வி. ஐயர் யாத்த கரணம் தலைவன் தலைவியைக் கண்டு, காதல் கொண்டு, சிலநாட் பழகி, பல நாள் மறைந்தொழுகி, பின் நானறியேன் என்று பொய் கூறுதலும், குற்றப்பட ஒழுகுதலும் மக்கள் வாழ்வில் மங்கா வடுக்களைத் தந்து வாழ்க்கை முறைகளைச் சீரழித்து விடுகின்றன. தலைவன் தலைவியரிடையே பொய்யும், வழுவும் தோன்றிய பின்னர் ஆன்றோரும், சான்றோரும் சடங்குகளை வகுத்து, வரையறைகளை அமைத்தனர்.

'பொய்யும் வழுவும் தோன்றிய பின்னர்
ஐயர் யாத்தனர் கரணம் என்ப.' — (பொருள். 143)

'பொய்யும் வழுவும் தோன்றிய பின்னர்' என்று வரும் கூற்றால், பொய்யும் வழுவும் தோன்றாக் காலமொன்றிருந்தமை

புலனாகின்றது. அக்காலம் தொல்காப்பியர் காலத்துக்கு முற்பட்டதென்பதும் தெளிவாகின்றது.

பொய்யாவது செய்ததனை மறுத்து நிற்றல். வழுவாவது செய்ததை அதன் கண் நில்லாது தவறி ஒழுகுதல். கரணத்தொடு செயற்படின் பொய்யும், வழுவும் நிகழாவாம். இவ்வண்ணம் கரணம் வேண்டுவதாயிற்று. இன்றும் கரணத்தொடு கூடிய திருமணம் நடாத்துகின்றோம்.


களவிற் கூற்று நிகழ்த்தற்குரியோர்

பார்ப்பான், பாங்கன், தோழி, செவிலி, தலைவன், தலைவி ஆகிய அறுவரும் களவிற் கூற்று நிகழ்த்தற்குரியோராவர் என்று கூறும் சூத்திரம் இது.

'பார்ப்பான் பாங்கன் தோழி செவிலி
சீர்த்தகு சிறப்பிற் கிழவன் கிழத்தியொடு
அளவியன் மரபின் அறுவகை யோரும்
களவியற் கிளவிக் குரியர் என்ப.' —
(பொருள். 490)

கற்பிற் கூற்று நிகழ்த்தற்குரியோர்

பாணன், கூத்தன், விறலி, பரத்தை, அறிவர், கண்டோர் ஆகிய அறுவருடன் சிறப்பினையுடைய பார்ப்பான், பாங்கன் தோழி, செவிலி, கிழவன், கிழத்தி ஆகிய அறுவரையும் சேர்த்துப் பன்னிருவரும் கற்பிற் கூற்று நிகழ்த்தற்கு உரியோராவார்.





'பாணன் கூத்தன் விறலி பரத்தை
யாணஞ் சான்ற அறிவர் கண்டோர்
பேணுதகு சிறப்பில் பார்ப்பான் முதலா
முன்னுறக் கிளந்த அறுவரொடு தொகைஇத்
தொன்னெடு மரபிற் கற்பிற் குரியர்.' —
(பொருள் 491)

ஒத்த பத்து வகைப் பண்புகள்

பண்டைத் தமிழர்கள் மணவாழ்க்கைக்கு மிக முக்கியத்துவம் கொடுத்துப் பத்து வகைப் பண்புகளில் தலைவனும் தலைவியும் ஒத்திருக்க வேண்டுமென விதிகள் அமைத்துள்ளனர்.

அவையாவன: (1) ஒத்த பிறப்பும், (2) ஒத்த ஒழுக்கமும், (3) ஒத்த ஆண்மையும், (4) ஒத்த வயதும், (5) ஒத்த உருவும், (6) ஒத்த அன்பும், (7) ஒத்த நிறையும், (8) ஒத்த அருளும், (9) ஒத்த அறிவும், (10) ஒத்த செல்வமுமாம். இதைத் தொல்காப்பியர் சூத்திரத்தில் பார்ப்போம்.

'பிறப்பே குடிமை ஆண்மை ஆண்டோடு
உருவு நிறுத்த காம வாயில்
நிறையே அருளே உணர்வொடு திருவென
முறையுறக் கிளந்த ஒப்பினது வகையே'——



(பொருள். 269)

இப்படியான பத்து (10) வகைப் பண்புகள் ஒத்திருக்கும் தலைவன் தலைவியரிடையே அன்று திருமணம் நிகழ்த்தப்பட்டு அவர்கள் சீரும், சிறப்பும் அமைந்த இல்வாழ்க்கையை நடாத்தி இன்புற்றிருந்தனர். இன்று நாம் திருமணத்துக்குமுன் பதி;னான்கு (14) வகைப் பொருத்தங்கள் பார்த்து மணவிழா நடாத்துகின்றோம்.

அவையாவன: (1) நட்சத்திரப் பொருத்தம், (2) கணப் பொருத்தம், (3) மகேந்திரப் பொருத்தம், (4) ஸ்திரீதீர்க்கப் பொருத்தம், (5) யோனிப் பொருத்தம், (6) இராசிப் பொருத்தம், (7) இராசியதிபதிப் பொருத்தம், (8) வசியப் பொருத்தம், (9) இரச்சுப் பொருத்தம், (10) வேதைப் பொருத்தம், (11) புத்திரப் பொருத்தம், (12) ஆயுள் பொருத்தம், (13) விருச்சப் பொருத்தம், (14) நாடிப் பொருத்தம் என்பனவாம். இன்றுள்ள பதினான்கு வகைப் பொருத்தங்கள் அன்றிருந்த பத்து வகைப் பொருத்தங்களிலிருந்து எவ்வண்ணம் மாறுபட்டுப் போயுள்ளன என்பதை மேலே பார்த்தோம்.

தலைவனின் ஊர்திகள்

தலைவன் தலைவியர் காதல் வலையிற் சிக்குண்டனர். தலைவன் தலைவியை நாடிச் செல்வது வழக்கம். தேர், யானை, குதிரை முதலியவற்றிலும், பிறவற்றிலும் தலைவன் விரைந்து சென்று தலைவியைக் கூடுதலும் உண்டென்று சூத்திரம் அமைத்தவர் தொல்காப்பியனார் ஆவார்.

'தேரும் யானையும் குதிரையும் பிறவும்
ஊர்ந்தனர் இயங்கலும் உரியர் என்ப.' — (பொருள் 209)

தலைவன் ஒருவனிடம் தேரும், யானையும், குதிரையும் பிற ஊர்திகளும் உண்டென்பது அவனின் சிறந்த பொருளாதார நிலையை நமக்கு எடுத்துக் காட்டுகின்றது. இன்னும் அவன் நாட்டுச் செழிப்பும் அவ்வண்ணம் அமைந்துள்ளமையும் புலனாகின்றது.

முடிவுரை

இதுகாறும் தொல்காப்பியத்தின் பொருளதிகாரத்திலிருந்து தமிழ் நாட்டின் எல்லை, ஏழு திணைகள், முதற் பொருள், அன்பின் ஐந்திணை, கைக்கிளை, பெருந்திணை, களவொழுக்கம், களவொழுக்கக் காலவரை, கற்பொழுக்க நெறி, அம்பலும் அலரும், கற்பும் கரணமும், நால்வகுப்பின மக்கள், ஐயர் யாத்த கரணம், களவிற் கூற்று நிகழ்த்தற்குரியோர், கற்பிற் கூற்று நிகழ்த்தற்குரியோர், ஒத்த பத்துவகைப் பண்புகள், தலைவனின் ஊர்திகள் ஆகியவை பற்றி விரிவுபடுத்திப் பார்த்தோம்.

இன்னும், ஐந்திணையில் அவரவர் ஐவகை நிலத்திற்கேற்ற ஒத்த காம உணர்வு, எழுச்சி, நெகிழ்ச்சி ஆகியவற்றோடு ஒன்றறக் கலந்து, இணைந்து, பிணைந்து இயற்கையுடன் வாழ்க்கை நடாத்திய பண்டைத் தமிழரின் பண்பினை தொல்காப்பியர் தொகுத்துக் காட்டிய சூத்திரங்கள் யாவும் கடந்த மூவாயிரம் (3000) ஆண்டுகளாக வலிமை பெற்று இந்நாளிலும் உயிருடன் உலா வருகின்றதை நினைந்து அன்னாரின் வழித்தோன்றலாகிய நாம் அவர் தந்துள்ள செய்திகள். அனைத்தையும் கட்டிக் காத்துப் பேணி அடுத்த சந்ததியினருக்கு விட்டுப் போவது நம்மனைவரின் கடமையாகும்.

# VARSHA™

Ready to Cook

Made with Quality Natural Products

**Idli / Dosa Wet Mix** • இட்லி / தோசை மாவு

ఇడ్లీ దోస పిండి • ಇಡ್ಲಿ ದೋಸೆ ಹಿಟ್ಟು

ഇഡ്ഡലി / ദോശ മാവ്



CRISPY DOSA * SOFT & FLUFFY IDLI



100% Pure Vegetarian

ઈડલી ડોસા નું ખીરું

इडली/ दोसा आटा

# திரவியமா

## போர் பதற்றங்களுக்கிடையே மத்திய கிழக்கு நாடுகளில் தமிழர்களின் நிலை

கத்தாரில் உள்ள அமெரிக்க ராணுவ தளமான அல்—உடெய்ட்டை இரான் திங்கள்கிழமை இரவு தாக்கியது. மத்திய கிழக்கில் உள்ள அமெரிக்காவின் பெரிய ராணுவ தளம் இதுவே. இதையடுத்து, மத்திய கிழக்குப் பிராந்தியத்தில் சற்று பதற்றம் நிலவியது. இந்த தாக்குதலுக்கு முன்பாக கத்தார் தனது விமான சேவைகளை நிறுத்தியிருந்தது. இந்த தாக்குதல் காரணமாக, பஹ்ரைன், குவைத் உள்ளிட்ட நாடுகளும் தங்கள் விமான சேவைகளை நிறுத்தியிருந்தன. இரான் நடத்திய தாக்குதலில் யாரும் உயிரிழக்கவில்லை என்று அமெரிக்கா உறுதி செய்துள்ளது.

தற்போது கத்தார் மற்றும் பிற நாடுகளின் விமான சேவைகளும் மீண்டும் இயங்கி வருகின்றன. எனினும், கத்தாரில் நடத்தப்பட்ட தாக்குதல் அப்பகுதி மக்களிடையே பதற்றத்தை ஏற்படுத்தியுள்ளது. இந்த சூழல் குறித்து மத்திய கிழக்குப் பிராந்தியத்தில் உள்ள தமிழர்கள் என்ன நினைக்கிறார்கள்?

கத்தார்

கத்தார் நாட்டின் தலைநகர் தோஹாவில் வசிக்கும் வைஷ்ணவி திங்கள்கிழமை இரவு குண்டுவீச்சுகளை தனது வீட்டின் ஜன்னலில் வழியே பார்க்க முடிந்தது என்றார். குண்டுகளின் சத்தமும், அதன் அதிர்வுகளையும் கூட உணர முடிந்தது என்றார். “மாலை 7.30 மணி இருக்கும். திடீரென ஜன்னல்கள் ஆடுவதை கவனித்தோம். ஜன்னல் அருகே சென்ற எனது கணவர் ‘போர் போர்’ என்று கத்தினார். விண்ணில் வெளிச்சத்துடன் கூடிய குண்டுகள் வீசப்படுவதை காண முடிந்தது. சிறிது நேரம் ஒரு திசையிலிருந்து அவை வந்துக் கொண்டிருந்தன, அதன் பிறகு எதிர் திசையிலிருந்து வந்தன. அவ்வபோது ஏதோ வெடித்தது போன்ற சத்தமும், அதே நேரத்தில் அதிர்வுகளையும் வீட்டில் உணர முடிந்தது. சுமார் 45 நிமிடங்கள் விண்ணில் இதை பார்க்க முடிந்தது” என்றார்.

இந்த தாக்குதல் குறித்த எந்த தகவலும் மக்களுக்கு முன்கூட்டியே தெரிவிக்கப்படவில்லை என்கிறார் அவர். “பொது இடங்கள் எதுவும் மூடப்படவில்லை, பொதுமக்களுக்கு எந்த அறிவுறுத்தலும்






# திரும்புவோமா?

சாரதா வி

வழங்கப்படவில்லை. ஒரு வீடியோவில் ஷாப்பிங் மாலில் இருந்த மக்கள் இந்த சத்தம் கேட்டு, வெளியே ஓடி வருவதை காண முடிந்தது. தாக்குதலுக்கு பிறகும் எந்த அறிவிப்பும் இல்லை. சில மணி நேரத்தில் இயல்பு நிலை திரும்பிவிட்டது. மக்கள் மீண்டும் வெளியே செல்ல ஆரம்பித்தனர். செவ்வாய்கிழமை எப்போதும் போல் எல்லா அலுவலகங்களும் இயங்கி வருகின்றன. பள்ளி தேர்வுகள் மட்டும் ஒரு இடத்தில் ஒரு நாளுக்கு ஒத்தி வைக்கப்பட்டுள்ளதாக கேள்விப்பட்டேன்" என்றார். எனினும் அசாதாரணமான சூழல் ஏற்பட்டுவிடுமோ என்ற பயத்தில் மக்கள் அத்தியாவசியப் பொருட்கள் விற்கும் கடைகளில் நிரம்பி வழிந்தனர் என்கிறார் வைஷ்ணவி. "பெரிதாக பாதிப்பு ஏற்படாது என்ற தைரியம் இருந்தாலும், மற்றவர்களை பார்த்து, அடுத்த சில நாட்களுக்கு தேவையான பொருட்களை வாங்கி வைத்துக் கொள்ள கடைக்குச் சென்றோம். தண்ணீர் பாட்டில்கள் கிடைப்பதே சவாலாக இருந்தது. இரண்டு கடைகளில் கிடைக்காமல் மூன்றாவது கடையில் தான் வாங்க முடிந்தது. தயிர், பால், ரொட்டி,பாஸ்தா என அனைத்தையும் மக்கள் வாங்கிக் கொண்டிருந்தனர், கடைகளில் நிற்பதற்கு கூட இடம் இல்லை" என்றார். எனினும் உடனே நாடு திரும்ப வேண்டும், அல்லது உயிருக்கு ஆபத்து என்ற சூழல் நிலவவில்லை என்றும், ஏதேனும் ஒரு சூழலில், பாதுகாப்பான இடத்துக்கு மாற வேண்டும் என்று அரசு சொன்னால், உடனே புறப்படுவதற்கு தயாராக இருக்க வேண்டும்






என்றும் தெரிவித்தார்.

கத்தார் இரானுடன் நெருக்கமான பொருளாதார உறவுகளை கொண்டுள்ள அதே வேளையில், அமெரிக்காவுடனும் தனது உறவை மேம்படுத்திக் கொள்ளும் நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. கடந்த மாதம் அமெரிக்க அதிபர் டிரம்ப் கத்தார் சென்றிருந்த போது இரு நாட்டு உறவுகள் குறித்து ஆலோசிக்கப்பட்டது. அதே நேரம் இஸ்ரேல்—ஹமாஸ் மோதலில் கத்தார் மத்தியஸ்தம் செய்ததும் குறிப்பிடத்தக்கது.

சவுதி அரேபியா

சவுதி அரேபியாவிலும் கத்தாரிலும் தொழில் செய்து வரும் அப்துல் ஹாலிர் திங்கள்கிழமை இரவு தாக்குதல் தமிழ் குடும்பங்கள் மத்தியில் சற்று பதட்டத்தை ஏற்படுத்தியதாக தெரிவிக்கிறார். “கத்தார் அரசின் உள்துறை அமைச்சகமும், இந்திய தூதரகமும் அறிக்கை வெளியிடும் வரை சற்று பதற்றம் நிலவியது. இங்குள்ள தமிழ் சமூகம் மிகவும் நெருக்கமானது என்பதால், ஒருவருக்கு ஒருவர் எப்படி பாதுகாப்பாக இருக்க வேண்டும் என்று தகவல் பரிமாறிக்கொண்டோம்“ என்றார்.கத்தாரில் ஏழு ஆண்டுகளாக வசிக்கும் *சந்திரனும்(பெயர் மாற்றப்பட்டுள்ளது) தனது வீட்டில் அதிர்வுகளை உணர முடிந்தது என்று தெரிவித்தார். “மாலையில் திடீரென எனது வீட்டின் பின்பக்கம் உள்ள கதவுகள் பயங்கரமாக ஆட ஆரம்பித்தன. வெளியே சென்று பார்த்த போது, வானத்தில் குண்டுகள் வீசப்படுவதை காணமுடிந்தது. எதிர் திசையிலும் குண்டுகள் வீசப்படுவதை காண முடிந்தது. எனது வீடு அமெரிக்க ராணுவ தளத்திலிருந்து வெகு தொலைவில் கிடையாது. எனது குடியிருப்பில் இருந்த மற்ற இந்தியர்கள் தங்கள் உடைமைகள், பாஸ்போர்ட் ஆகியவற்றை எடுத்துக் கொண்டு குடும்பங்களுடன் உடனே புறப்பட்டுச் செல்ல தயாராக இருந்தனர்” என்றார். எனினும் போர் நிறுத்தம் அறிவிக்கப்பட்டுள்ளதால் இப்போது இயல்பு நிலை திரும்பியுள்ளதாகவும், பதற்றம் ஏதும் இல்லை எனவும் *சந்திரன் தெரிவித்தார்.

குவைத்

குவைத்தில் ஓட்டுநராக 20 ஆண்டுகளாக பணிபுரிந்து வரும் பீர் மரைக்காயர் போர் பதட்டம் காரணமாக விமான டிக்கெட் விலைகள் மிகவும் அதிகரித்துள்ளன என்கிறார். “வழக்கமாக குவைத்திலிருந்து திருவனந்தபுரம் செல்ல 80 முதல் 110 தினாருக்கு டிக்கெட்கள் விற்கப்படும். ஆனால் நேற்று 300 தினாருக்கும் அதிகமாக விற்கப்படுகிறது” என்கிறார். இரானில் உள்ள அணு திட்ட இடங்களை அமெரிக்கா தாக்குவதற்கு முன்பாக குவைத் அரசு, நாட்டு மக்களுக்கு எச்சரிக்கை விடுத்தது என்கிறார் அவர். “ஏதேனும் கசிவு இருப்பதாக அறிவிக்கப்பட்டால் பொது மக்கள் 48 மணி நேரங்களுக்கு வெளியே வரக்கூடாது, வெளியில் உணவை வாங்கி சாப்பிடக்




கூடாது, தண்ணீரை பாட்டில்களில் இருந்து மட்டுமே பருக வேண்டும் என அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டன. மக்களுக்கு எல்லா தகவல்களும் முன்கூட்டியே வழங்கப்படுவதால் அரசின் மீதான நம்பிக்கை இருக்கிறது. குவைத்தில் நான் இருந்த 20 ஆண்டுகளில் போர் குறித்த பதற்றம் ஏதும் இருந்ததில்லை. திங்கள்கிழமை இரவும் இங்கு இயல்பாகவே இருந்தது" என்கிறார்.

ஐக்கிய அரபு அமீரகம்

அபு தாபியில் கடந்த இரண்டு ஆண்டுகளாக வசிக்கும் பிரவீனா அமெரிக்க ராணுவ தளம் குறி வைக்கப்படுவது சற்று அச்சத்தை ஏற்படுத்தியுள்ளது என்கிறார். "கத்தாரில் உள்ள அமெரிக்க ராணுவ தளம் தாக்கப்பட்ட போது, துபாயில் உள்ள அமெரிக்காவின் ராணுவ தளமும் அடுத்த தாக்கப்படலாம் என்ற அச்சம் உள்ளது. இந்த போர் சூழல் தொடங்கியதிலிருந்தே அந்த பயம் உள்ளது. கத்தார் தாக்குதலை பார்த்த பிறகு, ஊரிலிருந்து அழைப்பவர்களும் பத்திரமாக இருங்கள் என்று தொடர்ந்து அறிவுறுத்திக் கொண்டே இருக்கிறார்கள். எனினும், உடனே நாடு திரும்ப வேண்டும், அல்லது பாதுகாப்பான இடத்துக்கு செல்ல வேண்டும் என்ற முடிவுகள் எடுக்கும் அளவு பதற்றம் இல்லை. நான் தங்கியிருப்பது அந்த ராணுவ தளத்திலிருந்து மிகவும் தொலைவு, ஒரு வேளை அருகில் இருப்பவர்களுக்கு பதற்றம் சற்று அதிகமாக இருக்கலாம்" என்றார்.

யேமன்

யேமன் நாட்டில் 1999—ம் ஆண்டு முதல் வசித்து வரும் விமான சேவை ஆலோசகர் சாமுவேல் ஜெரோம் பாஸ்கரன் அச்சப்பட வேண்டிய சூழல் இல்லை என்கிறார். "யேமனில் விமான நிலையம் தாக்கப்பட்ட போதும், அது மிகவும் குறிப்பான தாக்குதலாக இருந்தது. விமான நிலையத்திலிருந்து ஒரு கி.மீ தூரத்தில் இருந்தவர்கள் கூட அங்கிருந்து வெளியேறவில்லை. அல்—ஹூத்தி அமைப்பைச் சேர்ந்தவர்கள் மீது நடத்தப்பட்ட தாக்குதலில் இது வரை ஒரு இந்தியர் கூட உயிரிழக்கவில்லை. 2016—ல் உள்நாட்டு போர் உச்சத்தில் இருந்த போதும், இந்தியர்கள் குறிவைக்கப்படவில்லை. போர் சூழலிலும் சம்பளம் வழங்குவதில் இந்தியர்களுக்கு முன்னுரிமை வழங்கப்பட்டது. 13 நாடுகள் யேமனை எதிர்த்து போரிட்ட போதும், நாங்கள் பாதுகாப்பாகவே இருந்தோம். சவுதி அரேபியாவுடன் போர் நடைபெற்றுக் கொண்டிருந்த போதும், அங்கிருந்து பால் உள்ளிட்ட அத்தியாவசிய பொருட்கள் கிடைத்துக்கொண்டு தான் இருந்தன" என்றார்.

எனினும் போர் நடைபெறும் பிராந்தியத்தில் இருக்கும் அச்சுறுத்தல்கள் இருக்க தான் செய்கின்றன என்கிறார். "தனிப்பட்ட காரணத்துக்காக இந்தியா வந்த நான், சனா விமான நிலையம் தாக்கப்பட்டதால் உடனே திரும்பி செல்ல இயலவில்லை. யேடன் நகருக்கு சென்று அங்கிருந்து தான் சனா செல்ல வேண்டும். ஆனால் உள்நாட்டுப்போர் காரணமாக யேமனில் உள்ள ஏடன் நகரத்துக்கு செல்லவே, தனியாக விசா பெற வேண்டும். திடீரென சாலையில் நடந்து செல்லும் போது குண்டு வீச்சில் உயிரிழப்பதற்கான வாய்ப்புகள் அனைவருக்கும் உண்டு. போர் எங்கள் வாழ்வின் ஒரு பகுதியாகிவிட்டது என்று கூறலாம்." என்கிறார்.



சரித்திரத் தொடர்

# சேரமான் கனவு

## பாகம் - 2 அத்தியாயம் 7

### 7 அலை செய்த மாயம்!

**கொற்றவன்**

**கா**லைக் குளியல் தாலியாவின் உடலுக்குப் புதுத்தெம்பைக் கொடுத்திருந்தாலும், உள்ளம் பெருத்த சிந்தனை வயப்பட்டதாகவே இருந்ததை அவளது நடை காட்டியது. அந்த ஆழ்ந்த சிந்தனையின் காரணமாக வளவத்திரையன் அமர்ந்திருப்பதைக் கூடப் பாராமலே, அந்தப் பொன்மேனியாள் தளிர் நடையுடன் கரையை வந்தடைந்து நின்றாள்.

வளவத்திரையன் அவளையே கூர்ந்தபடி இருந்தான்.

நீர்வழிய நின்றவளின் பேரழகுத் தோற்றம் அவனைப் பெரிதும் ஈர்த்தது. அவளது பொன்னுடலில் மாணிக்கங்களாய் மின்னிய நீர்த் துளிகள், அவளை ஒரு தேவலோகக் கன்னிகையாய் காட்டியது. தன்னையும் மறந்து அவளை இப்படி ரசிக்கிறோமே என்ற எண்ணம் எழுந்ததன் விளைவாக, தன் மனத்தைக் கட்டுக்குள் வைக்க நினைத்தவனின் மனத்தில் முதல் நாள் இரவு நடந்த அந்தக் காட்சி சில நொடிகள் ஓடி மறைந்தன.

முதல் நாள் இரவு தாலியாவும் தியோதாராவும் பேசிக் கொண்டிருந்ததில் இருந்து, தன்னை ஒருதலையாக, உயிருக்குயிராக தாலியா விரும்புகிறாள். இது தொடர்பாக அவளுக்கு உதவி செய்ய வில்லவரும் தியோதாராவும் துணை நிற்கப் போகிறார்கள் என்பது வளவத்திரையனுக்குத் தெள்ளத் தெளிவாகப் புரிந்து விட்டது.

அப்படியானால்...

இங்கே இப்போது திடீரென அவள் தோன்றியது கூட ஒருவகையில் திட்டமிட்டு நடக்கிறதோ எனவும் மனதுள் மருங்கினான்.

இவ்வாறான எண்ணங்கள் ஓடிக் கொண்டிருந்தாலும், தியோதாரவின் மேல் நிலைத்த விழிகளை விலக்காமலே இருந்தான்.

நீர் வழியும் உடலைக் குலுக்கி உதறியவளின் பார்வை, ஒருமுறை இடமும் வலமுமாகப் பதிந்து, இங்கே தன்னைத் தவிர யாருமில்லை என்பதான உறுதி செய்துகொண்டபின், முழங்காலுக்கு மேல் தன் ஆடையைத் தூக்கிப் பிடித்துப் பிழிந்தவள், இடைக்கும் மார்புக்கும் சேர்ந்தாற்போல் இட்டிருந்த முடிச்சை அவிழ்த்தாள்.

கணப்பொழுதில் அவள் முற்றாய் துகில் கலைந்து நிற்கப் போகிறாள் என்பதை உணர்ந்த வளவத்திரையன், சடாரெனப் பாறையிலிருந்து எழுந்து மணலில் குதித்தபடியே “நில் தாலியா!” எனப் பதறினான்.

அங்கே திடீரென குரல் கேட்டதில் அதிர்ந்து திரும்பிய தாலியாவுக்கு, அந்த அதிர்ச்சியில்



கொத்தாகப் பிடித்திருந்த துகில், அவள் கரங்களில் இருந்து நழுவவே, இடையை மறைக்க முயன்று பாய்ந்த கரங்களால் தனங்களை மறைக்கவியலாமல் போயிற்று.

சடாரெனத் கடற்புறம் திரும்பி, கரைக்கு முதுகு காட்டிக் கொண்டு நின்றவளின் இதயத் துடிப்பு ஏகமாய் எகிறியது.

நீர் வழிந்த உடலைத் துவட்டிக் கொள்ள மேலாடையை நீக்கிய தன்னை வளவத்திரையன் பார்த்துவிட்டான் என்பதை உணர்ந்த தாலியாவின் மனதில் அச்சமும் நாணமும் குடிகொண்டு ஆட்டுவிக்க, கடற்பரப்பில் அவள் கண்கள் அலையாடின.

கரையோரத்தில் எழுந்த சிற்றலைகளை விடவும், அவளது மனதில் எழுந்த பேரலைகள் எங்கெங்கோ கொண்டு செல்வதை உணர்ந்தவளின் உடல், இன்பமும் இனந்தெரியா துன்பமுமான உணர்ச்சிகளால் நடுங்கியது.

தன் மனங்கவர்ந்த வளவத்திரையன், ஆடையிழந்த தன் எழில்களை முற்றாய் பார்த்து விட்டான் என்றாலும், இப்படி எதிர்பாராத விதமாய் இது நடந்தது அவளுக்கு அதிர்ச்சியாகவே இருந்தது.

தான் சிலையாகவே இப்போது நின்றிருந்தாலும், தன் நாணத்தையும், அச்சத்தையும், தனது அங்கங்களின் அசைவையும் வளவத்திரையனின் பொல்லாத கண்கள் இந்நேரம் அள்ளிப் பருகிக் கொண்டிருக்கும் என்பதை உணர்ந்தவளுக்குள் இனம்புரியாத குறுநகையும் மலர்ந்தது.

அவள் தனக்கு முதுகைக் காட்டி நின்றபோதே, தானும் முகம் திருப்பி திரும்பிக் கொண்ட வளவத்திரையன், “தாலியா, முதலில் கீழே விழுந்த துகிலை எடுத்து நீ உன் ஆடையைச் சரி செய்து கொள். நான் முகம் திரும்பித்தான் நிற்கிறேன்.” என்றான்.

கீழே விழுந்த துகிலை எடுக்க வேண்டுமே என்ற பதற்றம் மேலிட்டாலும், முன்னால் திரும்பிக் குனிந்து துகிலை எடுக்க அவளுக்கு நாணம் தடைபோட்ட காரணத்தால், என்ன செய்வதென்று தெரியாமல் தவித்தவளுக்கு வளவத்திரையனின் அந்தக் குரல் தெம்பூட்டியது.

மெல்லத் தலையை மட்டும் திரும்பிய தாலியா ஓரக்கண்ணால் அவனைக் கவனித்தாள். அவனும் தனக்கு முதுகுக் காட்டியபடி நின்ற கோலத்தை.

தனது அழகைப் பார்ப்பதற்கு வாய்ப்பிருந்தும், முகம் திருப்பிக் கொண்டு நிற்பவனின் கண்ணியத்தை நினைத்துப் பெருமை கொண்டாள். அவனக் கவனித்தவாறே குனிந்து துகிலை எடுத்து விறுவிறுவென முதுகோடு சேர்த்து மார்பையும் இழுத்துச் சுற்றிக் கொண்டாள்.

அவள் அவ்வாறு தன்னைப் போர்த்திக் கொண்டதை அறியாதவனாய் நின்றிருந்தவனைக் கூர்ந்தாள் தாலியா.

என்னை ஏறெடுத்தும் பாராத இவரது மனத்தைத்



நிலையை உணர்ந்து உயர்ந்த ஆண்மகனுக்கான இ ல க் க ண த் து ட ன் அவளை அதற்குமேலும் பார்க்கவியலாமல், முகம் திருப்பிக் கொண்டான்.

பவழத் தீவின் அந்தக் காலைப் பொழுதில் இப்படியான எதிர்பாரா சம்பவம் நடக்கும் என்று இருவருமே சில கணங்களுக்கு முன் நினைத்திருக்கவில்லை!

அந்த அதிசயக் கணங்கள் நீண்டு கொண்டே இருந்ததால், உணர்வுகளின் அ லை க் க ழி ப் பி ல் அ வ் வி ரு வ ரு ம் சி லை க ள ா க வே நின்றிருந்தனர்.

மு த லி ல் வ ள வ த் தி ரை ய னே சுயநிலை பெற்று பேசத் தொடங்கினான்.

“தாலியா நீ எப்படி இங்கு வந்தாய்? ஏன் வந்தாய்?”

தன் மனம் எந்நேரமும் நாடுவது ஏனோ என்ற எண்ணம் எழுந்தாலும், வளவத்திரையன் தன்னை நன்றாகப் பார்த்திருக்கூடும் என்பதையும் அவள் உணர்ந்திருந்தாள்.

இப்போது முகம் திருப்பிக் கொண்டாலும், அலைகளில் தான் நீர் வழிய நடந்து வரும்போதும், கரை வந்து நின்றபின் துகில் கலைந்த போதும் கண்டதனால்தானே குரல் கொடுத்தார்?

ஒரு பெண்ணை இப்படியான கோலத்தில் ஒரு ஆடவன் ரசிக்காமல் இருப்பாரோ? அப்படி ரசித்திருந்தால்?...

ஒருவகையில் கந்தர்வ முறையில் தன்னை மணம் கொண்டதாக அர்த்தமாகுமோ? இப்படியான விசித்திர உணர்வால் தாக்குண்டவளின் இதழ்கள் சுழிந்தன.

அலைகளில் நடந்து வந்தது முதல், துகில் களைந்து நின்றது வரை வளவத் திரையனும் தாலியாவை நன்றாகவே பார்த்திருந்தான். பொன்னுடலில் முத்துக்களாய் திரண்ட நீர்த் துளிகளுடன் அசைந்த அவளது அங்கங்களையும், அதில் பொலிந்த அழகையும், தன்னை மறந்து ரசிக்கவே செய்தானானாலும், சட்டெனத் தன்

“ஏன்? இந்தத் தீவில் நான் நடமாட உங்களிடம் அனுமதி பெற வேண்டுமா என்ன?” சற்றே அனல் தெரித்தது அவளது குரலில்.

“என் கேள்விக்கு பதில் தராமல், நீ கேள்வி எழுப்புவது நியாயமல்ல.” அவன் குரலிலும், அனல் பறக்கவே, தாலியா சற்று அமைதியானாள்.

மீண்டும் அங்கே அமைதி நிலவ, திருமாமல் நின்ற நிலையில் இருந்து வளவத்திரையனே இம்முறையும் பேசினான்.

“இப்படித் தனியாக வந்து நீராடலாமா? ஏதேனும் ஆபத்து நேரிட்டால்?” என்றவனின் குரலில் இம்முறை கரிசனம் மிகுந்திருந்தது.

“இதுவரை எந்த ஆபத்தும் வரவில்லை! உங்களைப் பார்த்தால்தான் பயம் வருகிறது. இப்போது நீங்கள் முகம் பார்த்துப் பேசலாமே!”

“என்னையா? ஏன்?” என்றவாறே திரும்பி அவளைப் பார்த்தான்.

நனைந்த உடலோடு ஈர ஆடையில் நின்றவளின் அங்கங்கள் அவனைத் திக்குமுக்காடவே செய்தது.

“நான் நீராடுவதையும், வந்து நின்றதையும்



பார்த்ததோடு நில்லாமல்...” என்றவள் அதற்குமேல் பேசத் தடுமாறி நாணினாள். அவள் முதல்முறையாக நாணுவதைக் கண்டவன் வியப்புற்றான்.

எப்போதும் துடுக்குத்தனமாகவே தன்னிடம் பேசும் தாலியாவா இவள்? என்ற எண்ணமும் எழுந்தது. அந்தச சிந்தனையினூடே அவளைப் பார்த்தபடி வினவினான்.

“சொல். பார்த்ததோடு நில்லாமல்...” என அவள் விட்ட வார்த்தைகளை முடிக்கத் தூண்டினான்.

“என்னைப் பார்க்கக் கூடாத கோலத்தில் பார்த்து விட்டீர்கள் அல்லவா?”

அவள் சட்டென அவ்விதம் கேட்டதில் தடுமாறிய வளவத்திரையன், அதைக் காட்டிக் கொள்ளாமல், எதிர்வினா தொடுத்தான்.

“தனிமையில் நீராடும் பெண்ணொருத்தி, சுற்றிலும் இருக்கும் சூழலை நன்கு கவனிக்க வேண்டாமா? ஆள் இருப்பது கூடத் தெரியாமல் ஆடையைக் களையலாமா? நான் அமர்ந்திருந்ததை நீ உண்மையிலேயே கவனிக்கவில்லையா?... இல்லை... தெரிந்துதான் இப்படி நடந்துக் கொண்டாயா?”

அந்த வார்த்தைகளைக் கேட்டதும், தாலியாவின் கண்கள் கோபத்தில் சிவந்தன. அதரங்கள் துடித்தன. தன் சினத்தைக் கட்டுக்குள் வைத்துக் கொண்டவளின் வார்த்தைகள் வலுவிழந்து வந்தன.

“திரையரே, தங்களிடமிருந்து இப்படியான வார்த்தைகளை நான் எதிர்பார்க்கவில்லை. ஒரு பெண்ணை இப்படிக் கீழ்த்தரமாகப் பேசுவீர்கள் என நான் கொஞ்சமும் எதிர்பார்க்கவில்லை. பெண்கள் மீது அளவற்ற அன்பையும் மதிப்பையும் காட்டுபவர் என்றல்லவா எண்ணினேன். அந்த எண்ணத்தைப் பொய்யாக்கி விட்டீர்களே!” என்றவளின் வார்த்தைகளில் வலி மிகுந்திருந்தது.

“தாலியா, நான் என்றும் பெண்களை மதிப்பவன் மட்டுமல்ல, வணங்குபவனும் கூட. அதில் உனக்கு ஐயம் வேண்டாம். தெய்வத்தையே பெண்ணாகப் பாவித்து வணங்குவது எங்கள் மரபு. எங்கள் இலக்கியங்களும், இதிகாசங்களும் கூட அதைதான் எடுத்தியம்புகின்றன. அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம் எனும் தமிழ் வாசகத்தினைப் படித்த எவரும், தாய்க்குலத்தை இழிவு செய்ய நினைப்பாரா?”

“அறம் படித்து என்ன பயன்? அதைப் பின்பற்ற வேண்டாமா? மேலும் உங்கள் இலக்கியம் சிலவற்றை நானும் தியோவும் படித்திருக்கிறோம். ஏன், கண்ணகியின் கதையைக் கூட, செவிவழிச் செய்தியாகக் கேட்டிருக்கிறோம். கோவலன் முதலில் கண்ணகியைக் கைவிட்டான். பிறகு மாதவியையும் புறக்கணித்தான். அந்தக் கதையைத்தானே உங்கள் இளங்கோ இப்போது எழுதிக் கொண்டிருக்கிறார். பெண்களைத் துறப்பதுதான் உங்கள் இலக்கியச் சிறப்பா?” எனப் படபடவென பொரிந்தாள்.

“தாலியா, எங்கள் இலக்கியச் சிறப்பை முழுதுமாகத் தெரிந்துக் கொண்டால் இவ்விதமெல்லாம் கேள்வி கேட்கமாட்டாய். எதையும் தெரிந்துக் கொள்வதை விடவும், புரிந்துக் கொள்ளப் பார். மேலும், நான் உன்னிடம் எழுப்பிய தனிப்பட்ட கேள்வியை

மொத்த மகளிர் குலத்துக்கு எதிராகவும் எழுப்பிய கேள்வியாகத் திருப்பி விடாதே!" என அமைதியாகக் கூறினான் வளவத்திரையன்.

"என்ன கேட்டீர்கள் அப்படித் தனிப்பட்ட முறையில்?"

"சரிதான்! கேட்ட கேள்வி கூட உனக்கு நினைவில்லையா?"



"இருக்கிறது. நான் அமர்ந்திருந்ததை நீ உண்மையிலேயே கவனிக்கவில்லையா? இல்லை தெரிந்துதான் இப்படி நடந்துக் கொண்டாயா? என்றீர்கள்."

"ஆம். அதில் ஒன்றும் தவறில்லையே. பிறகு ஏன் என்னைப் பெண்குலத்துக்கே எதிரானவன் போலக் குற்றம் சாட்டுகிறாய்? ஒரு பெண் சுற்றிலும் இருக்கும் நிலைமறந்து, ஒரு ஆடவன் இருப்பதைக் கூட அறியாமல் ஆடை களையலமா?"

"தவறுதான் திரையரே. என் மனதின் பலவீனம் என்னைக் கண்மறைத்து விட்டது. அதுதான் மேலும் மேலும் என்னை நிலைகுலையச் செய்கிறது. பெண்ணாகப் பிறப்பெடுத்து விட்டாலே, ஏதோ ஒருவகையில் அல்லும் பகலும் அல்லாடப் பிறந்தவளாகத்தான் இருக்க வேண்டும் போலிருக்கிறது. என்னைப் பொறுத்தவரை எப்போதும் விதி எனக்கு எதிராகவே வேலை செய்து கொண்டிருக்கிறது என்பதைத் தவிர வேறென்ன சொல்ல?" என்ற தாலியாவின் கண்கள் அலைகடல் நோக்கித் திரும்பின.

அவளுக்குள் ஏதேதோ நினைவுகள் அலைகளாக எழும்பி மோதின. அதன் விளைவாக அவளது கண்கள் மீண்டும் கலக்கம் கண்டன.

அவள் மனத்தின் போராட்டத்தை உணர்ந்தவனாக அமைதியாகப் பேசினான் வளவத் திரையன்.

"நீயும் தியோதாராவும் நேற்றிரவு பேசிக் கொண்டிருந்ததை, தற்செயலாகக் கேட்க நேரிட்டது தாலியா."

அவன் அதை அவளைப் பார்த்துக் கூறாமல் அலைகடலைப் பார்த்தே கூறினான். ஆனால் அவள் அலைகடலை விடுத்து சடேரென அவன் பக்கம் திரும்பினாள்.

"நீ என்னை விரும்புவதை அப்போதுதான் அறிந்தேன் எனப் பொய் கூற விரும்பவில்லை. உன் விருப்பத்தை நான் முன்பே அறிவேன். ஆனால்... என் நிலையை... நானும் கயல்விழியும் மனதார விரும்புகிறோம் எனும் விவரம் தெரிந்த பின்பும் நீ..." என்றவன் சில நொடிகள் அமைதிக்கும் பின், "என்னை... விரும்புவது முறையில்லை தாலியா." அந்த வார்த்தைகளைச் சற்று அழுத்தம் கொடுத்தே கூறினான்.

அந்த வார்த்தைகளக் கேட்ட மாத்திரத்தில் தாலியாவின் கண்கள் உடைப்பெடுத்தன. கண்கள் மளமளவெனக் கண்ணீரைச் சொரிந்தன. அவளது காலுக்குக் கீழ் தரை சரிவது போலுணர்ந்தாள்.

நா குழற... எதையோ சொல்ல முற்பட்டாவள், "திரையரே... என்னை..." என்றவளின் வார்த்தைகள் முடிவதற்குள் கண்கள் மேல் சொருக, மயங்கிச் சரியத் தொடங்க...

சடாரென அவளைத் தாங்கிப் பிடிக்க வளவத் திரையன் பாய...

அதே கணத்தில்...

ஒரு பேரலை அவர்கள் தலைக்கும் மேலாக எழுந்து வந்து மோதியது...

(கனவு தொடரும்...)



படைப்பாளிகளுக்கு...
* சிந்திப்போம்..
* படைப்போம்..
* மகிழ்வோம்!
*இதழில் வெளியாகிற
கவிதைகள்,கட்டுரைகள்,எழுத்தோவியங்கள்
யாவும் படைப்பாளிகளின்
பெருமைக்கும் பொறுப்புக்கும் உரியவை!
தொடர்புகளுக்கு
editor@ithamil.com

# சிட்டுக்குருவி

சிட்டுக்குருவிகளின் கிசு கிசுத்த
காதல் பேச்சில்
தூக்கம் கலைந்த ஆதவன்
சினம் கொண்டு சிவந்தான்
சுட்டெரிக்க பின் தொடர
மரங்களில் மறைந்தன குருவிகள்

கோபத்தில் தவறுதலாக கழுகுகளின்
கழுத்தை கறுக்கினான்
குருவிகள் கொரில்லா போர்முறையில்
ஆதவனிடம் விளையாட்டு காட்டின
நடுவானம் வந்து
மனிதனை வெறுப்பேற்றினான்

குடைகொண்டு தன்னாட்சி செய்த
மனிதனின் அறிவு வியந்து
சிட்டுக்குருவி மீதான
கோபம் சொன்னான்

ஆதவனுக்கு உதவ
மனிதன் கைபேசி கோபுரங்கள் நட்டு
சிட்டு குருவிகளின் சிறகுகளை
காட்டுக்குள்ளே முடக்கினான்

**வி. பிச்சுமணி**

# அன்னைத் தமிழ்

மொழிகளுக்கெல்லாம் அரசி தமிழ்!
எனக்கு வாழ்வு தந்த அரசியோ
எனது அம்மா தமிழரசி!
தமிழுக்கும் என் தாய்க்கும் தொடர்புண்டு!
எனது தாய்மொழியின் பெயரோ தமிழ்!
என் அம்மாவின் பெயரும் தமிழ்!
தாய்மொழி தமிழோ எனது உயிர்மூச்சு!

எனக்கு சுவாசம் தந்த உயிரோ
என் அன்னை தமிழ்!
எனது தாயாகிய தமிழின் சுவாசம்
பிரிந்தது என்னைவிட்டு!
தாய்மொழியாம் தமிழ் மொழியால்
அவள் சுவாசத்தை
ஸ்பரிசிக்கிறேன் தினமும்!
தமிழை வாசிக்கும் போதெல்லாம்
அம்மாவின் ஸ்பரிசத்தை உணர்கிறேன்!
தமிழை உயிரென நேசித்து
என் அம்மாவின் சுவாசத்தை
உயிர்த்தெழ வைப்பேன் தினமும்!

எனது தாயாகிய
தமிழ் என்னைப் பிரிந்தாலும்
எனது தாய்மொழியான தமிழை
என் உயிர் உள்ளவரை சுவாசிப்பேன்!

**திவ்யபாரதி நடேசன்**

# மழைத்துளியா ? மறுபிறவியா ?

கங்கையும் கழனியும்
கதிரவன் ஒளி பட்டு
கணத்தில் ஆவியாகி
அந்தரத்தில் ஆனந்தமாய்
பவனிவரும்

அடித்த காற்றில் திசைமாறி
இடித்த இடியில் இடம் மாறி
கங்கையிலும் கழனியிலும்
மறுபடியும்
விழுந்த மழைத் துளியில்
கங்கை எது? கழனி எது?

மகானும் மாபாவியும்
காலனின் கயிறு தொட்டு
நொடியில் ஆவி அடங்கி
அண்டம் தொடாத
ஆத்மாக்களாய் உலவும்
பாவக்கணக்கில் இடம்மாறி
புண்ணியக் கணக்கில் இனம்மாறி
மகானாய் மாபாவியாய் என்றிருக்க
மறுபடியும் ஜனித்த சிசுக்களில்
மகான் யார்?
மாபாவி யார்?

**கோமதி நடராஜன்**

# குடைக்கம்பிகள்

மழை தாண்டி வந்ததும்
திண்ணையில் விரித்து
வைக்கப்பட்டிருந்தது குடை
தரை தொடும் அதன் ஒவ்வொரு
கம்பிகளும் தரையில்
விழிநீர் வழிய எழுதியது
தன் கதைகளை.

யாரும் வாசிப்பதற்காக
இல்லை எனினும் தன்னை
சுருட்டி ஓரமாய் வைக்கையில்
சோகங்கள் மறந்து
தன் கனவின் மடிப்புகளுடன்
அடுத்த மழைவரைக்கும்
நிம்மதியாக தூங்கும்படிக்கு.

**கலாசுரன்**

## கீர்த்தி ஷெட்டிக்கு தெலுங்கில் மவுசு!



### கீர்த்திக்கு தமிழிலும் பெருகட்டும் கீர்த்தி!

தெலுங்கில் கீர்த்தி ஷெட்டிக்கு தனி மவுசு. அவர் நடிப்பு, டான்ஸ் அழகிற்கு ஏகப்பட்ட ரசிகர்கள். ஆனால், தமிழில் அவர் நடித்த வாரியர், கஸ்டடி படங்கள் ஓடவில்லை. ‘வாரியர்’ படத்தில் இடம் பெற்ற ‘புல்லட்டு’ பாட்டு மட்டும் ஹிட்டானது. இப்போது கார்த்தி ஜோடியாக வா வாத்தியார், பிரதீப் ரங்கநாதனுடன் எல்ஐகே, ரவிமோகன் ஜோடியாக ஜீனி ஆகிய படங்களில் நடித்து கீர்த்தி வருகிறார். இந்த ஆண்டு ரிலீசாகும் இந்த மூன்று படங்களும் வெற்றி பெற்றால் தமிழில் பெரிய ரவுண்டு கீர்த்திக்கு காத்திருக்கிறது.

## சித்தார்த் சிறப்பான நடிப்பில் ‘3 பிஎச்கே’



### நல்முத்தா படங்கள் தரட்டும் சித்தா!

‘சித்தா’ படத்தின் வெற்றிக்குப் பின், கமலுடன் இந்தியன் — 2, மிஸ் யூ ஆகிய படங்களில் நடித்ததைத் தொடர்ந்து, நடிகர் சித்தார்த்தின் 40—வது படமாக அமைந்துள்ளது ‘3 பி.எச்.கே.’ ஸ்ரீ கணேஷ் இயக்க, சாந்தி டாக்கீஸ் நிறுவனம் தயாரித்துள்ள இப்படத்தில் நடிகர்கள் சரத்குமார், தேவயானி, சைத்ரா அச்சர் ஆகியோர் பிரதான பாத்திரங்களில் நடித்துள்ளனர். இப்படம் வரும் ஜூலை 4 ஆம் தேதி வெளியாகவிருக்கிறது. தொடர்ந்து வித்தியாசமான படங்களில் கவனம் செலுத்தும் சித்துவுக்கு இப்படமும் வெற்றி தரும் என்ற எதிர்பார்ப்பு எழுந்துள்ளது

## வசூல் ராணியாகும் ராஷ்மிகா!



### ‘எகிறி அடிக்கும் ராஷ்மிகா!?

தென்னிந்திய மொழிகளில் மட்டுமல்லாமல், இந்தியிலும் பல நட்சத்திர நடிகர்களுடன் நடித்து வரும் ராஷ்மிகா மந்தனா, சமீபத்தில் தனுஷுடன் நடித்த ‘குபேரா’ வசூலில் 100 கோடியைக் கடந்து வெற்றி பெற்ற நிலையில், கதாநாயகியை மையமாகக் கொண்ட ஒரு படத்தில் நடித்துள்ளார். இப்படத்தின் போஸ்டரை படக்குழு வெளியிட்டுள்ளது. அதில் மிகவும் ஆக்ரோஷத்துடன் கையில் ஒரு ஆயுதத்துடன் நிற்கும் ராஷ்மிகாவைச் சுற்றி அடியாட்கள் தாக்க வரும் காட்சி இடம் பெற்றுள்ளது. ராஷ்மிகாவின் அந்தப் படத்துக்கும் இப்போதே எதிர்பார்ப்பு கூடத் தொடங்கியுள்ளது.

## சிம்புவின் அடுத்த மாநாடு கூடவிருக்கிறது



### இந்த மாநாட்டுக்கும் கூட்டம் வருமா?

நீண்ட இடைவெளிக்குப் பின், சிம்புவுக்கு பெரும் வெற்றியை அளித்த படம் ‘மாநாடு’. இதன் டைம் லூப் காட்சிகள், காமெடி, திரைக்கதை, எஸ்.ஜே.சூர்யாவின் நடிப்பு என அனைத்துமே மக்களிடையே பெரும் வரவேற்பைப் பெற்றன. தற்போது சிம்பு — வெங்கட் பிரபு கூட்டணி இணைந்து ‘மாநாடு 2’ தொடங்க முடிவெடுத்திருக்கிறார்கள். இதனையும் சுரேஷ் காமாட்சி தயாரிக்க, விரைவில் இதற்கான அடுத்தக் கட்ட வேலைகள் நடைபெறவிருக்கிறது.



# தல வலம்

## ஸ்ரீவைகுண்டம்

### (வைகுண்டநாதப் பெருமாள்)

புவனகிரி செயபாலன்

'எங்கள் கண்முகப்பே உலகர்கள் எல்லாம்
இணையடித் தொழுது எழுந்து இறைஞ்சி
தங்கள் அன்பு ஆரத்தமது சொல் வளத்தால்
தலைத் தலைச் சிறந்து பூசிப்ப
திங்கள் சேர் மாடதிருப்புளியங்குடியாய்
திருவைகுந்தத்து உள்ளாய் தேவா
இங்கண்மா ஞாலத்து இதனுள்ளும் ஒருநாள்
இருந்திடாய் வீற்றிடம் கொண்டே'
—நம்மாழ்வார் பாசுரம்

108 திவ்யதேசங்களில் 81—வதும், பாண்டியநாட்டில் உள்ள வைணவ நவ திருப்பதிகளில் சூரியனுக்குரிய முதலாவது தலமாகும்.

மூலவர் — வைகுண்ட நாதர் (நின்ற கோலம்)
உற்சவர் — கள்ளர் பிரான், (சோரநாதர்)
தாயார் — வைகுந்த நாயகி (சோர நாயகி)
விமானம் — இந்திர விமானம்
தலவிருட்சம் — பவள மல்லி
தீர்த்தம் — தாமிரபரணி (கலச) தீர்த்தம், பிருகு தீர்த்தம்
தொன்மம் — ஆயிரம் வருடங்களுக்கு முற்பட்டது.

வரலாறு

சத்திய லோகத்தில் பிரம்மன் ஆழ்ந்த நித்திரையில் இருந்தபோது, கோமுகாசூரன் என்னும் அரக்கன் அவரிடம் இருந்து நான்கு வேதங்களையும் அபகரித்துச் சென்றான். துயில் நீங்கி எழுந்த பிரம்மன் இதனை அறிந்து வருந்தி, அதனை அவனிடமிருந்து மீட்கும் பொருட்டு மகாவிஷ்ணுவை குறித்து தவம் செய்ய எண்ணினார். தன் கையில் இருந்த தண்டத்தை ஒரு பிரம்மச்சாரியாக மாற்றி, 'பூவுலகில் தாமிரபரணி நதிக்கரையில் தவம் புரிய ஒரு இடத்தை பார்த்து வா.' என்று அனுப்பி வைத்தார். அவனும் நதியின் இரு கரைகளையும் பார்த்துவிட்டு இறுதியாக, திருக்கோளூருக்கு அருகில் உள்ள ஜெயந்திபுரிக்கு வந்தான். அங்கு இருந்த ஒரு மோகினியைக் கண்டு மோகித்து, பிரம்மன் கட்டளையை மறந்து அவளுடன் வாழலானான்.

இதை அறிந்த பிரம்மன், தன் கையில் இருந்த கெண்டியை ஒரு பெண்ணாக்கி, 'பெண்ணே தவம் இயற்ற தாமிரபரணி நதிக்கரையில் ஒரு



நல்ல இடம் பார்த்து வா!' என்று அனுப்பி வைக்க, அவளும் பூவுலகை வெகுநாள் சுற்றி, சோலைகள் நிறைந்த தாமிரபரணி பாயும் இந்த இடம் தவத்திற்குரிய சிறந்த இடம் எனப் பிரம்மனிடம் தெரிவித்தாள்.

பிரம்மா இங்கு வந்து கடும் தவம் செய்ய, மகாவிஷ்ணு அவருக்குக் காட்சி கொடுத்ததுடன், கோமுகாசூரனை வதம் செய்து அவனிடமிருந்து நான்கு வேதங்களையும் மீட்டுக் கொடுத்தார். பிரம்மன் அகமகிழ்ந்து தனக்காக வைகுண்டத்தில் இருந்து இங்கு எழுந்தருளி சேவை சாதித்தாரோ, அது போல் இங்கு தங்கி நித்திய சேவை சாதித்து அடியவர்களுக்கு அருள் புரிய வேண்டும் என்று வேண்டினார். # பிரம்மனின் வேண்டுகோளுக்கு இணங்கி, பெருமாள் இங்கு வைகுண்டநாதராக நித்திய சேவை சாதிக்கிறார். இதனால் இத்தலம் திருவைகுண்டம் என்ற சிறப்பு பெற்றது.



வைகுண்ட நாதர்

பிரம்மனால் பூஜிக்கப்பட்ட வைகுண்ட நாதர் எழுந்தருளியிருந்த சிறிய கோயில் பிற்காலத்தில் சிதிலமடைந்து மண்ணுக்குள் புதைந்து விட்டது. இப்பகுதியை பாண்டியர்கள் ஆட்சி செய்தபோது தற்போது கோயில் உள்ள பகுதிகளில், அரண்மனை பசுக்கள் மேய்வது வழக்கம்! இப்பசுக் கூட்டத்தில் ஒரு பசு வைகுண்ட நாதர் புதையுண்ட இடத்திற்கு நேர் மேலே உள்ள துவாரத்தில் தினமும் தனது பாலைச் சொரிந்தது.

இதைக் கண்ட பசு மேய்ப்பவர் அரசரிடம் தெரிவிக்க, அரசர் தன் புடைச்சூழ இங்கு வந்து பூமியைத் தோண்ட, அங்கு ஆதிசேஷன் குடை பிடிக்க பெருமாள் சாலக்கிராம மாலை அணிந்து, சங்கு சக்கரம் மற்றும் கதை அபயம் முத்திரையுடன் காட்சி தந்தார். இதன் பின் பாண்டிய மன்னன் இக்கோயிலைப் பிரம்மாண்டமாகக் கட்டியதாக வரலாறு கூறுகிறது. கி.பி. 1801 ஆம் ஆண்டில் வீரபாண்டிய கட்டபொம்மன், ஆங்கிலேயர்களை எதிர்த்துப் போரிட்டபோது இக்கோயிலை நேரிடையாக பயன்படுத்தியதாகக் கூறப்படுகிறது.

நவ திருப்பதி — முதலாவது

நவ திருப்பதி தலங்களில் முதலாவதான இத்தலம், சூரியனுக்கு உரியது. இங்கு சுவாமி இந்திர விமானத்தின் கீழ், கையில் தண்டத்துடன் நின்ற நிலையில் கிழக்கு நோக்கிக் காட்சி தருகிறார். தலைக்கு மேல் ஆதிசேசன் குடையாக இருக்கிறார். பெருமாள் உடன் தாயார்கள் கிடையாது. பிரகாரத்தில் வைகுந்த வள்ளி தாயார் சன்னதி உள்ளது. ஒன்பது நிலை கொண்ட ராஜகோபுரம். இதன் நீளம் 110 அடியும், அகலம் 500 அடியும் கொண்டது.

கருவறை

கருவறையில் உள்ள வைகுண்ட நாதர் பாதத்தில், ஒவ்வொரு ஆண்டும் சித்திரை மாதம் ஆறாம் நாளிலும், ஐப்பசி மாதம் ஆறாம் நாளிலும் காலையில் சூரிய ஒளி விழும். இதற்கு ஏற்றார்போல, சுவாமி சன்னதி எதிரில் உள்ள கொடிமரம், பலிபீடம் தென்புறம் சற்று விலகி உள்ளது குறிப்பிடத்தக்கது.

தாயார்கள் (வைகுந்த நாயகி)

ஸ்ரீதேவியின் அம்சமான பெரிய பிராட்டியார் நான்கு கரங்கள் கொண்டு அமர்ந்த காலத்தில் காட்சி தருகிறார். இவருக்கு பெருமாளின் வலப்புறம் தனி சன்னதி உள்ளது.

சோரநாத நாயகி

பூதேவியின் அம்சமான பூமி பிராட்டியார் நான்கு கரங்களுடன் அமர்ந்த காலத்தில் காட்சியளிக்கிறார். இவருக்கு பெருமாளின் இடதுபுறத்தில் தனி சன்னதி உள்ளது. பிரகாரத்தில் நரசிம்மன் சன்னதி, கோதண்ட ராமர் சன்னதிகள் உண்டு.



கள்ளபிரான்

முற்காலத்தில் திருவைகுண்டம் நகரில் காலதூசகன் என்பவன் முற்பிறவியில் செய்த புண்ணியத்தின் பலனாக, இத்தலத்தில் உள்ள கலசத் தீர்த்தத்தில் நீராடி, பெருமாளைத் தினமும் சேவித்து வாழ்ந்து வந்தான். இவன் பிறர் பொருளைத் திருடும் குணம் கொண்டவனனாலும், பெருமாள் மீது பக்தி கொண்டவன். இவன் திருடச் செல்லுமுன், தான் திருடும்போது யார் கண்ணிலும் படாமலும், யாரிடமும் மாட்டிக் கொள்ளாமலும் இருக்க வேண்டும்.' என்று வைகுண்ட நாதனை வேண்டிக் கொள்வான்.

அதன்படி திருடிய பொருளில் பாதியைப் பெருமாள் சன்னதியில் சேர்த்து விட்டு மீதியைத் தன் நண்பர்களுக்கும், ஏழை எளியவர்களுக்கும் தர்மம் செய்து வந்தான்.

ஒருநாள் மணப்படை அரண்மனையில், பெரும் பொக்கிஷங்களை கொள்ளை அடித்துக் கொண்டு தப்பி வந்தான். ஆனால் இவனது சகாக்கள் அரண்மனை காவலாளிகளிடம் மாட்டிக் கொண்டனர். இவர்களின் மூலம் விவரங்களைத் தெரிந்து கொண்ட அரசன், காலதூசகனைச் சிறைப் பிடித்து வர, காவலாளிகளுக்கு உத்தரவிட்டான்.

இதை அறிந்த காலதூசகன் வைகுண்டநாதரிடம் சரண் அடைந்து,தம்மிடம் உள்ள பொக்கிஷங்களைக் கோயில் கைங்கரியத்திற்கு அர்ப்பணித்து விடுவதாக வேண்டிக் கொண்டான். சரணடைபவர்களைக் காப்பதைத் தன் சங்கல்பமாகக் கொண்ட பெருமாள், காலதூசகனின் தூய பக்திக்கு மனமிரங்கி, பெருமாளே காலதூசகன் வேடத்தில் அரசவைக்குச் சென்றார்.

அரசர் பெருமாளைப் பார்த்து, 'திருடிய உம்மைப் பார்க்கும்போது எனக்கு கருணை ஏற்படுகிறது. நீ யார்?' எனக் கேட்க பெருமாள், 'அரசே! நீ உன் தவறை உணரவில்லை. அரசின் செல்வங்கள் யாவும் உம்மைச் சுற்றியுள்ளவர்களாலும் வீணடிக்கப்படுகிறது. செல்வத்திற்கு நான்கு தாயாதிகள் (பங்காளி) உண்டு. அதாவது தர்மம், அரசன், திருடன், அக்னி ஆகியோராவர்.

இவர்களில் அரசன் என்பவன் தர்மத்தைக் கடைப்பிடித்து குடிமக்களைக் காக்க வேண்டும். நீவிர் அவ்வாறு செய்யத் தவறியதால், அதை உமக்கு உணர்த்தவே இச்செயலைச் செய்தேன். நான் உலகை காக்கும் வைகுந்த பெருமாள்.' என்று கூறிய அரசருக்குக் காட்சியளித்து ஞானத்தினையும் கொடுத்தார்.

கள்ளனான வந்து காத்து அருள் புரிந்ததால், திருவைகுண்டபதி கள்ளபிரான் (சோரநாதர்) என்று அழைக்கப்பட்டார். அதனால் இங்குள்ள உற்சவருக்கு கண்டவரான் என்று பெயர்.

இவர் ஸ்ரீதேவி, பூதேவி என இருதேவிகளும் இருபுறம் இருக்க காட்சியளிக்கிறார். சாமுத்திரிகா லட்சணப்படி செல்வச் செழுமை கொண்டவர்கள் சிரித்தால், கன்னத்தில் குழி விழும் என்பது நம்பிக்கை. அதுபோல இங்கு கள்ளபிரானின் கன்னத்தில் குழி விழுந்து காணப்படுகிறது.

கள்ளபிரானை வடிவமைத்த சிற்பி, இவரின் அழகில் மயங்கி கன்னத்தில் செல்லமாகக் கில்லி விட்டாராம். அதனால் ஏற்பட்ட அக்குழியே நிரந்தரமாகி விட்டதாகச் சொல்கிறார்கள்.

இந்திரனுக்கும் பிறகு சக்கரவர்த்திக்கும் பெருமாள் நேரடியாக தரிசனம் தந்த இடம்

நம்மாழ்வார்

இத்தலத்தைப் பற்றி நம்மாழ்வார் திருவாய்மொழியில் 3571 மற்றும் 3575 ஆகிய பாசுரங்களால் மங்களாசாசனம் செய்துள்ளார்.



ஏற்படும் என்பது ஐதீகம்!

கருட சேவை

வைகாசி மாத கருட சேவையின்போது ஒன்பது திருப்பதி உற்சவமூர்த்திகளும், கருட வாகனத்தில் இத்தலத்துக்கு எழுந்தருள்வது வழக்கம். அப்போது நம்மாழ்வார், அவரது பிறந்த தலமான ஆழ்வார் திருநகரியிலிருந்து அத்தலத்து பெருமாள் பொலிந்து நின்ற பிரானுடன் இங்கு எழுந்தருள்வாற். சுவாமியை மங்களாசாசனம் செய்தபின் அன்ன வாகனத்தில் எழுந்தருள்வார். அவ்வேளையில் கள்ளர்பிரான், பொலிந்து நின்றபிரான், வரகுண மங்கை, வெற்றிருக்கை பெருமாள், திருப்புளியங்குடி காய்சின வேந்த பெருமாள் ஆகிய நால்வரும், கருட சேவை சாதிப்பர். நம்மாழ்வார் உற்சவரை அன்ன வாகனத்தில் எழுந்தருளச் செய்து ஒவ்வொரு திருப்பதிக்கும் எடுத்துச் செல்லப்பட்டு அந்தந்தத் தலங்கள்



நவ திருப்பதி

சோழநாட்டில் அமைந்துள்ள நவக்கிரகங்களுக்கு ஒப்பாக, பாண்டியநாட்டில் நவ திருப்பதிகள், நவக்கிரகங்களாகப் போற்றப்படுகிறது. இங்கு பெருமாளே நவக்கிரகங்களாகச் செயல்படுவதால், நவக்கிரகங்களுக்கு எனத் தனிச் சன்னதி இல்லை. அவரவர்களுக்கு உள்ள கிரகதோஷங்கள் நீங்க, நவதிருப்பதி வந்து வழிபட்டால் கிரகதோஷம் நீங்கும். பொதுவாக பெருமாள் ஆதிசேஷன்மீது சயனித்தபடி இருப்பார். ஆனால் இங்கு ஆதிசேஷன் குடையாக இருக்க, பெருமாள் நின்ற கோலத்தில் இருப்பது தனிச் சிறப்பு!

திருவிழா

வைகாசி வைகுண்ட ஏகாதசி மற்றும் தை தெப்ப உற்சவம் முக்கியமானது. வைகுண்ட ஏகாதசியன்று, உற்சவர் கள்ளபிரானை அர்த்த மண்டபத்திற்குள் கொண்டு செல்வர். இந்த வேளையில் சன்னதி நடையை அடைத்து விடுவர். பின் கண்ணிமைக்கும் நேரத்திற்குள் நடையைத் திறந்து சுவாமிக்கு தீபாராதனைக் காட்டி உடனே அடைத்து விடுவர்.

ஒரு சில மணித்துளிகளுக்குள் இந்த வைபவம் நடந்து முடிந்து விடும். இந்த வேளையில் சுவாமியைத் தரிசித்தால் பிறப்பில்லா நிலை



அவர்களை பகவான் எந்த உருவத்தில் வந்தாவது காப்பாற்றுவார்.

திருடியவர்கள், இன்னும் தெரிந்தோ தெரியாமலோ திருடிக் கொண்டிருப்பவர்கள் செய்த தவறுக்காக மன்னிப்பு வேண்டி தலப்பெருமாளை நேரடியாக சேவித்து பரிகாரங்களைச் செய்தால், அவர்களை மன்னித்து சேவை சாற்றுவார். ஜாதகத்தில் சூரியன் தொடர்பான தோஷம் உள்ளவர்கள் நிவர்த்திக்காக இங்கு வந்து வேண்டிக் கொள்வர். பக்தர்கள் பிரார்த்தனை நிறைவேற இங்குள்ள கருடனுக்கு சந்தனக் காப்பீட்டு வழிபடுகிறார்கள்.

குறித்து நம்மாழ்வார் பாடிய பாடல்களைப் பாடுவர்.

தெப்போற்சவம்

தை மாதம் முதல் நாளில் உற்சவரான கள்ளபிரானுக்கு 108 போர்வைகள் அணிவித்து பூஜிப்பர். பின் அவர் கொடிமரத்தைச் சுற்றி வந்து சேவை சாற்றுவார். அதன்பின் ஒவ்வொரு போர்வையாக எடுத்து அலங்காரத்தை கலைத்து விடுவர். ஆழ்வார்களால் மங்களாசாசனம் செய்யப்பட்ட 108 திவ்யதேசங்களில் உள்ள அனைத்து பெருமாள்களும் இந்நாளில் கள்ளபிரான் வடிவில் காட்சி தருவதாக ஐதீகம்!

கல்வெட்டு

இத்தலத்தில் பல கல்வெட்டுகள் உள்ளன. அவற்றில் ஒரு கல்வெட்டில் திருவரங்கப் பெருமாள் பல்லவராயர் என்பவர்தான் இங்கு வைகுந்த நாயகி தாயாரை பிரதிஷ்ட செய்துள்ளார் என்றும், இங்குள்ள பெருமாளின் திருநாமம் திருவழுதி வளநாட்டு ஸ்ரீவைகுந்தத்து நாயனார் கள்ளபிரான் என்றும் கூறுகிறது. திருவேங்கடம் உடையார் சன்னதி அமைந்துள்ள மண்டபத்தில் காணப்படும் சிற்பங்கள் பாண்டிய நாட்டின் சிற்பங்கள் திறமையைப் பறைசாற்றுகிறது.

பரிகாரம்

பெருமாளிடம் மிகுந்த பற்று வைத்து செய்கின்ற காரியங்கள் தவறாக இருந்தாலும், பகவானை மனப்பூர்வமாக பிரார்த்தனை செய்தால்,

வைகுண்டம் — கைலாயம்

இத்தலத்துக்கு வந்தால், நவகைலாயத்தில் ஒன்றான கைலாசநாதர் கோயில் உள்ளது. எனவே இங்கு வைகுண்டத்தையும் கைலாசத்தையும் தரிசிக்கலாம்

கோயில் திறக்கும் காலம்

தினமும் காலை 8 மணி முதல் பகல் 12:00 மணி வரையிலும், மாலை 5 மணி முதல் இரவு 8 மணி வரையிலும் திறந்திருக்கும்.

பூஜை

தினமும் காலை 8 மணி கலசந்தி, மதியம் 12 மணி உச்சிகாலம் மாலை 6:00 மணி சாயரட்சை இரவு 8 மணி அர்த்த ஜாமம். ஒவ்வொரு பூஜையின் போதும் அலங்காரம், நிவேதனம் மற்றும் தீப ஆராதனை நடைபெறும்.

இருப்பிடம்

தூத்துக்குடியில் இருந்து 39 கி.மீ. தூரத்திலும், திருநெல்வேலியில் இருந்து 30 கி.மீ. தொலைவிலும், திருச்செந்தூரில் இருந்து 30 கி.மீ. தூரத்திலும் அமைந்துள்ளது.

ஸ்ரீவைகுண்டம் ரயில் நிலையத்தில்1.5 கி.மீ. தொலைவில் உள்ளது.

(தொடரும் வலம்.....)




# சும்மா இருப்பதே சுகம்

**ஆசிரியர்: ந.அசோகன்**


**விலை : ரூ. 250**

**பக். : 164**

**வெளியீடு:**

**பாரதி மோகன் வெளியீடு**
**சங்கர் நகர், பம்மல்,**
**சென்னை–75**

**Phone Number:**
**+91 94443 91884**




நூலாசிரியர் பல்வேறு இலக்கியக் கூட்டங்களில் ஆற்றிய உரைகள், புத்தக மதிப்புரைகள் உள்ளிட்டவற்றின் தொகுப்பே இந்நூல். சங்க இலக்கியம் முதல் தற்கால தமிழறிஞர்கள் வரை, சைவம், வைணவம், பௌத்தம், கிறிஸ்துவம், இஸ்லாம் உள்ளிட்ட சமயங்கள் தமிழுக்குச் செய்த பங்களிப்பு குறித்தும் இந்நூல் பதிவு செய்துள்ளது.'பொய்மையும் வாய்மை இடத்த' என்ற தலைப்பிலான கட்டுரையில் நூலாசிரியரின் ஆழ்ந்த சிந்தனை வெளிப்படுகிறது. 'சமயங்கள் வளர்த்த தமிழ்' என்ற கட்டுரை, சமயங்களை விளக்குவதோடு மட்டுமல்லாது, முதல் சங்கம், இடைச் சங்கம், கடைச் சங்கம் பற்றிய குறிப்புகளையும் பதிவு செய்துள்ளது. சமயங்கள் எவ்வாறு தமிழுக்குச் சிறப்பு சேர்த்தன என்பதை தக்க சான்றுகளோடும் நிறுவுகிறது. 'தவறிழைத்த இராமனும் தட்டிக்கேட்ட கம்பனும்' என்ற கட்டுரை இராமன் வாலியை மறைந்து நின்று கொன்றது குறித்து பல்வேறு அறிஞர்கள் கூறியிருக்கும் கருத்துக்களை சாறு பிழிந்து தருகிறது. பல்வேறு ஞானிகள், துறவிகளால் வெளிப்படுத்தப்பட்ட தத்துவங்களில் 'சும்மா' என்ற சொல்லின் சூட்சுமம் குறித்து விளக்கப்பட்டுள்ளன. நகைச்சுவையாக தொடங்கினாலும், 'சும்மா' என்ற சொல் எவ்வாறு தத்துவப் பொருளில் ஆளப்பட்டது என்பது குறித்த விரிவான ஆராய்ச்சியை 'சும்மா இருப்பதே சுகம்' என்ற கட்டுரை முன்னெடுக்கிறது.

'தமிழ்த் தென்றல்' திரு.வி.க.வின் தேசியத் தொண்டு குறித்தும், வள்ளலாரின் சன்மார்க்க நெறியில் விளைந்த 28 கவிதைகள், அதற்கான தெளிவுரை, மரணமிலாப் பெருவாழ்வு எய்திடுவதற்கான வழி குறித்தும் இந்நூல் விரிவான பார்வையை முன்வைக்கிறது. ஆழ்ந்த தமிழ் அறிவு, பல்துறைப் புலமை, ஆராய்ச்சித் திறன், எழுத்தாற்றல், பேச்சாற்றல் ஆகியவற்றுக்கு சிறந்த உதாரணமாக இந்நூல் திகழ்கிறது.



சிறுகதை

# நிறுத்தம்

## ஜோதி

நாகம்மா நேர்முகத் தேர்வு நடக்கும் அலுவலகக் கட்டடத்துக்கு வந்த போது மணி பதினொன்று அடிக்க ஐந்து நிமிஷம் இருந்தது. பதினொன்றரை மணிக்குத்தான் நேர்முகத் தேர்வுக்கு வரச் சொல்லியிருந்தார்கள்.

அவள், தான் நின்றிருந்த இடத்திலிருந்து சுற்றுமுற்றும் பார்த்தாள். இடது பக்கம், வலது பக்கம் எதிர்பக்கம் என்று எல்லா இடங்களிலும் பெரும்பான்மையாகக் கடைகள் காணப்பட்டன. ஷகர் ஏரியா. ஆனால் அவளை ஆச்சரியப்படுத்துவதற்கென்றே எழுந்தாற் போல எதிர்சாரியில் சற்று இடப்புறமாக ஒரு பார்க் காணப்பட்டது. அடர்த்தியான மரங்களும், செடிகொடிகளும் அது நிஜமாகவே இயற்கை அள்ளித் தந்தபூங்காதான் என்று உறுதி செய்தன.

அவள் கவனமாக சாலையைக் கடந்து பார்க்கின் உள்ளே நுழைந்தாள். வெளியே அடித்து வீசிய வெயிலுக்கு இந்த இடம் குளுமையில் வருவோரைக் குளிப்பாட்டத் தீர்மானித்தது போல அவளை வரவேற்றது. அவள் இந்த ஊருக்கு வந்த சமயத்துக்கும், இப்போதைக்கும் ஊர் வெகுவாக மாறி விட்டது. வெயிலுக்கு சென்னையையும், மழைக்கு மும்பையையும் குளிருக்குத் தில்லியையும் சவாலுக்கு இழுக்கும் நிலைமைக்கு வந்து விட்டது.

அவளுக்கு வயது நாற்பதைத் தாண்டி விட்டது என்று வேலையிலிருந்து வீட்டுக்குப் போகச் சொல்லி விட்டார்கள். இருபது வருஷத்துக்கு மேலாக அவள் உடல் உழைப்பையும் மன ஈடுபாட்டையும் வாங்கிக் கொண்ட நிறுவனத்துக்குத் திடீரென்று அவளது வயது ஞாபகம் வந்து விட்டது. ஆனால் உண்மையில் அவளை வீட்டுக்கு அனுப்பியது அவளை எடுத்து வளர்த்தவர்கள் அல்லர். அவள் வேலை பார்த்த கம்பெனியை இப்போது எடுத்துக் கொண்ட புதிய நிர்வாகம் டீ ஷர்ட் அல்லது மிடி அணிந்திருந்த யுவதிகளின் திறமையில் மிகுந்த நம்பிக்கை கொண்டு விட்டது.

நடுத்தர வயதை அடைந்த ஒருத்தி பெண்ணாக இல்லை; மறைந்து விடுகிறாள் என்று நாகம்மாவுக்குத் தோன்றிற்று. அவள் மீது விழும் அலட்சியம்தான் அவளது சாவுமணி. நாகம்மா வேலையில் இருந்த போது கம்பெனி கொடுத்த கார் இருந்தது. பெங்களூர் கிளப்பில் கம்பெனியின் உறுப்பினராக இருந்தாள். அலுவலகத்தில் அவள் அறைக்கு வெளியே எப்போதும் ஏழெட்டுப் பேர். திடீரென்று அவ்வளவிற்கும் ஒரே நாளில் முற்றுப் புள்ளி விழுந்து விட்டது. எதிரில் வருவோர் போவோர், அக்கம் பக்கம் என்று தெரிந்த பழக்கமான மனிதர்கள் அவளைப் பார்த்ததும் ஒரு புன்னகையைச் செலவழித்து விட்டு உடனே நகர்பவர்களாகி விட்டார்கள்.

இன்று அவள் மூன்றாவது நேர்முகத் தேர்வுக்கு வந்திருக்கிறாள். அவளுக்கு முன்னால் இருவரிடமும் அவளது வயது போய் நின்று விட்டது. இன்றும் அவள் அதிகமாக எதிர்பார்த்து ஏமாந்து போகத் தயாராயில்லாமல்தான் வந்திருந்தாள். அவளது பழைய கம்பெனியில் உடன் வேலை பார்த்துப் பின் தானாகவே ஒரு தொழிலை ஆரம்பித்து விட்ட அவளது தோழி வசுந்தரா சொன்னாள் என்று அவள் விண்ணப்பித்தாள். வசுந்தராவின் அலுவலகமும் இதே சாலையில் கொஞ்ச தூரம் தள்ளி இருந்தது.



வெளியாரைச் சொல்லி என்ன பயன்? அவள் வீட்டிலேயே இந்த நிராகரிப்பு நடந்து கொண்டுதானே இருக்கிறது. நான்கு நாட்களுக்கு முன் இன்டர்வியூ பற்றிக் கடிதம் வந்த தினம் மாலையில் வீட்டுக்குத் திரும்பின பெண்ணிடமும் கணவரிடமும் சொன்னாள். வழக்கம் போலக் காலில் ஏதோ வெந்நீரைக் கொட்டிக் கொண்டவனாக அன்று ஏழரைக்கே அவள் கணவன் முத்துச்சாமி ஆபீசுக்குக் கிளம்பிப்போய் விட்டான். அவன் போகாவிட்டால் அவன் ஆபீஸ் உத்திரம் கீழே விழுந்து தரைமட்டமாகி விடும் என்ற நினைப்பு அவனுக்கு. திரியும் எண்ணெய்யும் விளக்குப் பாத்திரமும் இல்லாமல் ஏதோ தானாகவே அந்தரத்தில் ஒளியை எழுப்பி எழுந்து நிற்பது போல சுடர் பூரிப்படைந்தால் என்னதான் செய்ய முடியும்?

அன்று தேன்மொழிக்கு எட்டு மணிக்கே ஸ்பெஷல் கிளாசாம். அதற்காக நாகம்மா அன்று இன்டர்வியூவுக்குப் போவதை அவள் எப்படி மறக்கலாம்? ஒரு வயதுக்கு மேல் சொந்தக் குழந்தைகளும் அந்நியர்களாக மாறிவிடுவது என்பது என்ன ஓர்அநியாயம்!

அப்போது அவளது கைபேசி ஒலித்தது. கைப்பையிலிருந்து அதை எடுத்து யார் என்று பார்த்தாள். அவள் இன்டர்வியூ செல்லும் அலுவலகம்.

“ஹலோ, நாகம்மா ஹியர்”

“மேடம். நான் இன்டர்வியூ சம்பந்தமாகக் கூப்பிடுகிறேன். உங்களுக்குச் சிரமம் கொடுப்பதற்கு வருந்துகிறோம். நீங்கள் ஒன்றரை மணிக்கு வரமுடியும் அல்லவா?” என்று ஒரு பெண் பேசினாள்.

“அதற்கென்ன? வருகிறேன்” என்றாள் நாகம்மா.

கைக்கடிகாரத்தைப் பார்த்தபோது அது பதினொன்றே கால் என்றது. இப்போது என்ன செய்வது? இப்போது அவளருகில் இருப்பது வசுந்தராதான். நாகம்மா பார்க்கை விட்டு வெளியே வந்தாள். சாலையில் அரை மணிக்கு முன்பு பார்த்ததை விட வாகனங்களின் புகையும் இரைச்சலும் அதிகமாகி இருந்தன. சீக்கிரம் செத்துப் போய்விட வேண்டும் என்று மனிதர்கள் தீர்மானித்து விட்டார்களா என்று இருந்தது.

பிளாட்பார்மில் இருந்த கடைகள் கால்களாகப் பரவிக் கிடந்தன. நகரத்தின் சுத்தம் மீதான அலட்சியத்தைக் காண்பித்து மனிதர்கள் செயல்படுவது போலிருந்தது. “இந்த ஊரைப் பாரடைஸ் என்று சொன்னவன் இப்போது பார்த்தால் தற்கொலை செய்து கொண்டு விடுவான்' என்று நாகம்மா நினைத்தாள்.



பதினைந்து நிமிஷத்தில் வசுந்தராவின் அலுவலகமிருந்த கட்டிடம் வந்து விட்டது. அவளைப் பார்த்ததும் வசுந்தரா ஆச்சரியத்துடன் கண்களை அகல விரித்து “என்ன, அதுக்குள்ளேயும் இன்டெர்வியூ முடிஞ்சிருச்சா?” என்று கேட்டாள்.

நாகம்மா அவள் எதிரே உட்கார்ந்து கொண்டு சற்றுமுன் வந்த செய்தியைச் சொன்னாள். “வரப்ப ஹாலிலே பாத்தேன். முன்னே இருந்த டேபிள் சேரெல்லாம் குறைஞ்சு போயிருக்கே” என்றாள் நாகம்மா.

“”கோவிட் எஃபெக்ட்” என்றாள் வசுந்தரா.

“ஆமா. தெருவிலே போனா பாதி கட்டடத்திலே ‘வீடு வாடகைக்கு விடப்படும்‘ போர்டு தொங்குது. ரோட்லே ஆட்டோ சத்தம் கேட்டு மாசக் கணக்காயிருச்சு. காய்கறி மார்க்கெட்லே கடை வச்சிருந்தவங்க இப்ப வண்டிலே காய் எடுத்துட்டு வந்து தெருவிலே விக்கிறாங்க. அதையும் தினமும் அவங்களால் செய்ய முடியலே. “வீட்டுலே இருந்து வேலை பாரு, பாதி சம்பளம்தான் கொடுக்க முடியும்‘னு ஆபீஸ், பேக்டரி வாசலையெல்லாம் இழுத்து மூடிட்டாங்க” என்றாள் நாகம்மா.

“இல்லாட்டா உன்னை மாதிரி ஒரு கெட்டிக்காரிக்கு, நேர்மையா வேலை பாக்கிறவளுக்கு இன்னொரு வேலை கிடைக்க இவ்வளவு கஷ்டம் வருமா என்ன?”

நாகம்மா சற்று நேரம் பேசாமலிருந்தாள். பிறகு “எனக்கு எதிரி இந்தத் தொற்று நோயை விட என் வயசுதான்” என்றாள்.”போன வாரம் நான் யஷ்வந்த்பூர் மார்க்கெட்லே ராகவேந்திராவைப் பாத்தேன்….”

வசுந்தரா அவளை இடைமறித்து, “யாரு நம்ம ஐ மீன் ராகவேந்திராவா?'' என்று சிரித்தாள்.

நாகம்மாவும் சிரித்தபடி “ஆமாம். இப்பவும் அது மாறலே. என்னைப் பாத்தப்போ நா வணக்கம் சொன்னேன். எப்படி இருக்கீங்கன்னு கேட்டுட்டு ஐ மீன் சௌக்கியமான்னுது'' என்றாள்.

“ரெண்டு பை நிறைய காய்கறி வாங்கி கைக்கு ஒண்ணா தூக்க முடியாம தூக்கிட்டு மெயின் ரோடுக்கு வந்தேன். அரை மணி நேரமா நின்னப்போ ரெண்டு ஆட்டோ வந்தது. ரொம்ப தூரம் சவாரி இல்லேன்னு தெரிஞ்சு வரமாட்டேன்னுட்டாங்க. அப்பப் பாத்து இந்த ஐ மீன் வந்தது காரை ஓட்டிக்கிட்டு. “எங்கே இந்தப்பக்கம்? வீட்டிலே எல்லாரும் சௌக்கியமா? பொண்ணு என்ன பண்ணுது?' ன்னு எல்லாம் கேட்டுட்டு, “சரி நான் வரட்டா, அர்ஜன்ட்டா ஒரு வேலைக்குப் போயிட்டு இருக்கேன்'னு காரைக் கிளப்பிட்டுப் போயிருச்சு”

“”ஓ, மை காட்! இந்த ஆளுதானே நாம ரெண்டு பேரும் வேலை பாத்துக்கிட்டிருந்த கம்பெனிக்குக் கம்ப்யூட்டர் ஸ்டேஷனரி, உதிரி பாகம், அது இதுன்னு சப்ளை பண்ணிக்கிட்டு இருந்தது! அப்ப ஒரு நா நீ பஸ் ஸ்டாப்பிலே நின்னுட்டு இருந்தப்போ, எதிர்ப் பக்கத்து ரோடுலேந்து உன்னைப் பாத்துட்டு கிராஸ் பண்ணி உன் கிட்டே வந்து அதுவாதானே லிப்ட் கொடுத்துச்சு? நம்ம ஆபீசோ தும்கூர் ரோடு, அந்த ஆள் போய்ட்டு இருந்ததோ பெல்லாரி ரோடு. பதினஞ்சும் பதினஞ்சும் முப்பது கிலோ மீட்டர் லிப்ட் கொடுத்துட்டுப் போனாரு” என்று ஆச்சரியப் பட்டாள் வசுந்தரா.

தொடர்ந்து “ஐ மீனுக்கு அப்ப நம்ம கம்பெனி தயவும் வேண்டியிருந்துச்சில்லே” என்றாள் வசுந்தரா.

“ஆமா. ஆனா அப்ப எனக்கு வயசு இருபத்தொண்ணு” என்றாள் நாகம்மா.

வசுந்தரா மேஜை மேலிருந்த நாகம்மாவின் இரு கைகளையும் தன் கரங்களால் பரிவுடன் பற்றிக்

கொண்டாள். நாகம்மாள் கிளம்பிய போது சாப்பிட்டு விட்டுதான் போக வேண்டும் என்று வசுந்தரா வற்புறுத்தி ஸ்விக்கியில் சொல்லி எம்டிஆரிலிருந்து லஞ்ச் வரவழைத்தாள்.

சரியாக ஒன்றரை மணிக்கு நாகம்மாள் இன்டர்வியூ நடக்கும் இடத்தில் இருந்தாள். இன்டர்வியூ செய்தவன் இளைஞனாக இருந்தான். அந்த டைரக்டர் சுற்றி வளைக்காமல் நேராக விஷயத்துக்கு வந்து விட்டான்.



"மிஸஸ் நாகம்மா! என் பேர் நாகரத்தினா. உங்களை செலெக்ட் பண்ண உங்க ப்ரோஃபைலும் மிஸஸ் வசுந்தராவோட ரெக்கமன்டேஷனும் எங்களுக்குப் போதும். இந்த இன்டெர்வியூலே நாங்க முடிவு செய்ய வேண்டிய ஒரே விஷயம் உங்களுடைய சம்பளம்தான். எவ்வளவு நீங்க எதிர்பார்க்கிறீங்க?" என்றான் நாகரத்தினா.

"என் பயோடேட்டாலே கடைசியா வாங்கின சம்பளம் எவ்வளவுன்னு சொல்லியிருக்கே" என்றாள் அவள்.

அவன் அமர்ந்திருந்த நாற்காலியில் நன்றாகச் சாய்ந்து கொண்டான்.

"அந்த சம்பளத்துக்கு அனுபவம் இல்லாதவங்கன்னு குறைஞ்சது எட்டு பேரை எடுப்பேன். அப்படீன்னா ஏன் உங்களைக் கூப்பிட்டேன்னு நீங்க கேப்பீங்க. உங்க அனுபவத்தை நீங்க எங்க கிட்டேஇருக்கிறவங்களுக்கு கத்துக் கொடுக்கறதுக்குத்தான்"

"சரி, உங்களாலே எவ்வளவு தர முடியும்?"

"நீங்க கடைசியா வாங்கின சம்பளத்திலே இருபது பர்செண்ட்?"

நாகம்மா வாய் விட்டுச் சிரித்தாள்.

"இது என்னோட பழைய கம்பெனியிலே நான் சேர்ந்து ரெண்டாவது வருஷம் கிடைச்ச சம்பளம்."

அவன் புன்னகை செய்தான். "அது கம்ப்யூட்டர் புரட்சி ஆரம்பிச்ச சமயம். ஒரு பியூன் கூட ஃபோர் ஃபிகர் சம்பளம் வாங்கின நாள்கள். இல்லியா?"

நாகம்மா சற்று யோசித்து விட்டு "என் கடைசி சம்பளத்தில் பாதியாவது தர வேண்டும்" என்றாள்.

"சரி, நான் கடைசியா சொல்றேன். முப்பது பெர்செண்ட். ஓகேவா?"

அவள் அவனிடம், "உண்மையைச் சொல்லட்டுமா? இந்த மாதிரி பேரம் பேசுவது எனக்கு வெட்கமாக இருக்கிறது" என்றாள் நாகரத்தினா.

"எனக்கும் உங்க வேலைக்கான மதிப்பை உங்களுக்குக் கொடுக்கணும்ங்கிறதிலே ரெண்டாவது அபிப்பிராயம் கிடையாது. ஆனா டைம்ஸ் ஆர் ப்ரெட்டி பேட். உங்களுக்கு சம்பளமா நான் முப்பத்தஞ்சு பெர்செண்ட் தரேன். உங்க ஆபீஸ் டைம் நைன் டு ஒன். காலேலே மட்டும்தான். அஞ்சு நாள்தான் வாரத்திலே வேலை. மார்னிங் உங்களைக் கம்பெனி கார் பிக்கப் பண்ணிட்டு மத்தியானம் கொண்டு போய் டிராப் பண்ணிடும்" என்று சிரித்தான்.

"எப்போ ஜாயின் பண்ணனும்?"

"வெல் டன். ஒரு வாரத்துக்குள்ளே?"

"சரி, நாளையிலிருந்து வரேன். உங்க கிட்டே என் வீட்டு அட்ரஸ் இருக்குல" என்றாள்.

நாகம்மா அவனுக்கு நன்றி தெரிவித்து விட்டுக் குளிரூட்டப்பட்ட அந்தக் கட்டடத்திலிருந்து வெளியே வந்தாள். திடீரென்று வானை மேகம் காதலுடன் இறுக அணைத்துக் கொண்டதில் ஊர் குளிர்ச்சியில் பரவியிருந்தது. அவள் மெட்ரோ ஸ்டேஷனை நோக்கி நடந்தாள்.

நடந்ததை எல்லாம் மனது புரட்டிப் பார்த்துக் கொண்டிருந்தது. மேலே செல்லவொட்டாமல் மட்டுமின்றி திரும்பப் பின்னே நோக்கிப் போகின்ற பாதையை முன்னிறுத்தும் வாழ்க்கையின் அலட்சியம் பொறுக்க முடியாமல்தான் இருந்தது!

கடைசி நிறுத்தத்துக்கு அப்பால் ரயில்கள் செல்ல முடிவதில்லை என்று கசப்புடன் நினைத்தாள்.

# அறிவோம் தமிழர்

## சங்கரதாஸ் சுவாமிகள்

சங்கரதாஸ் சுவாமிகள் திருநெல்வேலி மாவட்டத்தில் தூத்துக்குடிக்கு அருகில் உள்ள காட்டு நாயக்கன் பட்டி என்ற சிற்றூரில் 7.9.1867ஆம் ஆண்டு பிறந்தார். இவரது தந்தையார் தாமோதரன், தாயார் பேச்சியம்மாள் ஆவர். பெற்றோர் இவருக்கு வைத்த பெயர் சங்கரன் என்பது. அது நாடக உலகில் சங்கரதாஸ் சுவாமிகளாக மாறிவிட்டது.

சங்கரதாஸ் சுவாமிகள் திருமணம் செய்து கொள்ளாமலேயே தம் வாழ்நாளை வாழ்ந்து முடித்தார். தமிழ் இலக்கண, இலக்கியங்களில் நன்கு தேர்ச்சி பெற்றிருந்தார். அதனாலேயே இவரது நாடகங்கள் மொழி வளம் பெற்றவையாகத் திகழ்ந்தன.

சிறுவயதில் தம் தந்தையாரிடமும், பின்னர் பழனி தண்டபாணி சுவாமிகளிடமும் இலக்கண இலக்கியங்களைப் பயின்றார். தம் 24—ஆம் வயதில் முழுநேர நாடகக் கலைஞர் ஆனார். அப்போது நாடகத்துக்கு இசையும் பாட்டும் இன்றிமையாதவைகளாக இருந்த காரணத்தால் சங்கரதாஸ் சுவாமிகள் புதுக்கோட்டை மான்பூண்டியா பிள்ளையிடம் இசைப் பயிற்சி பெற்றார். இலக்கண இலக்கியப் பயிற்சி, இசைப் பயிற்சி ஆகிய தகுதிகளுடன்தான் சங்கரதாஸ் சுவாமிகள் முழுநேர நாடக் கலைஞர் ஆனார்.

இவ்வாறு தமிழ் நாடக உலகில் பெரும் தொண்டாற்றித் தமிழ்நாடக மேடைக்குச் சமூக மரியாதையை ஏற்படுத்தித் தந்த சங்கரதாஸ் சுவாமிகள் தம் 55ஆம் வயதில் காலமானார். 13.11.1922ஆம் ஆண்டு பாண்டிச்சேரியில் மரணம் அடைந்தார். தூத்துக்குடிக்கு அருகில் காட்டு நாயக்கன் பட்டி என்னும் சிற்றூரில் பிறந்து தமிழகம் எங்கும் கலைச் சேவை புரிந்து புதுவை (பாண்டிச்சேரிக்குப் புதுவை, புதுச்சேரி என்ற பெயர்கள் உண்டு) மண்ணில் அடங்கிய சுவாமிகளின் புகழ்மிக்க வரலாறு தமிழ்நாடக வரலாற்றில் பொன்னெழுத்துக்களால் பொறிக்கப்பட்ட ஒன்று.

நாடக நடிகரும் நாடக ஆசிரியரும் சங்கரதாஸ் சுவாமிகள் நாடக நடிகராகவே தம் நாடக வாழ்க்கையைத் தொடங்கினார். இரணியன், இராவணன், எமதருமன், சனீஸ்வரன், கடோற்கஜன் போன்ற வேடங்களையே ஏற்று நடித்து வந்தார். சிறிது காலத்துக்குப் பின்னர், நாயுடு நாடகக் குழுவில் நாடக ஆசிரியராகப் பணியாற்றினார். சிறிது காலத்துக்குப் பிறகு அவரே நாடகம் எழுதி, இயக்கி, அரங்கேற்றி நாடகத்துக்குப் பெருமை சேர்த்தார்.

சங்கரதாஸ் சுவாமிகள் நாடக நடிகராக இருந்த போது நடந்த ஒரு நிகழ்ச்சி மறக்க முடியாத ஒன்றாக அவர் வாழ்க்கையில் அமைந்தது. இவர் சனீஸ்வரன் நாடகத்தில் சனிபகவான் வேடம் தாங்கி நடித்தார். விடியும் வரை நாடகத்தில்





# பெருமை

சுபா நாதன்

நடித்துவிட்டு விடியற்காலையில் வேடத்தைக் கலைப்பதற்காக ஏரிக்குச் சென்றார். அங்கே சலவை செய்து கொண்டு இருந்த நிறை மாதக் கர்ப்பிணிப் பெண் ஒருத்தி சனீஸ்வரன் வேடத்தில் இருந்த சுவாமிகளைக் கண்டாள்; அதிர்ச்சி அடைந்து அந்த இடத்திலேயே இறந்து விட்டாள். இந்த நிகழ்ச்சி சுவாமிகளின் உள்ளத்தை வெகுவாகப் பாதித்து விட்டது. இதன் பின்னர் சுவாமிகள் வேடம் தரிப்பதை நிறுத்தி விட்டார்.

இயற்றிய நாடகங்கள்


சுவாமிகள் மொத்தம் 50 நாடகங்கள் எழுதியுள்ளார். அவற்றுள் சிம்பலைன், ரோமியோ ஜூலியட், ஜூலியஸ்சீசர் ஆகியன ஆங்கிலத்தில் இருந்து மொழிபெயர்க்கப்பட்ட நாடகங்கள் ஆகும்.

சுவாமிகள் எழுதிய, இயக்கிய அனைத்து நாடகங்களுமே சிறப்புடையனவாகும். எனினும் பின்வரும் நாடகங்களை மிகவும் சிறப்புடையனவாகச் சுட்டிக் காட்டலாம்.

1. சத்தியவான் சாவித்திரி 2. பவளக்கொடி சரித்திரம் 3. வள்ளி திருமணம் 4. அரிச்சந்திர மயான காண்டம் 5. கோவலன் சரித்திரம் 6. இராம ராவண யுத்தம் 7. வீரபாண்டிய கட்டபொம்மன் 8. மதுரை வீரன் 9. சித்திராங்கி விலாசம் 10. நளதமயந்தி ஆகிய நாடகங்கள் மிகவும் சிறப்பு வாய்ந்தவையாகும். சுவாமிகள் எழுதிய அத்தனை நாடகங்களும் ஆயிரக்கணக்கில் அரங்கில் நடிக்கப் பெற்றவை ஆகும். சுவாமிகள் இயற்றிய நாடகங்கள்தாம் தமிழ் நாடகக்கலை வளர்ச்சிக்கு அடிப்படைச் செல்வங்கள் ஆகும்.

தமிழ் நாடகக்கலையைப் பொறுத்தவரையில் சுவாமிகள் காலத்துக்கு முன், சுவாமிகளின் காலத்துக்குப் பின் என்று பகுத்துப் பார்க்கும் அளவிற்குச் சுவாமிகளின் நாடகக்கலைத் தொண்டு அமைந்துள்ளது.கொஞ்சம் கொஞ்சமாக நலிந்து கொண்டிருந்த நாடகக் கலையை உயர்த்திப் பிடித்தது மட்டும் அல்லாமல் தம் காலத்துக்குப் பின்னரும் உயர வேண்டிய நாடகக் கலையைத் தம் நாடகங்கள் மூலம் நிலை நிறுத்தினர். உண்மையில் சுவாமிகளின் நாடகங்கள் தாம் அவர் காலத்துக்குப் பின்னரும் நாடகக் கலைக்கு உயிரூட்டி வந்தன. தலைசிறந்த மொழி அறிவும் நாடக உருவாக்கப் புதுமையும் சுவாமிகளிடம் மிகவும் கூடுதலாக இருந்ததால் நாடகத்துக்குப் புதுமெருகு ஏற்றினார். அதனால் இவரிடம் பெரிய மாணவர் கூட்டம் இருந்தது. வண்டுகள் மலரை மொய்ப்பது போல்





மாணவர்கள் சுவாமிகளைச் சூழ்ந்து கொண்டே இருந்தனர்.ஜி.எஸ்.முனுசாமி நாயுடு, சாமிநாத முதலியார், சீனிவாச ஆழ்வார், நடேச பத்தர், எம்.ஆர்.கோவிந்தசாமிப் பிள்ளை, சி.கன்னையா, சி.எஸ்.சாமண்ணா, சுந்தரராவ், சூரிய நாராயண பாகவதர், மதுரை மாரியப்ப சுவாமிகள், எஸ்.ஜி.கிட்டப்பா, ஆர்.வி.மாணிக்கம், தி.க.சண்முகம் சகோதரர்கள் ஆகியோர் ஆண் மாணவர்களில் குறிப்பிடத்தக்கவர்கள். திருமதி பாலாம்பாள், பாலாமணி, அரங்கநாயகி, கோரங்கி மாணிக்கம், டி.டி.தாயம்மாள் போன்றோர் மாணவிகளில் குறிப்பிடத்தகுந்தவர்கள். திரைப்படங்களில் பின்னாளில் புகழ்பெற்று விளங்கிய கே.சாரங்கபாணி, ஆர்.பாலசுப்பிரமணியம் ஆகியோரும் சுவாமிகளின் மாணவர்களே ஆவர்.

துறவுக்கோலம்

சிறிதுகால நாடகப்பணியினைத் தொடர்ந்து சங்கரதாசு சுவாமிகள் துறவுக் கோலம் பூண்டார். முருகனின் படைத்தலங்களைக் காண யாத்திரை மேற்கொண்டார். இவ்வாறு அவர் மேற்கொண்ட துறவுக் கோலமே அவருக்கு சுவாமிகள் என்ற அடைமொழியினைப் பெற்றுத் தந்தது.

கலை மனத்தைக் கவரும் தன்மை கொண்டது. அதனை உணரத் தொடங்கியோர் விலகிச் செல்ல இயலாது. இவ்வாறே துறவுக் கோலம் பூண்ட சுவாமிகளை மீண்டும் கவர்ந்தது நாடக மேடை! ஆம் புதுக்கோட்டை மான்பூண்டியா பிள்ளையின் அறிமுகம் சுவாமிகள் நாடகப்பணி புரிய உரிய தளத்தினை அமைத்துக் கொடுத்தது. சுவாமிகள் நாடக ஆசிரியராக மாறினார். வள்ளி வைத்திய நாதய்யர் நாடக சபையில் நாடக ஆசிரியராகப்

பணியாற்றினார். தொடர்ந்து பல நாடகங்களை எழுதி, தமிழுக்குக் கொடையாக வழங்கினார். மேடையில் ஒழுக்கம், நாடகத்தில் நற்செய்தி என்ற அடிப்படைக் குறிக்கோளுடன் சுவாமிகள் நாடகம் படைக்கலானார்.

நாடகக் கதைகள்

சுவாமிகள் தொன்ம நாடகக் கதைகளையே மக்களுக்காக ஆர்வத்துடன் உருவாக்கினார். மேலும் மக்களுக்கு அறிமுகமான நாட்டுப்புறக் கதைப்பாடல்களையும் தமது நாடகங்களின் மூலமாகக் கொண்டார். கருத்துகளை மக்களிடம் எளிதில் எடுத்துச் செல்ல ஏதுவாக இவ்வழி முறையைச் சுவாமிகள் கையாண்டார்.

சுவாமிகள் சுமார் 51 நாடகங்களை எழுதியுள்ளார். சில நாடகங்கள் மட்டுமே பிற்காலத்தில் நூல் வடிவில் வெளியிடப் பெற்றுள்ளன. சுவாமிகள் எழுதிய நாடகங்களின் பெரும்பாலான கையெழுத்துப்படிகளை அவரது முதன்மைச் சீடர்களான தி.க. சண்முகம் (டி.கே.எஸ்) சகோதரர்கள் பாதுகாத்துத் தந்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

முக்கிய நாடகங்கள்

அபிமன்யு சுந்தரி, பவளக்கொடி, சீமந்தனி, சதி அநுசூயா, பிரகலாதா, சிறுத்தொண்டர், வள்ளித்திருமணம், ஞானசவுந்தரி, பிரபுலிங்க லீலா, மணிமேகலை, இலங்கா தகனம், வீர அபிமன்யு, சத்தியவான் சாவித்திரி, சதி சுலோசனா, அல்லி அர்ச்சுனா போன்றவை சுவாமிகள் எழுதிய குறிப்பிடத்தக்க நாடகங்களாகும். மேலும்



வடமொழி நாடகமான மிருச்ச கடிகையையும், சேக்சுபியரின் ரோமியோ ஜுலியட் ஆகிய நாடகங்களையும்

தமிழாக்கம் செய்துள்ளார். பல மொழிகளிலும் தேர்ச்சி பெற்றவர்.

சுவாமிகள் தோற்றப் பொலிவுமிக்கவராக விளங்கினார். எனவே தமது உடல் தோற்றத்திற்கு ஏற்ற வேடங்களை ஆர்வமுடன் ஏற்று நடிக்கலானார். அக்காலத்துத் தொன்ம (புராண) இதிகாச நாடகங்களில் சுவாமிகளுக்கேற்ற நாடக வேடங்கள் என்னவாக இருக்க முடியும்? ஆம், நாம் எதிர் பார்த்தது போல எமதருமன், சனீசுவரன் முதலிய வேடங்கள் தாம்! இவ்வேடங்களால் ஏற்பட்ட விளைவு என்னவென்று அறிய வேண்டாமா? சாவித்திரி நாடகத்தில் எமனாக நடித்த சுவாமிகள், சத்தியவானுடைய உயிரைக் கவர்ந்துவர முடியாத கிங்கரர்களை கோபித்துக் கொள்ளும் காட்சி... எமனாக நடித்த சுவாமிகளின் தோற்றத்தைக் கண்டு பயந்த ஒரு பெண் பார்வையாளர் கருக்கலைவுக்கு ஆளானார்.

நடிப்பைத் துறத்தல்

இதுபோலவே தமயந்தி நாடகத்தில் சனீசுவர வேடத்தில் நடித்த சுவாமிகள் அதே ஒப்பனையோடு அருகிலிருந்த கிராமத்திற்குக் குளிக்கச் சென்றார். இவ்வேடத்தில் இவரை எதிரே கண்ட பெண்ணொருத்தி பயந்து மாண்டுபோன நிகழ்வும் நடந்தது. இது போன்ற நிகழ்வுகளால் மனம் நொந்த சுவாமிகள் நடிப்பதை முற்றிலும் கைவிட்டு நாடகம் பயிற்றுவிப்பதில் மட்டும் கவனம் செலுத்தினார்.

நாடகப் பயிற்சி வழங்குவதில் சுவாமிகள் தனித் தன்மையோடு விளங்கினார். ஒரு தலைமுறைக் கலைஞர்களைப் புதுப்பொலிவுடன் உருவாக்கும் வண்ணம் திட்டமிட்டுப் பயிற்றுவித்தார். நடிப்பு, வசன உச்சரிப்பு, ஒழுக்கம், கட்டுப்பாடு இவற்றில் முக்கிய கவனம் செலுத்தினார். கடுமையான பயிற்சிகளை நடிகர்களுக்கு வழங்கினார். அவர்கள் பிற்காலத்தில் மிகச்சிறந்த கலைஞர்களாக விளங்கினார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

தமிழ் நாடக மேடையில் குடிகொண்டிருந்த ஒழுக்கக் கேட்டைக் களைய நல்ல நாடகங்களை உருவாக்குவது இன்றியமையாதது என்பதைச் சுவாமிகள் உணர்ந்தார். இச்செயல்தான் நல்ல பார்வையாளரை உருவாக்க முடியும். எனவே இவ்வகையில் நாடகக் குழுவை உருவாக்கத் துணிந்தார் சுவாமிகள். நாடகத்தையே தொழிலாகக் கொண்டு நாடகம் படைத்து அளிக்கும் தொழில் முறை **(Professional)** நாடகக் குழுக்களாக இவை அமைந்தன.

சமரச சன்மார்க்க சபை

1910—இல் சமரச சன்மார்க்க சபை என்றும் நாடகக் குழுவைச் சுவாமிகள் தோற்றுவித்தார். குழுவின் பெயரே நாடகக் கலையின் புனிதத் தன்மையையும், நற்பண்பையும் விளக்குவதாக அமைந்துள்ளதன்றோ! ஆம், சிறுவர்களை

அறிமுகம் செய்து தமிழ் நாடக மேடையைப் புனரமைக்கும் முதல் முயற்சி இது.

தத்துவ மீன லோசனி வித்துவ பால சபை

தொடர்ந்துசிறுவர்களையே கொண்டு பால சபை முறை என்னும் புதிய சோதனை முயற்சியை மேற்கொண்டார். இவ்வகையில் 1918— இல் மதுரை தத்துவ மீன லோசனி வித்துவ பால சபை என்னும் குழுவைத் தொடங்கினார். இக்குழுவில் தான் பிற்காலத்தில் தமிழ் நாடகக் கலைக்குப் பெரும் பணியாற்றிய டி.கே.எஸ். சகோதரர்கள் நாடகப் பயிற்சி பெற்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

தொழில் முறை நாடகக் குழு



வழக்கில் இருந்த தோடி, சங்கராபரணம், கல்யாணி போன்ற பல சம்பூர்ண இராகங்களையும், மோகனம், ஆரபி, மத்தியமாவதி போன்ற இராகங்களையும் பயன்படுத்ினார். அவலச்சுவைக்கு முகாரியையும், வீரத்துக்கு அடாணா இராகத்தையும் பயன்படுத்தினார். இவ்வாறு நாடகப்பாடல்களையும், நாடகங்களையும் விரைவாக எழுதி முடிக்கும் வல்லமை பெற்றிருந்தார். ஒரே இரவில் ஒரு முழு நாடகத்தை எழுதிய சாதனையாளர் சுவாமிகள். அபிமன்யு நாடகத்தை ஒரே இரவில் அடித்தல் திருத்தல் எதுமின்றி எழுதி முடித்தார். இந்த நாடகம் சண்முகத்திற்கு (டி.கே. சண்முகம்) என்ற குறிப்பும் கீழே எழுதப்பட்டிருந்தது.

தமிழகத்தில் தொழில் முறை நாடகக் குழுக்களின் சீரான செயல்பாட்டுக்குச் சுவாமிகள் வி□த்திட்டார் . இவ்வகைக் கலைஞர்களின் வாழ்வே நாடகத்தை மையமாகக் கொண்டிருந்தது. நாடகத் தொழில் தவிர வேறு தொழில் தெரியாமல் தமது வருவாய்க்கு நாடகத்தை நம்பியிருந்த கலைஞர்களுக்குச் சுவாமிகள் நம்பிக்கை ஊட்டினார். பல தொழில் முறை நாடகக் குழுக்கள் தமிழகத்தில் தோன்றின. ஒவ்வொன்றும் ஒரு

நிறுவனமாகச் செயல்படலாயிற்று. கலைஞர்கள், குழு மலோளர், சட்டாம்பிள்ளை, பயிற்றுவிப்பாளர், தொழில்நுட்பக் கலைஞர்கள் எனப் பல பிரிவுகள் தொழில் முறைக் குழுக்களில் செயல்பட்டன.

சங்கரதாசு சுவாமிகளின் நாடகப் பணியினை மூன்று நிலைகளில் விளக்கலாம்.

1) மக்களுக்குத் தெரிந்த கதை மூலம் மக்களுக்காக எளிய நடையில் நாடகம் உருவாக்கல்.
2) மேடையில் ஒழுக்கம், கட்டுப்பாடு
3) கலைஞர்கள் நிலையில் புதிய பரிணாமம்

சுவாமிகள் எழுதிய நாடகக் கதைகள் பெரும்பாலும் மக்களுக்கு அறிமுகமானவை. எளிய தமிழ் நடையில் அவரது படைப்பு அமைந்தது. தமிழிசைப் பாடல்கள் விரவி வந்தன.


அக்காலக் கட்டத்தில் மக்களிடையே

தமிழ் நாடக மேடையில் ஒழுக்கம், கட்டுப்பாடு போன்ற அடிப்படையை வகுத்தவர் சுவாமிகள். இதனாலேயே தாம் பயிற்றுவித்து வந்த சிறுவர்களை ஒரு குழுவாக ஒரு சேரத் தங்க வைத்தார். கட்டுப்பாடு மிக்க பயிற்சி முறையை உருவாக்கியளித்தார். ஒழுக்கமற்ற சிறுவர்களை அப்புறப்படுத்தினார். மேடையை வழிபாட்டுத் தலத்திற்கு ஒப்பாக உருவாக்கிக் காட்டினார். இவரது இவ்வரிய முயற்சியினாலே தான் புதிய பல நாடகக் குழுக்களும் ஒழுக்கம், கட்டுப்பாடு மிக்க நாடகப் பணியாற்ற முனைந்தன.


புதிய பரிணாமம்

தவத்திரு சங்கரதாசு சுவாமிகள் நாடக வளர்ச்சிக்கான நல்ல நாடக நடிகர்களையும், பிற கலைஞர்களையும் உருவாக்கினார். முன்பொரு காலத்தில் கலைஞர்களைக் கூத்தாடிகள் எனப் பெயரிட்டழைத்த இழிவான நிலையை மாற்றி அவ்வடைமொழி நீங்கிடும் வண்ணம் நடிகர்களை நல்ல கலைஞர்களாக உயர்த்திய பெருமை சுவாமிகளையே சாரும்.

நாவில் வந்ததைப் பாடுவோம்
நாடகம் தினம் ஆடுவோம்
நாங்கள் சிறுவர் எங்கள் பிழையை
நீங்கள் பொறுப்பீர் நாளுமே


VARSHA™
IDLI/DOSA BATTER
Eat the Best!
Eat Fresh!

# சிவகாமியின்




மூன்றாம் பாகம் : பிக்ஷுவின் காதல்

## சிவகாமியின் சபதம் 50

உட்கார்ந்திருந்த சிவகாமி, சட்டென்று எழுந்து நின்றாள். அவளுடைய உதடுகள் துடித்தன. புருவங்கள் மேலேறின. கண்களிலிருந்து மின்னல் கிளம்பிப் புத்த பிக்ஷுவைத் தாக்கின.

"கள்ள பிக்ஷுவே! எதற்காக என்னிடம் மன்னிப்புக் கேட்கிறீர்? எனக்கு என்ன அபசாரம் செய்தீர்?" என்ற சொற்கள் சீறிக்கொண்டு பாயும் அம்புகளைப் போலச் சிவகாமியின் வாயிலிருந்து புறப்பட்டன.

பிக்ஷு திகைத்துப் போனார். தவறாக எதையோ சொல்லி விட்டோம் என்ற உணர்ச்சியினால் ஏற்பட்ட தடுமாற்றத்துடன், "ஆம், சிவகாமி! நான் உனக்குப் பெருந் தீங்குதான் செய்து விட்டேன். எல்லாம் விவரமாகச் சொல்ல வேண்டும். அவசரமாக இரண்டொரு வார்த்தையில் சொல்லக்கூடிய விஷயம் அல்ல. தயவு செய்து சற்றுச் சாவதானமாக உட்கார்ந்து கேள்!" என்றார்.




"ஐயா! விவரமாக எல்லாம் சொல்லுவதற்கு முன்னால் ஒரு விவரம் சொல்லும். நீர் யார்? கருணாமூர்த்தியான கௌதம புத்தரின் சங்கத்தைச் சேர்ந்து சர்வ பரித்யாகம் செய்த துறவியா? அல்லது வஞ்சக நோக்கத்துடன் காவித் துணி வேஷம் தரித்த சளுக்க குலத்துச் சக்கரவர்த்தியா? சிற்ப சித்திரக் கலைகளிலும் பரதநாட்டியக் கலையிலும் உண்மை அபிமானங் கொண்ட பரதேசியா? அல்லது ஓர் ஏழைச் சிற்பி மகளைக் கெடுப்பதற்காகப் பிக்ஷு வேஷம் பூண்ட இராவண சந்நியாசியா? நீர் யார்? நாகநந்தியா? புலிகேசியா?"

இவ்விதம் கேட்டுச் சிவகாமி நிறுத்தியபோது, வானமுகட்டில் ஒரு மூலையிலிருந்து இன்னொரு மூலை வரையில் அதிர்ந்து நடுங்கும்படியாக மின்னல் மின்னி இடி இடித்து ஓய்ந்தது போலிருந்தது.

இவ்வளவு இடி மின்னல்களும் நாகநந்தியின் முகபாவத்தில் எவ்வித மாறுதலையும் உண்டு பண்ணவில்லை. அவர் அதிசயமான அமைதியுடன், "அம்மா சிவகாமி! உன்னுடைய சந்தேகங்களுக்குக் காரணம் இல்லாமற் போகவில்லை. ஆனால், உண்மையிலேயே நான் உலகப் பற்றறுத்த புத்த பிக்ஷுதான். உன்னுடைய பரத நாட்டியக்கலைக்கு என் உள்ளத்தைப் பறி கொடுத்தவன்தான். விலங்கு இனத்தைச் சேர்ந்த மக்களின் முன்னால் தெரு வீதிகளில் உன்னை நடனமாடச் செய்த நிர்மூடப் புலிகேசி நான் அல்ல. பூர்வஜென்மத்தில் செய்த பாவத்தினால் அவனோடு உடன் பிறந்த துரதிருஷ்டசாலி நான். முன்னொரு சமயம், இருபத்தைந்து வருஷங்களுக்கு முன்னால் என் தம்பி புலிகேசியைக் கொலைகாரனிடமிருந்து காப்பாற்றுவதற்காக அவனுடைய உடையை நான் அணிந்து நடித்தேன். மறுபடியும் இருபத்தைந்து வருஷங்களுக்குப் பின் உன்னுடைய விருப்பத்தை நிறைவேற்றுவதற்கு அவ்விதம் செய்தேன். ஆம், சிவகாமி காஞ்சிக் கோட்டைக்கு வெளியே காட்டின் நடுவே எனக்கு முன்னால் நீ கைகூப்பி வணங்கி, 'என் தந்தையைக் காப்பாற்றுங்கள்!' என்று வேண்டிக் கொண்டாய். அதை நிறைவேற்றுவதற்காகத் துறவியின் காஷாயத்தைக்




களைந்து விட்டுச் சக்கரவர்த்தியின் ஆடைகளை அணிந்து கொண்டேன்....”

சிவகாமி பரபரப்புடன் பிக்ஷுவின் அருகில் ஓடிவந்தாள். மண்டியிட்டுக் கை கூப்பிய வண்ணம், “சுவாமி! இந்த அபலைப் பெண்ணின் ஆத்திர மொழிகளை மன்னித்து விடுங்கள். என் தந்தையைத் தாங்கள் காப்பாற்றினீர்களா? அவர் உயிரோடிருக்கிறாரா? எங்கேயிருக்கிறார்? எப்படியிருக்கிறார்?” என்று அலறினாள்.

“அம்மா! உன்னுடைய தந்தையின் உயிரைக் காப்பாற்றினேன். உனக்கு நான் கொடுத்த வாக்குறுதியை நிறைவேற்றி விட்டேன். கொஞ்சம் அமைதியாக உட்கார்ந்து கேட்டால் விவரங்களும் சொல்கிறேன்” என்றார் பிக்ஷு.

சிவகாமி உட்கார்ந்தாள். புலிகேசியைப் போல் வேஷம் தரித்துச் சென்று, கையும் காலும் வெட்டப்படுவதற்கிருந்த ஆயனரைக் காப்பாற்றியதையும், ஆனால், அவர் தவறி மலை மீதிலிருந்து கீழே விழுந்ததையும், அதனால் கால் முறிந்ததையும், உணர்விழந்த நிலையில் அரண்ய வீட்டுக்குக் கொண்டுபோய் அங்கு அவருக்கு உணர்வு வந்த பிறகு விடைபெற்று வந்ததையும், புத்த பிக்ஷு சொல்லி வந்தபோது சிவகாமிக்கு அவரிடம் எல்லையற்ற நன்றி உணர்ச்சி உண்டாயிற்று. தான் அவரைக் குறித்துச் சந்தேகித்ததெல்லாம் எவ்வளவு தவறு என்று அடிக்கடி நினைத்துப் பச்சாத்தாபப்பட்டாள். நீர் ததும்பிய கண்களினால் பிக்ஷுவைப் பார்த்துச் சொன்னாள்: “சுவாமி! என் அருமைத் தந்தையைக் கொடிய தண்டனையிலிருந்து மீட்டு அவருடைய உயிரையும் காப்பாற்றிய தங்களுக்கு என் ஆயுள் உள்ள வரையில் நன்றிக்கடன் பட்டிருக்கிறேன். அப்படியிருக்கும் போது தாங்கள் இங்கு வந்ததும் என்னிடம் மன்னிப்புக் கேட்டீர்களே, அது ஏன்? தங்களை அநியாயமாகச் சந்தேகித்ததற்காக நான் அல்லவா தங்களிடம் மன்னிப்புக் கேட்க வேண்டும்! சளுக்க சக்கரவர்த்தியும் தாங்களும் ஒருவரேதான் என்று தவறாக எண்ணியதனால், தங்களைப் பற்றி அநியாயமாகச் சந்தேகப்பட்டேன். என்னை இந்த வாதாபிக்கு அழைத்து வந்தவரும் நாற்சந்தியில் நடனமாடச் செய்தவரும் தாங்கள்தான் என்று எண்ணிக் கோபம் கொண்டிருந்தேன். சுவாமி! என்னை மன்னித்துவிடுங்கள்!” என்று சிவகாமி கூறியபோது, அவளுடைய கண்களில் நீர் தாரை தாரையாகப் பெருகியது.



“சிவகாமி! நான் உன்னை மன்னிக்க வேண்டிய அவசியமில்லை. உண்மையிலே நீ தான் என்னை மன்னிக்க வேண்டும். உனக்கு நான் பெரிய துரோகம் செய்திருக்கிறேன். இன்று இந்தத் தூரதேசத்தில் நீ தன்னந்தனியாகச் சிறைப்பட்டிருப்பதற்குக் காரணம் நான்தான்! என்னை மன்னித்துவிடு!”

இவ்விதம் புத்த பிக்ஷு உணர்ச்சியினால் கம்மிய குரலில் கூறிய போது, சிவகாமி தன் கண்களில் பெருகிய கண்ணீரைத் துடைத்துக் கொண்டு நாகநந்தியின் முகத்தை வியப்புடன் ஏறிட்டுப் பார்த்தாள்.

“ஆம், சிவகாமி! நான் சொல்வது சத்தியம். வாதாபிச் சைனியம் காஞ்சியின் மீது படையெடுத்து

வருவதற்கே காரணமாயிருந்தவன் நான்தான். என் சகோதரன் புலிகேசிக்கு முதலில் அந்த உத்தேசம் இருக்கவில்லை. வாதாபிச் சைனியம் முழுவதும் வேங்கியை நோக்கிப் போவதாயிருந்தது. வாதாபிச் சைனியத்தை இரண்டாகப் பிரித்துப் புலிகேசியைக் காஞ்சிக்கு விரைந்து வரும்படி கூறியவன் நான்தான். வேங்கி ராஜ்யத்தின் மீது படையெடுக்கத் தம்பி விஷ்ணுவர்த்தனனை அனுப்பினால் போதும் என்றும் எழுதினேன்... அதன் பலன் என்ன விபரீதமாயிற்று, தெரியுமா? விஷ்ணுவர்த்தனனுடைய பத்தினி இன்று விதவையாகியிருக்கிறாள். அவளையும், அவளுடைய சின்னஞ் சிறு புதல்வனையும் இன்றைய தினந்தான் இந்நகரில் பத்திரமாய்க் கொண்டு வந்து சேர்த்தேன்..."

"சுவாமி! இத்தனை நாளும் இந்த நகரில் தாங்கள் இருக்கவில்லையா?" என்று சிவகாமி கேட்டாள்.

"இல்லை, சிவகாமி! இருந்திருந்தால் உன்னுடைய தெய்வீக நடனக்கலை இப்படி சந்தி சிரிப்பதற்கு விட்டிருப்பேனா? கலை உணர்ச்சியில்லாத நிர்மூடப் புலிகேசி இப்படிச் செய்துவிட்டான்! அவன் இவ்விதம் செய்வான் என்று தெரிந்திருந்தால் வடபெண்ணைக் கரையில் உன்னை அவனிடம் ஒப்படைத்திருக்க மாட்டேன்.....

பிக்ஷு வடபெண்ணைக் கரையைப் பற்றிக் கூறியதும் அன்றொரு நாள் இரவு, சிவகாமி கண்ட கனவுத் தோற்றம் அவள் நினைவுக்கு வந்தது. "வடபெண்ணைக் கரையில் என்னை விட்டு விட்டுப் போனீர்களா? அது எப்படி? உங்களைக் காஞ்சிக்குப் பக்கத்தில் அல்லவா நான் பார்த்து வரம் கேட்டேன்?" என்றாள்.

"சக்கரவர்த்தி வேஷம் பூண்டு உன் தந்தையைக் காப்பாற்றிய பின் உடனே என் வேஷத்தைக் கலைத்துவிடவில்லை, சிவகாமி! அதே வேஷத்தில் மகேந்திர பல்லவனுடன் போரிட்டேன். மணி மங்கலத்தில் அவனை முறியடித்துவிட்டு உன்னைத் தொடர்ந்து வந்தேன். பொன்முகலி நதிக் கரையில் நீ என்னைப் பார்த்து, சிறைப்பட்ட பல்லவ நாட்டுப் பெண்களையெல்லாம் விடுதலை செய்ய வேண்டும் என்று வரங்கேட்டாய். வாதாபிக்கு நீ மனத் திருப்தியுடன் வருவதாய் இருந்தால் அவர்களை விடுதலை செய்வதாகச் சொன்னேன். நீயும் சம்மதித்தாய். அப்போது உன்னையும் நான் விடுதலை செய்து உன் தந்தையிடம் சேர்ப்பித்திருக்கலாம். அப்படி நான் செய்யவில்லை. உன்னை வஞ்சித்து வாதாபிக்குக் கொண்டு வந்தேன்!... ஆனால், நான் இல்லாத சமயத்தில் இந்த மூடன் புலிகேசி இப்படி உன்னை அலங்கோலப்படுத்துவான் என்று மட்டும் நினைக்கவேயில்லை. உன்னிடம் நான் மன்னிப்புக் கேட்டுக் கொண்டது ஏன் என்று தெரிகிறதா, சிவகாமி!" என்றார் பிக்ஷு.


"தெரிகிறது, சுவாமி! இதற்குமுன் எனக்குக் குழப்பம் அளித்துக் கொண்டிருந்த இன்னும் பல விஷயங்களும் விளங்குகின்றன. ஆனால், ஒரே ஒரு சந்தேகம் மட்டும் இன்னும் தீரவில்லை. எதற்காக இவ்வளவெல்லாம் நீங்கள் செய்தீர்கள்? எதற்காக இவ்வளவு சூழ்ச்சிகளும் பிரயத்தனங்களும் செய்து, இந்த அபலைப் பெண்ணை இங்கே கொண்டு வந்து சேர்த்தீர்கள்? உலகத்தைத் துறந்து பிக்ஷு விரதம் பூண்ட தங்களுக்கு இந்த ஏழைப் பெண்ணால் என்ன உபயோகம்?... கால் ஒடிந்து ஆதரவற்றுக்கிடக்கும் என் தந்தையிடமிருந்து என்னைப் பிரித்துக் கொண்டு வந்ததில் தாங்கள் என்ன லாபத்தைக் கண்டீர்கள்? என்ன பலனை உத்தேசித்து என்னை இங்கே சிறைப்படுத்தி வைத்திருக்கிறீர்கள்?...."

"சிவகாமி! சொல்கிறேன், கேள்! என் சொற்படி காலமல்லாத காலத்தில் காஞ்சி மேல் படையெடுத்த காரணத்தினால் வாதாபியின் வீர சைனியத்தில் பாதிக்கு மேல் அழிந்துவிட்டது. வேங்கியை வென்று சென்ற வருஷம் மகுடம் சூடிய விஷ்ணுவர்த்தனன் அந்த வெற்றியை நிலைநாட்டிக் கொள்ள முடியாமல் மாண்டான். இந்த விபரீதங்களுக்கெல்லாம் காரணமானவள் நீதான்! உன்னை முன்னிட்டுதான் இதையெல்லாம் நான் செய்தேன். ஏன் என்று சொல்லுகிறேன், கேள்!"

இந்தப் பூர்வ பீடிகையுடன் நாகநந்தி பிக்ஷு தமது கதையைக் கூறத் தொடங்கினார். அஜந்தா குகைகளில் தாம் கழித்த இளம் பிராய வாழ்க்கையைப் பற்றிக் கூறினார். அஜந்தா குகைச் சுவரில் தாம் பார்த்த பரதநாட்டியப் பெண் சித்திரத்தைக் குறித்தும், அதைப்பற்றித் தாம் கண்ட மனோராஜ்யக் கனவுகளைக் குறித்தும் சொன்னார். தென்னாட்டின் நிலைமை எப்படியிருக்கிறதென்று அறிந்து கொள்ளத் தாம் யாத்திரை வந்தது பற்றியும், அப்போது ஆயனர் வீட்டில் அஜந்தா சித்திர கன்னிகை உயிர் பெற்று வந்து நடனமாடிய காட்சியைக் கண்டு பிரமித்தது பற்றியும் உணர்ச்சி ததும்ப விவரித்தார்.

"சிவகாமி! அன்று முதல் நான் ஒரு புது மனிதன் ஆனேன். சளுக்க சாம்ராஜ்யத்தின் மகோன்னதத்தைப் பற்றி அதுவரை நான் கட்டிக் கொண்டிருந்த ஆகாசக் கோட்டைகள் தகர்ந்து விழுந்தன. இந்தப் பரந்த பரதகண்டம் முழுவதையும் புத்த சங்கத்தின் ஆதிக்கத்தின் கீழ்க் கொண்டு வர வேண்டும் என்றும், அப்பேர்ப்பட்ட மகா புத்த சங்கத்துக்கு நான் தலைமைப் பிக்ஷு ஆகவேண்டும் என்றும் நான் கொண்டிருந்த மனோரதங்களும் மறைந்தன. 'சாம்ராஜ்யங்களும் புத்த சங்கங்களும்

எப்படியாவது போகட்டும். உன்னை நடனமாடச் சொல்லிப்பார்த்துக்கொண்டே என் வாழ்நாளைக் கழித்து விடுவது' என்று சங்கல்பம் செய்து கொண்டேன். அதற்குப் பிறகு உன்னை எப்படி இந்த வாதாபி நகருக்குக் கொண்டு சேர்ப்பது என்பது ஒன்றே என் மனக்கவலை ஆயிற்று. அதற்காக என்னவெல்லாமோ சூழ்ச்சிகள் செய்தேன். எத்தனையோ உபாயங்களைக் கையாண்டேன்...."



இப்படிப் பிக்ஷு சொல்லி வந்தபோது, சிவகாமியின் உள்ளத்தில் ஏற்கெனவே குடிகொண்டிருந்த பெருமிதமான கர்வமும் பரிதாப உணர்ச்சியும் சேர்ந்தாற்போல் பொங்கிக் கொண்டு வந்தன. 'ஆகா! இந்த ஏழைச் சிற்பியின் மகள் காரணமாக இரண்டு பெரிய சாம்ராஜ்யங்கள் சண்டைபோட நேர்ந்ததல்லவா?' என்ற பெருமித கர்வத்தை அடுத்து, 'ஐயோ! காஞ்சியிலிருந்து வாதாபி வரும்போது நான் பார்த்த அத்தனை கொடுமைகளும் என் காரணமாக ஏற்பட்டனவா?' என்ற பரிதாப உணர்ச்சியும் மேலிட்டு வந்தது.

"சிவகாமி! உன்னுடைய கலையின் மேல் நான் கொண்ட மோகத்தினால் ஒரு பெரிய யுத்தத்தையே உண்டு பண்ணினேன். பயங்காளியும், கோழையுமான அந்த அற்பன் மாமல்லனிடமிருந்து உன்னைக் காப்பாற்ற இவ்வளவு பிரம்மப் பிரயத்தனங்களும் செய்தேன். ஆனால் அவ்வளவும், இப்போது நிஷ்பலனாயின. நான் இல்லாத சமயத்தில் உன்னைத் தெரு வீதிகளின் நாற்சந்தியில் ஆடச்செய்து, உன்னையும் உன் கலையையும் நிர்மூடன் புலிகேசி கேவலப்படுத்திவிட்டான். சிவகாமி! என்னை மன்னித்துவிடு, நீ பட்ட அவமானத்திற்கும் நீ அடைந்த துன்பத்திற்கும் பரிகாரம் செய்து விடுகிறேன். உன்னை உன் தந்தை வீட்டில் கொண்டு போய் விட்டுவிட ஏற்பாடு செய்கிறேன். சக்கரவர்த்தியிடம் போராடி இதற்கு அனுமதியும் பெற்று வந்துவிட்டேன்."

இதைக் கேட்டதும் சிவகாமி நியாயமாகத் துள்ளிக் குதித்துக் குதூகலமடைந்திருக்க வேண்டுமல்லவா? விதிவசத்தினாலோ அல்லது விசித்திரக்கோணல்கள் நிறைந்த பெண் மனோபாவத்தினாலோ, சிவகாமி அவ்விதம் மகிழ்ச்சியடையவில்லை. மௌனமாகச் சிந்தனையில் ஆழ்ந்திருந்தாள்.

"சிவகாமி! ஏன் பேசாமலிருக்கிறாய்? எப்போது புறப்படலாம், சொல்! உன்னைப் பல்லக்கில் ஏற்றித் தக்க பாதுகாப்புடன் அனுப்பிவைக்கிறேன். உனக்குப் பணிவிடைப் புரியப் பணிப்பெண்களையும் உன்னைப் பாதுகாப்பதற்கு வீரர்களையும் அனுப்பி வைக்கிறேன். பொன்முகலி ஆறு வரையில் உன்னைக் கொண்டு போய் விட்டுவிட்டு அவர்கள் திரும்புவார்கள்..." என்று புத்த பிக்ஷு கூறி வந்தபோது, அதுகாறும் உட்கார்ந்து பேசிக் கொண்டிருந்த சிவகாமி சட்டென்று எழுந்து நின்று, ஆவேசம் ததும்பிய குரலில் பின்வரும் பயங்கர மொழிகளைக் கூறினாள்.

"அடிகளே! கேளுங்கள், இந்த வாதாபி நகரத்தை விட்டு நான் எப்போது கிளம்புவேன் தெரியுமா? பயங்கொள்ளி என்று நீங்கள் அவதூறு சொல்லிய வீர மாமல்லர் ஒரு நாள் இந்நகர் மீது படையெடுத்து வருவார். நரிக்கூட்டத்தின் மீது பாயும் சிங்கத்தைப் போலச் சளுக்க சைனியத்தைச் சின்னா பின்னம் செய்வார். நாற்சந்தி மூலைகளில் என்னை நடனம் ஆடச்செய்த பாதகப் புலிகேசியை யமன் உலகத்துக்கு அனுப்புவார். தமிழகத்து ஸ்திரீ புருஷர்களைக் கையைக் கட்டி ஊர்வலம் விட்ட வீதிகளில் இரத்த ஆறு ஓடும். அவர்களை நிறுத்திச் சாட்டையால் அடித்த நாற்சந்திகளிலே வாதாபி மக்களின் பிரேதங்கள் நாதியற்றுக்கிடக்கும். இந்தச் சளுக்கர் தலைநகரின் மாட மாளிகை, கூட கோபுரங்கள் எரிந்து சாம்பலாகும், இந்த நகரம் சுடுகாடாகும்.

அந்தக் காட்சியை என் கண்ணால் பார்த்துவிட்டுப் பிறகுத்தான் இந்த ஊரைவிட்டுக் கிளம்புவேன். சளுக்கப் பதர்களை வென்று வெற்றி மாலை சூடிய மாமல்லர் என் கரத்தைப் பிடித்து அழைத்துக்கொண்டு போவதற்கு வருவார். அப்போதுதான் புறப்படுவேன், நீர் அனுப்பிப் போக மாட்டேன். பல்லக்கில் ஏற்றி அனுப்பினாலும் போகமாட்டேன். யானைமீது வைத்து அனுப்பினாலும் போக மாட்டேன்!"

இந்தப் பயங்கரமான சபதத்தைக் கேட்ட நாகநந்தியின் முகத்திலே புன்னகை தோன்றியது. தம்முடைய சூழ்ச்சி மீண்டும் பலித்துவிட்டது என்று எண்ணி அந்தப் பொல்லாத பிக்ஷு உள்ளுக்குள் உவகை அடைந்தார் போலும்!

(சபதம் தொடரும்)



# யோக

## யோகா – வாழ்வியல் நெறி !

பாரத நாட்டிலுள்ள ஆறு தத்துவ தரிசனங்களில் ஒன்றாக யோகமானது திகழ்கிறது. பண்டைக் காலத்திலிருந்தே முனிவர்களும், சித்தர்களும், தவசீலர்களும், யோகிகளும், ஞானிகளும், தன்னை உணர்ந்தோரும் மனிதகுலத்தின் மீது அளப்பரும் அன்பும் இரக்கமும் பரிவும் கொண்டு மனித வாழ்க்கையின் குறிக்கோளை மிக நுட்பமாக அறிந்து உணர்ந்து, அந்த முக்தியை அடைவதற்கு உரிய பல அரிய நெறிமுறைகளை அருளினர். மனிதன் முக்தி அடைவதற்கு உடல் நலமும் மனநலமும் இன்றியமையாதவை.


மனிதன் தன் உண்மையான இயல்பை உணர்ந்து, முக்தியை அடைய உடல், மன நலத்துடன் வாழ்ந்து உண்மையான உயர்ந்த இன்பத்தை அடையும் வழிகளைத் திருமூலர் திருமந்திரத்தில் மனிதகுலத்துக்கு வழங்கியுள்ளார். திருமூலரின் திருமந்திரமானது, பன்னிரு சைவத் திருமுறைகளின் பத்தாம் திருமுறையாக அமைந்துள்ளது. திருமூலர் அறுபத்து மூன்று மெய்யடியார்களில் ஒருவர் ஆவார். இவர் அட்டமாசித்திகளில் தேர்ந்த ஞானயோகி ஆவார்.

யோகம் என்னும் சொல்லுக்கு இணைதல், சேர்தல், ஒருமுனைப்பாடு எனப் பல பொருள்கள் உள்ளன. நம் உடல், மனம், மூச்சு, அறிவு என்னும் இவ்வனைத்தும் ஒருங்கிணைந்து செயலாற்றுவதுதான் உண்மையான யோகமாகும்.

திருமந்திரத்தில் மூன்றாம் தந்திரத்தில் அட்டாங்கயோகம் குறித்து விவரித்துள்ளார். யோகத்தின் எட்டு அங்கங்களான இயமம், நியமம், ஆசனம், பிராணாயாமம், பிரத்தியாஹாரம், தாரணம், தியானம், சமாதி என்னும் இவற்றைக் குறித்து ஆழமாக விளக்கியுள்ளார்.

ஆசனம் எனின் உடலை ஒரு நிலையில் இருத்துவது ஆகும். திருமூலர் பத்மாசனம், பத்திராசனம், சிம்மாசனம், குக்குடாசனம் (கோழி) என்னும் ஆசனங்களின் செயல்முறை விளக்கத்தையும் அளித்துள்ளார். ஆசனப் பயிற்சியை மேற்கொள்வதால் உடலிலுள்ள அனைத்து உறுப்புகளும், முக்கியமாக உள்உறுப்புகள் சரிவர செயல்படுகின்றன.

தசைகளும், எலும்புகளும், நரம்புகளும் வலிமை எய்துகின்றன. உடலின் இறுக்கம் தளர்ந்து நெகிழ்வு ஏற்படுகிறது. உடலில் சோர்வு ஏற்படாதவாறு தொடர்ந்து பல மணி நேரத்துக்கு புத்துணர்வுடன்





# யோகம்

கல்யாணி வெங்கடராமன்

செயலாற்ற முடிகிறது. ரத்த ஓட்டம் சீராகிறது. முதுமையில் ஏற்படும் உடல், மனம், மூளை சார்ந்த பல நோய்களிலிருந்து நம்மை பாதுகாத்துக்கொள்ள முடியும்.

பிராணாயாமம் என்பது மூச்சுப் பயிற்சியாகும். இதனால் உடலில் பிராண ஓட்டம் அதாவது மூச்சு ஓட்டம், ரத்த ஓட்டம் என்பவை சீராக முறையாக நடைபெறும். உடலில் தேங்கியுள்ள கழிவுகள் மற்றும் நச்சுப் பொருள்கள் அகற்றப்படுகின்றன. உடலின் வெப்ப நிலையானது தொடர்ந்து சீராக இருக்கும். நுரையீரல் சார்ந்த, ரத்த அழுத்தம் சார்ந்த தொந்தரவுகளுக்கு மூச்சுப் பயிற்சி நற்பயனை நல்குகிறது.




இடதுபக்க மூக்குத் துளையின் வழியாக மூச்சினை உள்ளிழுப்பது பூரகம் (ஏறுதல்) எனப்படும். இது பதினாறு மாத்திரை அளவாகும். இழுத்த மூச்சை அறுபத்து நான்கு மாத்திரை அளவு உள்ளே நிறுத்தி வைப்பது கும்பகமாகும் (ஆறுதல்). இடது மூக்குத் துளையின் வழியாக உள்ளே நிறுத்தி வைத்த மூச்சை வலதுபக்க மூக்குத்துளையின் வழியாக முப்பத்திரெண்டு மாத்திரைப் பொழுதில் வெளியேற்றுதல் ரேசகமாகும் (ஊறுதல்).

நமது உடலை ஆரோக்கியமாக வைத்துக் கொள்ள ஹதயோகம் உதவுகிறது. ஆரோக்கியமான உடலில் இருக்கும் உள்ளமும் உறுதியாக இருக்கிறது. யோகாசனங்களின் மூலமாகவும், பிராணாயாமத்தைக் கொண்டும் அந்த உள்ளத்தின் கவன சக்தியைக் கூர்மையாக்கிக் கொள்ளலாம்.

நாம் பார்க்கும் காட்சிகளும், காதால் கேட்பவைகளும் நமது சிந்தனையைக் கவனமாக ஊன்ற விடாமல் தடுக்கின்றன. மற்ற புலன்களும் இப்படி கவனத்தைக் கலைக்கத் தூண்டுகின்றன. மனம் இப்படி அலைபாயாமல் தடுப்பதற்கு உதவும் ஹதயோகம் ,பிராணாயாமத்தையும் அதை ஒட்டிய மூச்சுப் பயிற்சிகளையும் குறிப்பிடுகிறது.

ஓர் அலாரம் கடிகாரத்தை எடுத்து உங்கள் முன்னால் வைத்துக்




கொள்ளுங்கள். மற்ற சிந்தனை எதுவும் இன்றி, 'டிக் டிக்' என்ற அதன் சப்தத்தைக் கவனமாகக் கேளுங்கள். இப்படி நீங்கள் முயலும்போதே, பிற சிந்தனைகள் வந்து உங்கள் மனதை அலைக்கழிக்கக்கூடும். பிடிவாதமாக மனதைக் கட்டுப்படுத்தி இந்தப் பயிற்சியைத் தொடருங்கள். முதலில் சில நிமிடங்களுக்கு இப்படி இருக்க முடியும். பிறகு தொடர்ந்து இவ்வாறு இருக்கவும் பழகி விடுவீர்கள்.

இப்படி நீங்கள் கவனிக்க முயலும்போது என்ன நடக்கிறது? உங்களுக்கே தெரியாமல் உங்களுடைய மூச்சைக் கட்டுப்படுத்துகிறீர்கள். மிக மெதுவாகவும், அடக்கியும், ஆழ்ந்தும் மூச்சு விடுகிறீர்கள். இது எதைக் காட்டுகிறது? மனம் கவனமாக ஊன்றும்போது மூச்சு விடுவதின் அளவு கட்டுப்படுத்தப்படுகிறது.

பிராணன் மனதில் அமர்ந்திருக்கிறது. ஆகையால் பிராணன் அசையும்போது மனம் இயங்குகிறது' என்று சிவ கீதை கூறுகிறது. "பிராணன் நீங்கும்போது மனம் செயலற்றுப் போகிறது. மனதைத் தேர் என்று சொன்னால், பிராணனை அதன் சாரதி என்று சொல்லலாம். இரண்டும் சேர்ந்து இயங்கும்போது உயிரோட்டம் தேர் போலச் சீராக ஓடுகிறது" என்று வசிஷ்ட முனிவர் 'யோக வாசிஷ்டத்' தில் கூறுகிறார்.

ஹதயோகத்தின் இரண்டு எழுத்துக்கள் 'ஹ' என்பதும், 'த' என்பதும் ஆகும். இவை சூரியனையும், சந்திரனையும் குறிக்கின்றன. பிராணவாயு சூரியனாகவும், அபானவாயு சந்திரனாகவும் இதில் குறிப்பிடப்படுகின்றன. உடலில் ஓடும் இந்தக் காற்றைக் கட்டுப்படுத்துவதும், வெளி உலகில் பரவி நிற்கும் காற்றுடன் இணைய வைப்பதும் பிராணாயாமத்தின் அடிப்படையாகும்.

பிராணன் என்பது உயிர்ச்சக்தி. அது உலகெங்கும் காற்றாகவும், நீராகவும், உணவாகவும் பரவிக் கிடக்கிறது. இப்படி வெவ்வேறு பொருட்களில் பரவி நிற்கும் பிராணசக்தியை, பிராணாயாமத்தின் மூலம் நாம் உடல் முழுவதும், எல்லா நரம்புகளிலும் நாடிகளிலும் இயங்க வைக்கிறோம். சிந்தனையிலிருந்து சாதாரண உடல் அசைவு வரை ஒவ்வொன்றையும் இது கவனித்துக் கொள்ளுகிறது. அதனாலேயே பிராணாயாமம் நம்முடைய உடலைப் பிணிகள் பீடிக்காமல் பார்த்துக் கொள்ளும் என்று சொல்லுகிறோம்.


கடலில் அசைவு இருக்கும்போது அலைகள் எழுந்து வருவதைப் பார்க்கிறோம். பிராணனின் அசைவும் இவ்வாறே மூச்சாக வெளிப்படுகிறது. இதை அளவாக உள்ளே இழுப்பதும், சற்று தங்க வைத்து நிறுத்துவதும், பின் வெளியிடுவதும், இந்த அசைவைக் கட்டுப்படுத்துகின்றன. இப்படிப் பிராணாயாமம் செய்யும்போது, உடல் கட்டுப்பாட்டுக்கு வருகிறது. மூச்சுவிடுதல், ரத்த ஓட்டம், இதயத் துடிப்பு, ரத்த அழுத்தம் போன்றவைகளுடன் தொடர்பு உள்ள நோய்களும் தாமாகவே நீங்கி விடுகின்றன.




மனித உடலில் பிராணன் செய்யும் மிக நுட்பமான இயக்கம், மனதைச் செயற்பட வைப்பதுதான். இதைப் பிராணாயாமம் சிறப்பாக ஆக்குகிறது. மனித உடலில் மிக முக்கியமான இயக்கம், சுவாசத்துக்கு உதவும் சுவாசப் பைகள்தாம். அது சரியாக இல்லாவிட்டால் இதயம் உட்பட எல்லாமே சீர்கெட்டுப் போகும். பிராணாயாமம் சுவாசத்தை கட்டுப்படுத்துகிறது. அதன் மூலம் உடல் முழுவதையுமே பிராண சக்தியினால் கட்டுப்படுத்துகிறது. இதனால் நோய்நொடியில்லாத வாழ்க்கையை நாம் பெற முடிகிறது. இப்படி உள்ளமும், உடலும் வலுவடைந்த ஒருவர், தன்னுடைய சக்தியைப் பயன்படுத்திப் பிறரையும் குணப்படுத்த முடியும். 'தொட்டுக் குணப்படுத்துவது'—**Healing Therapy** என்ற மருத்துவ முறையின் அடிப்படை இதுதான்.

பிராணசக்தியை, பேட்டரியில் 'பவர்' சேகரிக்கப்படுவதைப் போல், உடலின் நாபிப் பகுதியில் சேகரித்து வைத்துக் கொள்ள முடியும். இப்படிச் செய்யக்கூடிய மகான்கள், அதைப் பயன்படுத்தி நோயாளிகளைக் குணப்படுத்துகிறார்கள். மீண்டும் பிராணாயாமத்தின் மூலம் உடல்நலம் பெறுகிற சக்தியும் அவர்களுக்கு உண்டு. நாபியிலிருந்து எழும் சக்தி, அந்த யோகிகளின் மூளையையும் பிரகாசமாக்குகிறது.

இவ்விதம் அருள்வலிமை பெற்ற யோகிகளுக்கு முகத்திலேயே தனியான பிரகாசம் சுடர்விடுகிறது. அவர்களுடைய பார்வையிலேயே அந்தச் சக்தி ததும்புகிறது. அவர்களுக்கு எதிரே உட்கார்ந்திருப்பவர்களால் அதன் வலிமையை உணரமுடிகிறது. பார்வையினாலேயே மற்றவர்களுடைய கவலையைப் போக்கி அருள்புரியும் சக்தியையும் அந்த மகான்கள் பெறுகிறார்கள். தொடுதல் மூலமாக காந்த சக்தியை செலுத்தி குணப்படுத்துவது, பார்வையால் குணப்படுத்துவது, நம்பிக்கையூட்டிக் குணப்படுத்துவது போன்ற நற்காரியங்களுக்கு அவர்கள் இந்த அரிய சக்தியை பயன்படுத்துகிறார்கள். சுயநலமின்றி




இவ்வாறு அவர்கள் செய்யும்போது அது மேலும் மேம்பாடு அடைகிறது.


நம்முடைய அன்றாட வாழ்க்கையிலும் கூட நாம் சிறுகாரியங்களில் பிராண சக்தியைப் பயன்படுத்தி ஆறுதல் அடைகிறோம். கனமான ஒரு பொருளை தூக்கும்போது, மூச்சைப் பிடித்துக் கொண்டு தூக்குகிறோம். வேகவேகமாக ஓட முயலும்போது, மூச்சைப் பிடித்துக் கொண்டு ஓடுகிறோம். ஆழ்ந்த கவலையில் ஈடுபடும்போது, பெருமூச்சு விடுகிறோம். அப்போதெல்லாம் நாம் பிராண சக்தியைத்தான் பயன்படுத்துகிறோம்.

நாம் புத்தகத்தில் படிக்கும் வாசகங்கள் நம்முடைய மனதில் படிவதில்லை. ஆனால் அதையே அருளாளர்கள் உரையாக எடுத்து சொல்லும்போது அது மனத்தில் படிகிறது. பல சமயங்களில் மனதை மாற்றிக் கனியவும் வைக்கிறது. இதற்கு அவர்களிடம் சேர்ந்துள்ள பிராணசக்தியே காரணம். ஆயிரக்கணக்கான மக்களைக் கவரும் சக்தியும், அவர்களைத் தனது போதனையின்படி செயற்பட வைக்கும் திறனும், மகான்களுக்கு இருப்பதற்கு இது முக்கியமான காரணம்.

பிராணாயாமப் பயிற்சியின் மூலம், நம் உடலில் பிராணசக்தி இயங்குவதையும் நாம் நுட்பமாக உணரமுடியும். உடலில் ஒரு பகுதியில் அது அதிகமாகவும், இன்னொரு பகுதியில் குறைவாகவும் இருப்பதையும் புரிந்து கொள்ளலாம். குறைவாக உள்ள பகுதிக்கு, அதிகமாக உள்ள பகுதியிலிருந்து திருப்பிவிடும் ஆற்றலையும் நாம் பெறமுடியும். இப்படி பிராணசக்தி சமச்சீராகப் பரவும்போது, உடம்பின் எல்லாப் பகுதிகளும் வலுப்பெறுகின்றன; சிந்தனையும் கூர்மையாக ஆகிறது.

பிராணசக்தி இயற்கையில் எங்கும் நிறைந்திருக்கிறது. அதன் பலனை எல்லோருமே பெறமுடியும். ஆனால் அதை அடையும் வல்லமை பிராணாயாமத்தை முறைப்படி செய்து மனவலிமை பெறும் யோகியருக்கே உரியதாக ஆகிறது. அவர்களிடம் ஒரு சமூகத்தையே வழிப்படுத்தக்கூடிய அளவுக்கு மனோபலம் சேருகிறது. தன்னலமின்றி அவர்கள் அதைப் பயன்படுத்தும்போது, அதனால் உடல்நலம் பெறுவோர் பலர், மனம் திருந்துவோர் பலர், பக்தி மார்க்கத்தில் ஈடுபடுவோர் பலர். நாம் ஓர் ஆயுட்காலத்தில் செய்யமுடியாத காரியத்தை சில நொடிகளில் செய்து முடிக்கக்கூடிய ஆற்றலும் அவர்களுக்கு இருக்கிறது.

முதலில் உடல்வலிமையைப் பெறுவதற்காகவும், ரத்தஓட்டம் — உடல் நரம்புகளின் இயக்கம்






ஆகியவற்றைச் சீராக்குவதற்காகவும்தான் பிராணாயாமப் பயிற்சியைத் தொடங்குகிறோம். ஆனால் போகப்போக அதுவே நமது உள்ளத்தைத் தூய்மைப்படுத்தவும், சிந்தனையை வளப்படுத்தவும், ஆன்மிக முன்னேற்றத்தை நாடவும் வழி செய்து கொடுக்கிறது. தன்னை உணருவதற்கும், தன்னை மறந்து ஆழ்ந்த தியானத்தில் இருக்கவும் அது பயன்படுகிறது. உடல்வலிமைக்காகச் செய்யும்போது ஹதயோகமாக இருந்தது. பின் மனவலிமைக்காகப் பயன்படும்போது ராஜயோகமாக மாறிவிடுகிறது. இவை இரண்டும் நாணயத்தின் இரண்டு பக்கங்களைப் போன்றவைதாம்.

பெரும்பாலான மக்கள் பிராணாயாமத்தை, ஹதயோகம் குறிப்பிடும் அளவுக்கு உடற்பயிற்சியாகவே செய்து முடித்து விடுகிறார்கள். அப்போது அது உடற்பிணிகள் தீருவதற்கு மட்டும் வழிகாட்டுகிறது. ஆனால் அவர்களில் சிலர் பிராணாயாமத்தை ராஜயோக அடிப்படையிலும் செய்கிறார்கள். அப்போது அது மனதின் வலிமையையும் கூர்மையையும் உணர்த்துகிறது. அந்த நிலையில் பக்திமார்க்கத்தில் ஈடுபடவும், ஆன்மிக முன்னேற்றம் பெறவும் அவர்களால் முடிகிறது.

இப்படி இருவிதமாகவும் பலன் தரும் பிராணாயாமத்தை முறைப்படி கற்க வேண்டும். தன்னலமில்லாத ஞானாசிரியரிடம் அதைக் கற்கும்போது அது நமக்கு மேலும் மேன்மை பெற வழிகாட்டுகிறது.

பிராணாயாமப் பயிற்சியால் மனம் ஒருமுகப்பட்டு ஒருவிதமான மகிழ்ச்சியை எய்துகிறது. மற்றும் மூச்சுப் பயிற்சியானது முதுமையைத் தடுத்து நிறுத்தும். முதன்முதலில் மூச்சுப் பயிற்சியை மேற்கொள்வோர் கும்பகம் செய்வதைத் தவிர்க்க வேண்டும். ஆங்கில மருத்துவத்தைப் பயன்படுத்துவதால் ஏற்படும் பக்கவிளைவுகளைப் பிராணாயாமப் பயிற்சியால் அவை ஏற்படாதவாறு தடுத்துக்கொள்ள இயலும்.

மனமடங்கவும், ஆன்மிகத்தில் உயர்ந்த அனுபவங்களைப் பெறவும், தியானத்தை திருமூலர் வலியுறுத்தியுள்ளார். மனமானது தன் சிதறுண்ட எண்ணங்களிலிருந்தும், உணர்வுகளிலிருந்தும், கிளர்ச்சிகள், குழப்பங்களிலிருந்தும் முற்றிலும் விடுபடுவதுதான் தியானமாகும். இந்தியாவில் முற்காலத்திலிருந்தே ஓம்கார தியானமானது நடைமுறையில் உள்ளது. ஓம்கார தியானத்தை மேற்கொள்வதால் மனமும் மூளையும் அமைதி எய்தித் தம் ஆற்றலைப் பெருக்கிக் கொள்கின்றன. தியானத்தில் உயர்நிலை எய்தியோருக்கு மணி, கடல், யானை, இனிய புல்லாங்குழல், கார்மேகம், அழகிய வண்டு, சிறு தும்பி, சங்கு, பேரியாழ் என்னும் இவற்றின் இன்னொலிகளைச் செவிமடுக்கவியலும். சில மூச்சுப் பயிற்சிகளை முறையாகச் செய்து தியானம் செய்தால் அனைவராலும் இவ்வொலிகளைக் கேட்கவியலும்.

இறுதியாக சிவானந்தத்தை எப்படி அடைய வேண்டும் என்பதையும் விளக்கியுள்ளார். மனதிலே எட்டாயிரம் முறைகள் நமசிவாய மந்திரத்தை இடையீடின்றி தொடர்ந்து கூறினால் மேல் உச்சித் தொளையில் (சகஸ்ராரத்தில்) சிவதரிசனம் கிடைக்கப்பெற்று சிவானந்தத்தை எய்தலாம். தற்காலத்தில் மனித வாழ்க்கையானது எதற்கும் நேரமில்லை என்பதைப் போல விரைந்து ஓடிக் கொண்டுள்ளது. பெண்கள் பருவமடைதல், தாய்மை எய்துதல் என இவ்வனைத்தும் இயல்பாக நடைபெறாமல், மருத்துவத்தின் துணையுடன் நிகழத்தக்க நிலை உள்ளது.

திருமூலர் விவரித்துள்ள இல்லற வாழ்வியல் சார்ந்த கருத்துகளை மனதில் கொண்டு அவருடைய யோக நெறிமுறைகளைப் பின்பற்றினால் நல்ல பலன்களை அடையலாம்.




## சிறுநீரகங்களில் கற்கள்– கரைக்க உதவும் உணவுகள் !

முறையற்ற உணவுப்பழக்க வழக்கத்தாலும் மாறிவரும் வாழ்வியலாலும் மனித உடலின் கழிவுகள் வெளியேறும் பாதையில் சிக்கல்கள் ஏற்படுகின்றன. சிறுநீரகக் கல் பிரச்னை இதில் முக்கியத்துவம் வாய்ந்ததாக இருக்கிறது. இது உடலில் கொடூரமான வலியை ஏற்படுத்த வல்லது என்கிறார்கள் மருத்துவர்கள். சிறுநீரகக் கல் என்றால் என்ன? அதைச்சுற்றி நாம் அறிந்துகொள்ள வேண்டிய தகவல்கள் என்ன என்பதை எளிமையாக விளக்குகிறது இந்தக் கட்டுரை. இதுகுறித்த எளிய கேள்விகளுக்கு துல்லியமான பதில்களை வழங்குகிறார் சிறுநீரக சிகிச்சை நிபுணரான மருத்துவர் மதுஷங்கர். சிறுநீரகம் அல்லது சிறுநீர்ப் பாதையில் அளவுக்கு அதிகமான யூரிக் அமிலம், கால்சியம் போன்ற தாது உப்புகள் தேங்குவதால் உருவாகும் கற்களுக்கு சிறுநீரகக்கற்கள் என்று பெயர்.

சிறுநீரகக் கல் ஏன் உருவாகிறது?

சிறுநீரில் அதிகமான யூரிக் அமிலம் இருந்தாலோ அல்லது கல் உருவாவதைத் தடுக்கும் காரணிகளான சிட்ரேட் ஆகியவை குறைவாக இருப்பதாலும் உருவாகின்றன. மொத்தத்தில் யூரிக் அமிலத்தின் அளவுக்கும் தடுக்கும் அமிலங்களின் அளவுக்கும் இடையிலான விகிதம் இதில் முக்கியமான அம்சமாக இருக்கிறது. சிலருக்கு சிறுநீரில் அதிகமான கால்சியம் இருப்பது, மரபு வழியாகவும் ஏற்படும். அதுபோக உணவுப் பழக்கம், தண்ணீர் குறைவாகக் குடிப்பது ஆகியவற்றாலும் இந்த பாதிப்பு ஏற்படலாம்.


பெரும்பாலான கற்கள் கால்சியம் வகையைச் சேர்ந்தவையாக இருக்கலாம். கற்கள் எந்தத் தாது உப்பை அடிப்படையாக கொண்டவை என்பதை பொறுத்து அவை வகைப்படுத்தப்படுகின்றன.

- யூரிக் அமிலக் கற்கள்
- சல்பேட் கற்கள்
- மும்மைக் கற்கள்
- சிஸ்டீன் கற்கள்

சிறுநீரகக் கல் இருப்பதற்கான அறிகுறிகள் என்னென்ன?

பெரும்பாலான சமயங்களில் எந்த அறிகுறியும் இருக்காது. ஸ்கேன் எடுக்கும்போதுதான் தெரியவரும். சிலருக்கு சிறுநீர் வெளியாகும்போது அதில் கல்லும் வெளியேறும். அப்போது வலி ஏற்படும். அந்த வலி பின் வயிற்றிலிருந்து பரவி வரும். சிலருக்கு சிறுநீரில் ரத்தமும் வெளியேறலாம். இதுபோன்ற அறிகுறிகள் மூலம் நாம் சிறுநீரகக் கற்கள் பாதிப்பை உணர முடியும். உணவை முறைப்படுத்துவதுதான் ஒரே வழி. பிரதானமாக உப்பு. நாள் ஒன்றுக்கு 5 கிராமுக்கு மேல் உப்பு சேர்த்துக்கொள்ளக் கூடாது. நிறைய தண்ணீர் பருக வேண்டும். புரதச்சத்துக்காக இறைச்சி உள்ளிட்ட அசைவ உணவுகளை விட பயிறுகள், பருப்பு உள்ளிட்ட சைவ உணவுகளை எடுத்துக் கொள்ள வேண்டும். சாக்லேட், கீரை, நட்ஸ் (முந்திரி, பாதாம், பிஸ்தா) போன்றவற்றை உண்பது இந்த சிறுநீரக கல் உருவாவதற்கான வாய்ப்பை அதிகரிக்கும். ஆனால், எந்த உணவாக இருந்தாலும் அதிலிருக்கும் உப்பின் அளவுதான் பிரதானமான காரணி.

பொதுவாக 5 முதல் 6 மி.மீ விட்டமுள்ள கற்கள்






இருந்தால் அவை சிறுநீர் வழியாகவே வெளியேறி விடும். அந்த சமயங்களில் சில அசௌகரியங்கள் ஏற்படலாம். அதற்கு மேல் அளவுள்ள கற்கள் என்றால் மேலதிக சிகிச்சைகள் அவசியம். அறிகுறிகள் இருந்தால் முதலில் அல்ட்ரா சவுண்ட் ஸ்கேன் செய்ய வேண்டும். சிறுநீரகத்தில் இருக்கும் பெரிய கற்களை இந்த சோதனையில் கண்டுபிடித்துவிட முடியும். ஆனால், சிறிய கற்களாகவோ அல்லது சிறுநீர்ப்பையிலோ இருந்தால் சிடி ஸ்கேன் செய்ய வேண்டி வரும். இதன் மூலம் கண்டுபிடிக்கப்பட்ட கல்லின் அளவு மற்றும் இடத்தை பொறுத்து லேசரோ அல்லது அறுவை சிகிச்சையோ செய்ய வேண்டி வரும்.

இயற்கையாகவே இதை கரைக்க வாய்ப்புண்டா?


உணவுப்பழக்கமும் தொடர்ச்சியாக தண்ணீர் அருந்தும் பழக்கமுமே இந்த கற்களை கரைக்கப் போதுமானது. முறையான உப்பு அளவும்,


டாக்டர்

**சந்தோஷ். எஸ்**



தேவையான அளவு தண்ணீரும் இருந்தால் கற்களை கரைப்பது எளிமையானது. எங்கள் நோயாளிகளில் பலருக்கும் மருந்துகளோடு சேர்த்து உணவுப்பழக்க முறைமையை மாற்றவும் பரிந்துரைக்கிறோம். அவரவர் உடலின் தேவைக்கேற்ப நீர் பருக வேண்டும்.

அதிக பாதிப்பு ஆண்களுக்கு மட்டுமா? ஆம். அதிகம் வெளியே செல்வது உடல் உழைப்பால் வியர்வை மூலமாக நீரிழப்பு ஆகிய பிரச்னைகள் இருப்பதால் ஆண்களுக்கு இந்த பாதிப்பு அதிகம். ஆனால், மாறிவரும் வாழ்வியலில் அதிக நேரம் மலஜலம் கழிக்காமல் அமர்ந்தபடி வேலை செய்வோர், குறிப்பாக ஷிஃப்ட் அடிப்படையில் வேலை செய்வோர் ஆகியோருக்கு இந்த பாதிப்பு அதிகம் ஏற்பட வாய்ப்புண்டு. மேலும், சூடான இடங்களில் வேலை செய்வோர், நீர் குடிப்பதற்கான வாய்ப்புகளற்ற வேலையிடங்கள் ஆகியவற்றில் பணிபுரிவோருக்கு இந்த பாதிப்பு ஏற்பட வாய்ப்பு அதிகம்.




ஒருமுறை சிறுநீரகக்கற்கள் வந்துவிட்டால், அது மீண்டும் வருவதற்கான வாய்ப்பு உண்டு. ஒருமுறை அறுவை சிகிச்சை செய்துவிட்டால், அதன்பிறகு வராது என்று நம்பக்கூடாது. சொல்லப்போனால், தொடர்ச்சியாக இதுபோல சிறுநீரக்கற்கள் பிரச்னை வந்துகொண்டே இருக்கும் நோயாளிகளுக்கு சிறுநீரகம் செயலிழப்பதற்கான வாய்ப்புகளும் அதிகம். ஏன் வந்தது என்பதைக் கண்டறிவதுதான் சிகிச்சையின் பிரதான நோக்கம். அதைச் சரிசெய்யும் வரையில் மீண்டும் மீண்டும் வருவதற்கான வாய்ப்பைக் குறைக்க முடியாது.

முன்பெல்லாம் 40 வயதுக்கு மேற்பட்டோரின் பிரச்னையாக




இருந்த இது, அண்மைக்காலமாக இளம்வயதினருக்கு, பால் வேறுபாடு இன்றி, அதிக எண்ணிக்கையிலான கற்கள் உருவாகின்றன. இது தொடர்பாக அதிகாரபூர்வமாக அறிவிக்கப்பட்ட தரவுகள் ஏதும் இல்லை என்றபோதும் அதிகரித்துக்கொண்டிருக்கிறது என்ற நடப்பு நிலைமை கண்கூடாகவே தெரிகிறது கிட்னி கல் பிரச்சினையால் அவதியுறும் மக்கள் கீழ்காணும் உணவுகளை அதிகமாக எடுத்துக் கொள்ளலாம் சிறுநீரகங்களில் கற்கள் உருவாகி அவதியுறும் மக்களுக்கு அந்த கற்களை கரைக்க உதவும் உணவுகள் சிலவற்றை அறிந்து கொள்ளலாம். முறையான மருத்துவ ஆலோசனையுடன் கீழ்காணும் உணவுகளையும் அதிகமாக எடுத்துக் கொண்டால் கிட்னி கல் எளிமையாக குணமாகிவிடும்.

பார்லி தண்ணீர்

பார்லி தண்ணீர் பருகுவதால் சிறுநீரகத்தில் உள்ள நச்சுகள் களையப்பட்டு அவை சிறுநீருடன் சேர்ந்து வெளியேறிவிடுகின்றன. மேலும், சிறுநீரக கற்களின் அடர்த்தியை கரைக்க இது உதவுகிறது. நாளடைவில், கற்கள் கரைந்து சிறுநீர் வழியாக வெளியேறவும் செய்யும்.

எலுமிச்சை சாறு

வீட்டில் எளிதாக செய்து பயன்படுத்தக் கூடிய எலுமிச்சை சாற்றில் உள்ள இயற்கையான சிட்ரேட்கள் சிறுநீரக கற்கள் உருவாகாமல் தடுக்கின்றன. கற்களை உடைக்கும் திறனும் இதில் உள்ளது. இதனால் சிறுநீரக கற்கள் பிரச்சினைக்கு லெமன் ஜூஸ் குடிப்பது நல்லது.

கால்சியம் சத்து நிறைந்த உணவுகள்

கால்சியம் சத்து நிறைந்த உணவுகளை போதுமான அளவுக்கு எடுத்துக் கொண்டால் சிறுநீரக கற்கள் உருவாகாமல் தடுக்கலாம். நாளொன்றுக்கு 1,000 முதல் 1,200 மில்லி கிராம் அளவு கால்சியம், உணவில் சேர்த்துக்கொள்ள வேண்டும்.

குடலில் உள்ள ஆக்ஸலேட் உடன் உணவிலுள்ள கால்சியம் சேர்ந்துவிடுவதால், சிறிதளவு கால்சியம் மட்டுமே சிறுநீரகத்தை சென்றடைகிறது. இதனால் சிறுநீரகத்தில் கற்கள் உருவாகாமல் இருக்க, கால்சியம் நிறைந்த உணவுகள் முதன்மைத் தேர்வாக பரிந்துரைக்கப்படுகின்றன. சிறுநீரகத்தில் கற்கள் ஏற்கெனவே வளர்ந்திருந்தால் அவற்றை மேலும் வளராமல் தடுக்க கால்சியம் உதவி புரிகின்றது. இந்த நிலையில், ஒன்றை கவனத்திற்கொள்வது அவசியம். செயற்கையாக கிடைக்கும் கால்சியம் உணவுகளைவிட இயற்கையான பொருள்களிலிருந்து கிடைக்கும் கால்சியம் உடலுக்கு நல்லது.

இளநீர்

இளநீர் உடலில் நீர்ச்சத்து குறையாமல் பார்த்துக்கொள்ள ஓர் அருமருந்து. அதுமட்டுமல்லாமல், சிறுநீரகப் பாதையிலுள்ள கழிவுகளை நீக்கிவிடுவதால் மினரல்கள் படிவது தடுக்கப்படுகின்றது. இதனால் சிறுநீரகத்தில் கற்கள் உருவாகும் வாய்ப்பும் குறைகிறது.

மாதுளை

மாதுளை பழத்தில் ஆண்ட்டி—ஆக்ஸிடண்ட்ஸ் நிரம்பப் பெற்றுள்ளன. சிறுநீரக ஆரோக்கியத்துக்கு தேவையான ஏராளமான சத்துகளும் இந்த கனியில் உள்ளன. இதிலுள்ள இயற்கை அமிலங்கள், சிறுநீரகத்தில் கற்கள் உருவாக காரணமாக விளங்கும் மினரல்கள் படிவதை குறைக்கின்றன. மேலும், இவை சிறுநீரகப் பாதையில் தேங்கியிருக்கும் நச்சுப் பொருள்களை வெளியேற்றிவிடுவதால் உடல் புத்துணர்ச்சி பெற உதவுகிறது.

சிறுநீரகக் கற்கள் உருவாக காரணங்கள்; எப்படிக் கண்டறிவது; சிறுநீரகக் கற்கள் தடுக்க, தவிர்க்க என்ன செய்ய வேண்டும்




சிறுநீரகக் கற்கள் உருவாக 8 காரணங்கள்;

1. போதுமான அளவு தண்ணீர் அருந்தாமை. குறிப்பாக, கோடைகாலத்தில் உடலில் ஏற்படும் நீர் இழப்பு.
2. உடலில் கால்சியம் அளவு அதிகமாக இருப்பது. உணவு, மாத்திரைகள் மூலம் அதிகப்படியான கால்சியம் எடுத்துக்கொள்வது.
3. உடலில் கால்சியம் அளவுகளைக் கட்டுப்படுத்துவதில் முக்கியப் பங்கு வகிக்கும் பாராதைராய்டு சுரப்பி சரியாக வேலை செய்யாமல் இருப்பது.
4. உடல் உழைப்பே இல்லாமல் இருப்பது. குறிப்பாக, படுத்த படுக்கையாக இருக்கும் நோயாளிகள்.
5. கர்ப்பக் காலங்களில் எடுத்துக்கொள்ளும் அளவுக்கு அதிகமான தாதுஉப்புகள், உடலில் தேங்குதல்.
6. உடல்பருமனாக இருப்பவர்களுக்கு, உடலில் சீரம் மற்றும் ஆக்ஸலேட் அளவுகள் அதிகமாக இருப்பது.

7. சிறுநீரகப் பாதையில் ஏற்படும் அடைப்புகள்.
8. வயதான ஆண்களுக்கு ப்ராஸ்டேட் சுரப்பி வீங்குதல்.

எளிய ரத்தப் பரிசோதனை மூலம் கண்டறியலாம். இதில், வழக்கத்தை விடவும் மிக அதிக அளவில் வெள்ளை அணுக்கள் இருக்கும். கால்சியம், யூரிக் அமிலம் உள்ளிட்டவை எவ்வளவு இருக்கின்றன என்பதைப் பொறுத்து, என்ன கற்கள் என்பதை அறியலாம்.சிறுநீர்ப் பரிசோதனையில் கழிவு எவ்வளவு வெளிவருகின்றன என்பதைக் கண்டறியலாம். அல்ட்ராசவுண்ட் பரிசோதனையின் மூலம் 90 சதவிகிதம் வரை கற்களைக் கண்டறிய முடியும்.சிறுநீரகத்திலும் சிறுநீரகப் பாதையிலும் கற்கள் வரும் என்பதால், சிலருக்கு அல்ட்ராசவுண்ட் பரிசோதனையில் கற்கள் தெரியாது. இவர்களுக்கு, சி.டி ஸ்கேன் மற்றும் எக்ஸ்ரே பரிசோதனை தேவைப்படும்.

சிறுநீரகக் கற்கள் தடுக்க... தவிர்க்க!

எலுமிச்சையில், பொட்டாசியம் சிட்ரேட் நிறைந்துள்ளது. எலுமிச்சையை, தொடர்ந்து ஜூஸ் போன்ற ஏதாவது ஒரு வகையில் பயன்படுத்தி வந்தால், சிறுநீரகக் கற்கள் உருவாகும் வாய்ப்புக் குறையும்.

ரெட் மீட் எனப்படும் ஆடு, மாட்டிறைச்சி சாப்பிடுவதைக் குறைத்துக்கொள்ள வேண்டும்.

சீஸ், பனீர் போன்ற கால்சியம் நிறைந்த உணவுகளைத் தொடர்ந்து அதிக அளவு எடுப்பதைத் தவிர்க்க வேண்டும்.

கேரட், பாகற்காய் போன்றவற்றைச் சாப்பிடுவது, சிறுநீரகக் கற்களைத் தடுக்கும். வாழைத்தண்டு, வாழை மர சாறு அருந்தினால் சிறுநீர் கற்கள் கரைந்து விடும்

உடல் உழைப்பு அல்லது உடற்பயிற்சி செய்து உடல் எடையைக் கட்டுக்குள் வைத்திருக்க வேண்டும்.

தினமும் சராசரியாக இரண்டு லிட்டர் தண்ணீர் குடிக்க வேண்டும். கோடை காலத்தில் மூன்று லிட்டர் வரை தண்ணீர் அருந்த வேண்டும். இதெல்லாம் ஒருபுறம் இருக்கட்டும்! தினசரி தேவையான அளவுக்கு தண்ணீர் பருகுவது ரொம்பவும் முக்கியம். தண்ணீர் குடிப்பதால் சிறுநீர் அதிகம் வெளியேறி கற்கள் உருவாகும் வாய்ப்பும் குறைகிறது. சிறுநீரக கற்கள் பிரச்சினையால் அவதிப்படுவோர் உப்பு குறைவாக எடுத்துக் கொள்வதும் அவசியம்.

பருவநிலை மாற்றம் காரணமாகவே நாள்பட்ட சிறுநீரக நோய்களும், சிறுநீரக செயலிழப்பும் ஏற்படுவதாக மருத்துவத் துறையால் தெரிவிக்கப்பட்டுள்ள நிலையில், அன்றாடம் மேற்கண்ட உணவுகளை எடுத்துக் கொண்டால் சிறுநீரகம் நலம் பேணப்படும்.

# பயணம்



### பயணங்கள் தரும் பாடம்

எதற்கும் அவசரம்; எங்கும் பரபரப்பு; முண்டியடித்துக்கொண்டு முன்னேறும் வேகத்தில் உண்டாகும் நெரிசல். இவைகூடிப் படுத்தும்பாட்டை நினைத்தால் கவலையாக இருக்கிறது. கரோனா காலத்தில் ஊரடங்கு அமலில் இருந்தபோது, இவற்றின் சுவடுகள் ஏதுமின்றி, இயற்கையில் ஒன்றியவர்களாய் வெகுநிதானமாய் இருந்தவர்கள் நாம்தானா என்கிற ஐயப்பாடு எழுகிறது.

'அப்போதைய தேவைக்கு வாங்கிய வாகனங்களே இப்போதைய நெரிசலுக்கும் பரபரப்பிற்கும் முக்கியக் காரணம்' என்கிறார்கள். பயணிகளின் எண்ணிக்கைக்கு நிகராக வாகனங்களின் எண்ணிக்கையும் மிகுந்திருக்கிறது. குறித்தநேரத்தில் இலக்கினை அடைந்துவிட்ட பிறகும்கூட, வந்த வாகனத்தை நிறுத்துதற்கு இடம் தேடுவது சிக்கலாகி விடுகிறது. நிறுத்த இடம் இன்றிக் கட்டிய இல்லங்களின் வாசல்களில் நிற்கும் வாகனங்களில் மோதாமல் தன் வாகனத்தைச் செலுத்திப் பாதையைக் கடக்கத் தெரிந்தவர்கள் பாக்கியவான்கள். தீர்மானம் இல்லாத திடீர்ப் பயணங்கள் தவிர்க்க முடியாதவை; அதற்காகத் தேவையில்லாத விரைவு நிச்சயம் தவிர்க்க வேண்டியது.

திட்டமிட்ட பயணம்தான் என்றாலும் முன்கூட்டிக் கிளம்பாமல், கடைசிநேரம் வரை பொறுத்திருந்து பரபரத்துக் கிளம்புபவர்களால்தான் பயண நெருக்கடிகள் மிகுதி. சில மணித்துளிகளில் இழக்கும் நிதானம் பலகால இயல்பு வாழ்வைப் பாதிக்கும் என்பது தெரிந்தும் முந்தி விரைவது நவீன மூடத்தனம்.

இருசக்கர வாகனங்களில் செல்பவர்கள் திடீரென்று வேகத்தைக் கூட்டுவதும், படக்கென்று பிரேக் அடித்து நிறுத்துவதும், பரபரத்து முன்னேறுவதும் பின்வரும் பெருவாகனங்களை நிலைதடுமாறச் செய்வதோடு விபத்துகளையும் உண்டாக்குகின்றன. சில மணித்துளிகளில் முந்திச் செல்ல விரைந்து மோதிப் பிறகு, பல மணிநேரம் சண்டையிடுகிற மனிதர்களை எதில் சேர்ப்பது? சாலை, சகலருக்கும் பொது; பாதுகாப்பான பயணம் அதைவிடவும் பொது அல்லவா?

இப்போதெல்லாம் நெரிசலுக்குத் தயங்கி நிற்பவர்களை அதிகமாய்க் காணோம். அடுத்தடுத்துப் பேருந்துகள் வரிசையில் நின்றாலும் முன்பாகச் செல்லும் பேருந்து எதுவென்று தெரிந்து முண்டியடித்துக் கொண்டு அதில் ஏறுவோர் பலர்.

'முன்னால எந்த வண்டி போகும்?' எனக் கேட்போர்க்கு, 'எல்லா வண்டியும் முன்னாலதான் போகும்' என்று பதில் சொல்லுகிற ஓட்டுநரின் குரலில் மெல்லிய நகைச்சுவை இழையோடி, அவரது இயந்திரத்தன்மையைப் போக்கும். எரிச்சலை வெளிக்காட்ட முடியாமல், சிரித்தபடி பேருந்து கிளம்பும் நேரத்தைக் கேட்பவர்களின் முகம் பரிதாபமாய்த் தெரியும். அவர்களுக்கு என்ன அவசரமோ?

முன் கிளம்பும் வண்டியில் ஏறி, நின்று பயணிப்பவர்களுக்கு, பின் கிளம்பிய பேருந்து அடுத்த சில நிறுத்தங்களில் முன் வந்து முந்திச் சென்றுவிட்டால், ஏற்படும் தவிப்பு சொல்லிமாளாது; 'அதிலேயே ஏறி இருக்கலாமோ?'






# தரும் பாடம்

கிருங்கை சேதுபதி

என்கிற பரபரப்பு; பதற்றம். மாட்டுவண்டியோடு ஓ(ட்)டும் பேருந்தினை ஒப்பிட்டு, ஓட்டுநர் குறித்துப் பேசும் பேச்சுகள் நிதானம் இழந்தமையின் வெளிப்பாடுகள். காற்றுப் புகக்கூட இடமில்லா நெரிசலின் உள்புகுந்து பயணச் சீட்டுக் கொடுத்துச் சில்லறையும் தந்து மீளும் நடத்துநருக்கு இருக்கும் பொறுமை எல்லாருக்கும் வரவேண்டும் என்று பிரார்த்திக்கத் தோன்றும்.

தான் ஏறக் காத்திருக்கும் நிறுத்தத்தில் மட்டும் பேருந்து தவறாமல் நிற்கவேண்டும் என்று நினைக்கிற நியாய மனம், ஏனைய நிறுத்தங்களில் நிற்பதை ஏற்க மறுப்பது என்ன நியாயமோ? ஓட்டுநரோ, நடத்துநரோ, அந்த ஒருவர் எல்லாருக்காகவும் உழைத்துக் கொண்டிருக்கிறபோது, அந்த ஒருவருக்காக — பயணிக்கும் ஒவ்வொருவருமான எல்லாரும் ஏன் ஒத்துழைக்கக் கூடாது என்கிற நிதான நியாயம் நெருக்கடியான நேரங்களில் வந்துவிட்டால், பல வாக்குவாதங்களும் மோதல்களும் காணாது போய்விடும்.





'இடைநில்லாப் பேருந்தில்' ஏறி அமர்ந்து பயணித்தாலும், குறுக்கிடுகிற ரயில்வழிப் பாதையின் கதவு திறக்கும் வரைக்கும் நிற்கிற வரிசை கண்டு நிதானம் இழக்காமல் பழகிக்கொள்வது நல்லது. அப்போது, அந்த ரயிலும் தாமதமாகத்தான் போய்க் கொண்டிருக்கிறது என்று எண்ணிச் சமாதானம் அடையலாம்.

அந்தச் சிறு ஓய்வு, 'பெரிய வண்டிக்குச் சிறிய வாகனங்கள் வழிவிட்டுக்கொடுப்பதுபோல, பெரிய மனிதர்களுக்கு வயதில் சிறியவர்கள் விலகி வழிவிட்டு உதவிடச் சொல்லி, மறைமுகமான உபதேசம் செய்யும்.

நடந்து வந்தால், ஐந்து நிமிடங்களில் கடக்கும் தூரத்தில் நம் பயண இலக்கு முடிவதாய் இருக்கும்; இருந்தாலும், நமைத் தாங்கிவந்த வாகனம் கடக்க முடியாமல், நெடுநேரம் நிற்கும்போது நடப்பவர்களைப் பார்த்தால் பொறாமையாய் இருக்கும். 'எளிமையே இன்பம்' என்பது அந்தநேரத்தில் கிடைக்கும் உபதேசம்.

கடல்ஓடா கால்வல் நெடுந்தேர் கடல்ஓடும்

நாவாயும் ஓடா நிலத்து (கு—496) என்பதெல்லாம் திருவள்ளுவர் காலத்தில்தான். இப்போது படகும் லாரியில் பயணம் ஆகிறது; கப்பலில் காரும் பயணமாகிறது; விமானப் பாகங்கள் இரண்டிலும். பல நேரங்களில் மனிதர்களைவிடவும் மனிதர்களுக்கு உதவும் பொருள்களுக்குத்தான் பயணங்கள் இன்றியமையாதனவாக இருக்கின்றன. பொருள்களுக்குத் தரப்பெறும் காப்பினை, உயிர்களுக்கும் தரவேண்டியது அவசியம் அல்லவா?




நெடுந்தூரப் பயணங்களுக்கு உதவிடும் ரயில் வண்டியின் முன்பதிவில்லாப் பெட்டிகளில் பிதுங்கி வழியும் பெருங்கூட்டத்திற்கு நடுவே, வெகுநிதானமாய்ச் சிற்றுண்டி விற்றுவரும் நபர்களின் பேருதவி மெச்சத் தகுந்தது. அந்தந்த நேரத்து அவசரத்திற்கு ஏற்ப நடக்கும் மனித உரசல்களால் பிறக்கும் தர்க்க நியாயங்கள் அற்புதமானவை. அப்போதைய உரையாடல்களும், உதவிகளும் சுவைமிகுந்த நாடகக் கூறுகள். பொறுமை இழக்காமல், நிதானமாக அவற்றை அவதானிக்கப் பழகிவிட்டால், மனித மகத்துவத்தைப் புரிந்துகொள்ள முடியும்.


இப்போதெல்லாம் தாமதமாய் வந்து தவிப்பவர்களைக் காட்டிலும் முந்தியே வந்து முணுமுணுப்பவர்கள் அதிகமாய்விட்டார்கள்; காத்திருக்கும் பொறுமையைக் கைவிட்டுவிட்டவர்களுக்கெல்லாம் கைப்பேசிதான் மிகவும் கைகொடுக்கிறது. பதற்றத்தில் அதையும் தவறவிட்டுப் பரிதவிப்பவர்கள் பாடு பெரும்பாடு. கையில் இருந்தும் உரிய சார்ஜ் இல்லாமல் அணைந்து விடும் கருவிகள் ‘ஆபத்துக்கு உதவாப் பிள்ளை, அரும்பசிக்கு உதவா அன்னம்’ ஒத்தவை. அப்போது சொந்த எண்களே மறந்துபோய் நொந்துகொள்ளும் நிலை வாய்க்கும்; கருவிகளை மட்டுமே நம்பி நம் புலன்களைப் பயன்கொள்ள மறந்த பேதைமை புரிபடும்.


குழந்தைகளுக்குக்கூட, பயணக் குதூகலிப்பை வரவிடாமல் பார்த்துக்கொள்கின்றன கைப்பேசிகள். இன்னமும் பயணப் பொழுதுகளில் படிப்பவர்களைப் பார்த்தால் வியப்பாக இருக்கிறது. கடின வேகத்திலும் அவர்களின் கவனம், தவத்தை ஒத்தமைகிறது.

இருக்கைகள் காலியாக உள்ள பேருந்து வரும்வரை நிறுத்தத்தில் காத்து நிற்பதைவிட, கிடைக்கும் பேருந்தில் ஏறி நின்று கொண்டு பயணித்தால் சீக்கிரம் சேரிடம் செல்லலாம் என்று தீர்மானிப்பவர்கள் புத்திசாலிகள்; அவர்களுள் நெரிசலுடன் முந்திவரும் பேருந்தில் விரைந்து ஏறுபவர்களை வேடிக்கை பார்த்து நிற்பவர்களைப் பார்த்துச் சிரிப்பவர்களும் இருக்கிறார்கள். அடுத்துவரும் வாகனம், காத்திருந்து பின் ஏறியவர்களுக்கு உரிய இருக்கைகளைத் தந்து முந்திச் செல்வதைப் பார்க்கிறபோது,

‘அடக்கம் உடையார் அறிவிலர் என்று எண்ணிக் கடக்கக் கருதவும் வேண்டா’ என்று பாடிய ஔவையார், அதற்கு ‘மடைத்தலையில், ஓடுமீன் ஓட உறுமீன் வருமளவும் வாடி இருக்கும் கொக்கினை’ச் சான்றாகக் காட்டியதை நினைவுபடுத்துகிறது. நிதானமாக வாகனம் ஓட்டி வருபவரைக் கேலி பேசி, ‘ஓவர் டேக்’ செய்துபோனவர்கள், ரயில் பாதையில், சுங்கச் சாவடியில் வரிசையில் நிற்பதைப் பார்க்க இந்நினைவே எழுகிறது.

எப்போதும் இருக்கிற அதே 24 மணிநேரம்தான் இப்போதும். ஆனாலும், அவசரமாக விடிந்து அவசரமாகப் பொழுது முடிந்துபோய்விடுவதுபோல் ஓர் அதிருப்தி. தாமதம் தவிர்க்க வேண்டிய







ஒன்றுதான். அதற்காகப் பொறுமையைக் காவுகொடுப்பது நியாயமா?

வாழ்க்கையே ஒரு பயணம்தான். ஆனால், வாழ்நாள் எல்லாம் பயணத்திலேயே கழிந்துபோய்விடும் என்கிற அளவிற்குப் பயணங்கள் நம்மை இயக்கிக் கொண்டிருக்கின்றன. இருக்கும் இடத்தில் இருந்து பணிபுரியும் இடத்திற்குப் பயணம் செய்வதற்கென்றே நம் பணிநேரத்தைச் செலவழிக்க வேண்டிய கட்டாயத்தில் இருக்கிறோம். கடிகாரத்திற்கு இருக்கிற நிதானம்கூட, அதனைக் கட்டியிருப்பவர்களுக்கு இருப்பதில்லை. பத்து மணித்துளிகள் நிதானிக்கத் தவறிய வேகம், பற்பல சோகங்களுக்கு வித்திட்டுவிடுவதோடு, பலரது நேரத்தையும் வீணடித்துவிடுகிற அவலத்தை நினைத்துப் பார்க்கவும் நேரமில்லை.

இத்தனை பரபரப்பு எதற்கு? ஒரு சாண் வயிற்றுக்குத்தானே. அதைக் கூடப் பொறுமையாய் இருந்து உண்ண முடியாத ஓட்டம். துரித உணவகங்களில் கூட, உட்கார்ந்து சாப்பிடப் பொறுமை இல்லாமல் நின்றபடி விழுங்கி விரைகிற வேகத்தைப் பார்த்தால் நாம் எங்கே செல்கிறோம் என்றே தெரியவில்லை. உடல்நலம் கருதி மருத்துவர் சொன்னபடி, நடைப்பயணம் மேற்கொள்வதில்கூட, ஒரு பரபரப்பு. அப்போதும்கூட, காதுகளில் கைப்பேசி இணைப்புகளை வைத்துக் கொண்டு பேசியவாறோ, கேட்டவாறோ நடக்கிறவர்கள்தான் அதிகம். தூக்கத்தில்கூட இவ்விணைப்புகள் இல்லாமல் இருப்பவர்கள் குறைவுதான்.

‘எப்படியோ வண்டி ஓடுது; அதில் நாமும் ஓடுறோம்’ என்கிற சராசரி மனிதர்களின் தயவில்தான் ஓரளவிற்கு நிதானம் நடைபோடுகிறது. உடலோடு சேர்ந்து உயிரும் உணர்வும் ஒன்றிப் பயணிக்கும் வாழ்க்கைப் பயணத்தில் எத்தனையோ வழியிடைப் பயணங்கள். அவை நடத்தும் பாடங்களும் எத்தனையோ? அவற்றுள்ளே, ‘பயணம் முக்கியம். அதைவிடவும் பாதுகாப்பு மிக முக்கியம்’ என்பதே நாம் கடைப்பிடிக்க வேண்டிய கட்டாயப் பாடம்.



# தமிழ்

நற்றமிழரின் நாடித்துடிப்பு

2025

## JANUARY




## FEBRUARY





## MARCH




## APRIL




## MAY




## JUNE




## JULY




## AUGUST

| | M | T | W | T | F | S |
|---|---|---|---|---|---|---|
| | | | | 1 | 2 | 3 |
| 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 |
| 11 | 12 | 13 | 14 | 15 | 16 | 17 |
| 18 | 19 | 20 | 21 | 22 | 23 | 24 |
| 25 | 26 | 27 | 28 | 29 | 30 | 31 |

## SEPTEMBER

| S | M | T | W | T | F | S |
|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 |
| 8 | 9 | 10 | 11 | 12 | 13 | 14 |
| 15 | 16 | 17 | 18 | 19 | 20 | 21 |
| 22 | 23 | 24 | 25 | 26 | 27 | 28 |
| 29 | 30 | | | | | |

## OCTOBER

| S | M | T | W | T | F | S |
|---|---|---|---|---|---|---|
| | | 1 | 2 | 3 | 4 | 5 |
| 6 | 7 | 8 | 9 | 10 | 11 | 12 |
| 13 | 14 | 15 | 16 | 17 | 18 | 19 |
| 20 | 21 | 22 | 23 | 24 | 25 | 26 |
| 27 | 28 | 29 | 30 | 31 | | |

## NOVEMBER

| S | M | T | W | T | F | S |
|---|---|---|---|---|---|---|
| | | | | | 1 | 2 |
| 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 |
| 10 | 11 | 12 | 13 | 14 | 15 | 16 |
| 17 | 18 | 19 | 20 | 21 | 22 | 23 |
| 24 | 25 | 26 | 27 | 28 | 29 | 30 |


## DECEMBER

| S | M | T | W | T | F | S |
|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 |
| 8 | 9 | 10 | 11 | 12 | 13 | 14 |
| 15 | 16 | 17 | 18 | 19 | 20 | 21 |
| 22 | 23 | 24 | 25 | 26 | 27 | 28 |
| 29 | 30 | 31 | | | | |

அய் தமிழ் முகநூல்:
http://www.facebook.com/pages/Ithamil-Magazine
www.ithamil.com




Email:
editor@ithamil.com



VARSHA™
IDLI/DOSA BATTER
Let's eat the Best!
VARSHA
Ready to Cook
Idli / Dosa Wet Mix
CRISPY DOSA * SOFT & FLUFFY IDLI
1Kg
100% Pure Vegetarian
Traditional taste that Lingers